படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 தை 22 வியாழக்கிழமை (04.02.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 070


## மோசடி எதுவும் இடம்பெறவில்லை

# தேர்தலும் வாக்கு எண்ணுதலும் நீதியாகவே இடம்பெற்றன என்கிறார் தேர்தல் ஆணையாளர்

### தாம் தடுத்து வைக்கப்பட்டார் என்பது வதந்தியாம்



கொழும்பு, பெப்ரவரி 04

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் வாக்குகள் எண்ணும் பணிகள் எது வித மோசடிகளுமின்றி நீதியாகவும் நேர்மையாகவுமே இடம்பெற்றன என்றும், வாக்குகள் எண்ணப்பட்ட போது, தான் துப்பாக்கி முனையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்று கூறப்பட்டமை வெறும் வதந்தியே என்றும் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க நேற்றுத் தெளிவுபடுத்தினார்.

அதேவேளை, உயர்நீதிமன்றம் உத்தரவிட்டால் வாக்குகளை மீள எண்ணுவதற்குத் தேர்தல்கள் செயலகம் தயாராக உள்ளது என்றும் அவர் சொன்னார்.

தேர்தல்கள் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் ஊழல், மோசடிமிக்கதாக அமைந்திருந்தது என்று சில தரப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன. இதை என்னால் முற்றாக ஏற்றுக்கொள்ள முடியாது.

தேர்தல் பிரசாரக் காலப் பகுதியில் (24ஆம் பக்கம் பார்க்க)

## 94 அகதிகளுக்கு ஆஸி. விஸா அனுமதி

கொழும்பு, பெப். 04

ஆஸ்திரேலியாவில் கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை அகதிகள் உட்பட 94 பேருக்கு ஆஸ்திரேலிய அரசு நிரந்தர விஸா அனுமதியை வழங்கியுள்ளது.

இதனையடுத்து இந்த 94 பேரும் நேற்று ஆஸ்திரேலிய பிரதான நகரங்களில் குடியேறுவதற்காக (24ஆம் பக்கம் பார்க்க)

## செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்!

செங்கல்பட்டு, பெப்.04

தமிழ்நாடு, செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்கள் மீது நேற்று முன்தினம் இரவு சிறப்பு அதிரடிப் பொலிஸார் கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தியுள்ளனர் எனக் தெரிவிக்கப்படுகிறது. இக் கொடூரத் தாக்குதலினால் மூன்று முகாம் வாசிகள் உயிருக்குப் போராடும் நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

அத்துடன், பன்னிரண்டு பேருக்கு மேற்பட்டோர் சென்னை புழல் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். முகாமில் மீதமுள்ள 16 பேருக்குத் தண்ணீர் கொடுக்கக் கூட ஆள் இல்லை என்றும் கூறப்பட்டது.

கடவுச்சீட்டுச் சிக்கல்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் தொடர்பாளர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 33 ஈழத் தமிழர்கள் செங்கல்பட்டு சிறப்பு முகாமிலும், பூவிருந்தவல்லி சிறப்பு முகாமிலும் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் உள்ள (24ஆம் பக்கம் பார்க்க)

## 'சக்தி' ரங்காவின் பாதுகாவலர் மீது ஹற்றனில் வைத்து நேற்றுத் தாக்குதல்!

கொழும்பு, பெப். 04

சக்தி ரி.வி. 'மின்னல்' நிகழ்ச்சியின் தொகுப்பாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஸ்ரீரங்காவின் பாதுகாவலர் தாக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மலையக மக்களின் சம்பள உயர்வு மற்றும் மேலதிகக் கொடுப்பனவுகள் தொடர்பாக நேற்று ஹற்றனில் இடம் பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொள்வதற்காக ஸ்ரீரங்கா அங்கு சென்றிருந்தபோதே அவரது பாதுகாவலர் தாக்கப்பட்டிருக்கிறார்.

இக்கலந்துரையாடல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஹற்றன் நகரசபையின் தலைவர் நந்தகுமாரும் அவரது சகாக்களும் அங்கு (24ஆம் பக்கம் பார்க்க)

## 'உதயன்', 'சுடர் ஒளி' ஆசிரியருக்கு கிஷோர் எம்.பி. கொலை மிரட்டல்!

கொழும்பு, பெப். 04

'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகளின் ஆசிரியருக்குத் தொலைபேசி மூலம் கொலை அச்சுறுத்தல் விடுத்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர். இச்சம்பவம் நேற்று மாலை 5.15 மணியளவில் இடம்பெற்றது.

முன்னதாக நேற்றுக்காலை 11 மணியளவில் (24ஆம் பக்கம் பார்க்க)

## 62 ஆவது சுதந்திர தின நிகழ்வு இன்று கண்டி நகரில்

கொழும்பு,பெப்.04

இலங்கை தனது 62ஆவது சுதந்திர தினத்தை இன்று கொண்டாடுகின்றது.

உள்நாட்டுப் போர் முடிவிற்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் இடம்பெறும் முதலாவது சுதந்திரதின நிகழ்வு இதுவென்பது முக்கியமானது.

சுதந்திரதினத்தின் பிரதான நிகழ்வுகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கண்டி தலதாமாளிகையில் இன்று நடைபெறுகின்றன.

காலை 8.50 இற்கு ஜனாதிபதி தேசியக் கொடியை ஏற்றுவார். இதன் பின்னர் தேசிய கீதம் இசைத்தல், யுத்தத்தில் உயிரிழந்த படையினருக்காக (24ஆம் பக்கம் பார்க்க)

# சமத்துவமான உரிமைகளை எல்லோரும் பெறக்கூடிய ஐக்கிய இலங்கையைக் கட்டி எழுப்புவோம்

### சுதந்திர தினச் செய்தியில் ஜனாதிபதி அழைப்பு



கொழும்பு, பெப்.04

ஐக்கிய இலங்கை ஒன்றைக் கட்டி எழுப்புவதற்குத் தங்களை அர்ப்பணிக்கும்படி தேச மக்களுக்குத் தமது சுதந்திர தினச் செய்தியில் அழைப்பு விடுத்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இன்றைய சுதந்திர தினத்தையொட்டி நாட்டு மக்களுக்கு அவர் விடுத்துள்ள செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பவை வருமாறு:-

இன்று கொண்டாடப்படுவது இலங்கையின் 62 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம். கடந்த வருடம் நாட்டை விட்டுப் பயங்கரவாதம் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் இடம்பெறும் முதலாவது கொண்டாட்டம் என்ற வகையிலும், எமது மக்கள் ஜனநாயகத்திற்கான தங்களது அர்ப்பணத்தை மிக உறுதியாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்தியிருக்கும் ஒரு சூழ்நிலையில் நடைபெறும் ஒரு கொண்டாட்டம் என்ற வகையிலும் இது மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.

(23ஆம் பக்கம் பார்க்க)

கல்விச் சுடர்
நிலை
தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்படுத்தும் வினாத்தாள்

# துரதிர்ஷ்டமான யுகத்தை முடிவுக்கு கொண்டுவந்து ஜனநாயகத்தையும் சமூக நீதியையும் நிலை நாட்டுவோம்

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில் அறைகூவல்

கொழும்பு, பெப். 04

ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டுள்ள ஒரு காலகட்டத்துக்குள் நாடு தள்ளப்பட்டுள்ளது என்று விசனம் தெரிவித்திருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

இன்றைய சுதந்திர தினத்தை ஒட்டித் தாம் வெளியிட்டுள்ள செய்தியிலேயே அவர் இப்படிக் குறைபட்டுக்கொண்டுள்ளார்.

அந்தச் செய்தியில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இப்புமியில் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதே எம் அனைவரதும் பிரார்த்தனையாகும். மனித வரலாற்றிலே தனது சுதந்திரத்தையும், ஏனையவர்களின் சுதந்திரத்தையும் கருத்திற்கொண்டு செயற்பட்டதனால் இன்று உலகில் பல்வேறு ஜனநாயக வழிமுறைகள் தோற்றம் பெற்றுள்ளன.



(23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் பிறந்த நாள் நினைவலைகளும்

மண்ணில் 04 ★ 02 ★ 1944



விண்ணில் 05 ★ 01 ★ 2010

## அமரர் கனகசபை சண்முகலிங்கம்

அன்னையை இழந்து கண்கள் சிந்திய
கண்ணீரைத் துடைத்த அன்புக் கரங்களும்
அவனியிலிருந்து அகன்றிட்டுதா? - அப்பா
கனக்கின்றது நெஞ்சம் - காவல் யாரெமக்கு?

கச்சாய் வீதி,
சாவகச்சேரி. (C/564613)

அன்புடன்
குடும்பத்தினர்.


## பூபதி காட்சியறையில்



05Kg - 8000.00
15Kg - 12000.00
15Kg - 21000.00
15Kg - 33000.00

வாடிக்கையாளர் கவனத்திற்கு:
★ அரசாங்கத்தினால் நிறை நிர்ணயம் செய்யப்பட்டது.
★ கைத்தொழிலுக்குத் தேவையான அனைத்து உபகரணங்களும்.

தொடர்பு: 0777427777



## வாடகைக்கு வீடு தேவை

5 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு தேவை. யாழ்., நல்லூர், கொக்குவில், கல்வியங்காடு போன்ற இடங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0772292454, 0770785579


## தவறிவிட்டது

காஞ்சிபுரம், மாதகல் என்னும் முகவரியுடைய மகேந்திரன் தனுஸ்கரன் என்பவரின் தே.அ.அட்டை (911451603V), மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம் என்பன 20.01.2010 யாழ். - கொழும்பு பயணத்தின் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## தில்லையம்பலம் திருச்செல்வம்

அன்பான துணைவனே அன்போடும்
பாசத்தோடும் எமைக்காத்த தேவனே
எம்மினிய எம் அருமை அப்பாவே
பாதியிலே எமை பரிதவிக்கவிட்டு
சென்றதேனோ எம் உயிர்த் தந்தையே
என்றும் எம் நெஞ்சம் மாறாத அப்பாவே
உங்கள் நினைவில் என்றும் நாம்...

பிறப்பு : 15.05.1964
இறப்பு : 04.02.2009

புதிய செம்மணி வீதி,
ஞானவைரவர் கோயிலடி,
கல்வியங்காடு.

மனைவி,
பிள்ளைகள்.

(94599)

# வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை வெளிவாரிப் பரீட்சைகள் - 2008

1. இசைமாணி/நடனமாணி முதலாம் வருடம்
2. இசைமாணி/நடனமாணி இரண்டாம் வருடம்
3. இசைமாணி/நடனமாணி மூன்றாம் வருடம்
4. இசைமாணி/நடனமாணி நான்காம் வருடம்

மேற்படி இசைமாணி மற்றும் நடனமாணி பரீட்சைகளை 22.02.2010 திங்கட்கிழமை தொடக்கம் 04.03.2010 புதன்கிழமை வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள வெளிவாரிப் பரீட்சைப் பிரிவு மண்டபத்தில் பின்வரும் ஒழுங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| இசைமாணி/நடனமாணி முதலாம் வருடம்<br>இசைமாணி/நடனமாணி மூன்றாம் வருடம் | 22.02.2010 - 25.02.2010 |
| இசைமாணி/நடனமாணி இரண்டாம் வருடம்<br>இசைமாணி/நடனமாணி நான்காம் வருடம் | 01.03.2010 - 04.03.2010 |

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் 15.02.2010 (திங்கட்கிழமை) தொடக்கம் வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

செய்முறைப் பரீட்சை (சங்கீதம்/நடனம்) - 2008

1. இசைமாணி/நடனமாணி 1ஆம், 2ஆம், 3ஆம் மற்றும் 4ஆம் வருடத் தேர்வு - 2008
2. கலை முதற்தேர்வு - (2007 & 2008)
3. பொதுக் கலை மாணித் தேர்வு பகுதி - I - (2007)
4. பொதுக் கலை மாணித் தேர்வு பகுதி - II - (2006 & 2007)

மேற்படி கற்கை நெறிகளில் சங்கீத அலகுக்கான செய்முறைப் பரீட்சைகளை 05.03.2010 (வெள்ளிக்கிழமை) தொடக்கமும், நடன அலகுக்கான செய்முறைப் பரீட்சைகளை 08.03.2010 (திங்கட்கிழமை) தொடக்கமும் இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் தங்களுடைய பரீட்சைக்கான அனுமதி அட்டையுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன், செய்முறைப் பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு: செய்முறைப் பரீட்சை முடிவடைந்ததும், பரீட்சார்த்திகள் தங்கள் பரீட்சை அனுமதி அட்டைகளை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் தவறாது ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விவரங்களுக்கு 021 2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்.
04.02.2010 (சி/564612)

# பாடசாலைகளின் நூலகங்களிற்கு புத்தகங்கள்

யாழ்ப்பாணம், பெப்.04

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் நூலகங்களுக்கான புத்தகங்கள் வலயக்கல்வி அலுவலகத்திற்கு வந்துள்ளன.

இவை எதிர்வரும் 8ஆம் திகதி சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகத்தின் ஊடாக பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-207)

# மீள்குடியமர்வு நிதியை பெற்றுக் கொள்ளாதோருக்கு

நவாலி, பெப்.4

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து மீள் குடியேறியவர்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தினால் வழங்கப்படும் 20 ஆயிரம் ரூபா பணத்தை இதுவரை பெற் றுக்கொள்ளாதவர்கள் நாளை வெள்ளிக்கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் வந்து இதனைப் பெற்றுக் கெள்ளலாம்.

சம்பந்தப்பட்டவர்கள் தம்மை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் அன்றைய தினம் காலை 9 மணிக்கு தவறாது சமுகமளிக்க வேண்டும் என்று பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ. கேட்டுள்ளார்.

(50-100)

# கணனிப் பயிற்சிக்கு நேர்முகத்தேர்வு

யாழ்ப்பாணம், பெப். 4

''கியூடெக் - கரித்தாஸ்'' நிறுவனத்தினரால் நடத்தப்படவுள்ள கணனி வன்பொருள் பயிற்சிநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தோர் கல்வித் தகைமைச் சான்றிதழ்களுடன் வருகை தருமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

(ஒ-207)

# மரண அறிவித்தல்கள்

## கார்த்திகேசு சிவபாலன்

(சமாதான நீதிவான், தலைவர், வலி.கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி தெற்கு விவசாயிகள் சம்மேளனம், செயலாளர், நீர்வேலி கந்தசாமி கோவில் பரிபாலன சபை, கௌரவ உறுப்பினர் - மத்தியஸ்தர் சபை, வலி.கிழக்கு)



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சிவபாலன் நேற்று (03.02.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும், கவிமித்திரன் (கனடா), அகிலன் (கனடா), நகுணா (கனடா), பிரகலா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரந்தன் வீதி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (94595)

தகவல்,
குடும்பத்தினர்.

## வல்லிபுரம் செல்லப்பா (சின்னவேலு - ஆசாரியார்)



சந்திரபுரம், மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் செல்லப்பா (02.02.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-பாக்கியம் தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத் துரை - சின்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், செல்வபாக்கியத்தின் அன்புக் கணவரும், கந்தையா, மகாலிங்கம் (சமாதான நீதிவான்) ஆகியோரின் சகோதரரும், சந்திரகுமார் (நோர்வே), குணசீலன், சுமதி, அசோக்குமார், தமயந்தி ஆகி யோரின் அன்புத் தந்தையும், வசந்தகுமாரி (நோர்வே), உமாசாந்தினி, கௌரீசன், துஸ்யந்தி (கனடா), ஸ்ரீசெல்வரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், வினுஜா, விக்னன், விதுஜன் (நோர்வே), அருண்ராஜ், திவ்வியன், ஆதீசன், வைஷ்ணவி, தமிழ்நிலா, குருபரன், சுவாதிகா, கஜீனா, சபரீசன் (கனடா), சரன் (கனடா), சஞ்சயன், அபிராமி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2010) வியாழக்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சவுக்கடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்திரபுரம்,
மட்டுவில் வடக்கு,
மட்டுவில். (94593)

தகவல்,
குடும்பத்தினர்.


# COMPUTER EXPRESS

Head Office : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 0212228250

கணக்கியல்துறை ஆர்வலர்களிற்காக!
முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன்!
கம்பனிக்கணக்குகளுடன், VAT இனையும் உள்ளடக்கி

## Diploma in Computerized Accounting

கொழும்பில் இருந்து வருகை தந்திருக்கும் நன்கு அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர் திரு. k.வரதன் என்பவரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

உங்கள் நிறுவன கணக்குகளை நீங்களே கணனிமயப்படுத்தும்படியான 100% செய்முறைப்பயிற்சியுடன்..

சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள கணக்கியல் மென்பொருட்களான

Quick Book + ACCPAC + MYOB

ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்

Tally புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.

| 06/02/2010 | | 07/02/2010 | |
|---|---|---|---|
| Batch:- I | 10.00-12.00 | Batch:- I | 10.00-12.00 |
| Batch:- II | 02.00-04.00 | Batch:- II | 02.00-04.00 |
| Batch:- III | 05.00-07.00 | Batch:- III | 05.00-07.00 |

February 05 க்கு முன்பு பதிவுகளை மேற்கொள்ளவும்


# மரண அறிவித்தல்



## முருகேசு கோவலன் (கோபி)

நவோதயா வீதி, ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் சவூதி அரேபியாவை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கோவலன் (கோபி) 25.11.2009 அன்று அகாலமரணமானார்.

அன்னார் முருகேசு - சிவசோதி தம்பதியினரின் ஏக புதல்வனும் கௌரி, கவிதா, வினோதினி, ரூபநிதி ஆகியோரின் அருமைச் சகோதரனும் ரவீந்திரன் (சவூதி அரேபியா), அருந்தவராஜா, புவனேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அன்சிகா, பென்சிலா, மிறோஜா, சினோஜா ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2010) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவோதயா வீதி,
ஆவரங்கால், புத்தூர். (94597)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சந்திரிகாவுக்கு இழைக்கப்பட்ட அநீதி

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் நவம்பர் 19 ஆம் திகதி தமது இரண்டாவது பதவிக் காலத்தை ஆரம்பிக்கலாம் என்று உயர் நீதிமன்றம் அவருக்கு ஆலோசனை கூறிவிட்டது.

தற்போதைய பிரதம நீதியரசர் அசோகா என்.சில்வா தலைமையிலான ஏழு நீதியரசர்களைக் கொண்ட ஆயம் இந்த விவகாரத்தை விசாரித்து இத்தகைய ஆலோசனையை வழங்கியிருக்கின்றது.

ஆட்சியில் இருக்கும் ஜனாதிபதி ஒருவர், தமது முதலாவது பதவிக் காலத்தின் நான்கு ஆண்டுகள் பூர்த்தியான நிலையில் - ஆறு ஆண்டுகள் முடிவடைவதற்குள் - முற்கூட்டியே அடுத்த பதவிக் காலத்துக்கான தேர்தலை நடத்தி, வெற்றியீட்டிய நிகழ்வுகள் கடந்த 31 ஆண்டு காலத்துக்குள் மூன்று தடவைகள் நடந்தேறிவிட்டன.

1978ஆம் ஆண்டின் அரசமைப்புக்குக் கீழ் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நடைமுறைக்கு வந்த பின்னர் இவ்வாறு தமது இரண்டாவது பதவிக் காலத்துக்கான தேர்தலை முற்கூட்டியேநடத்தி, அதில் மூன்று ஜனாதிபதிகள் வெற்றியீட்டியிருக்கின்றார்கள். ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரே அம் மூவருமாவர்.

இப்படி அவர்கள் இரண்டாவது தேர்தல்களில் வென்றபோதும், அவர்களுடைய இரண்டாவது பதவிக்காலம் எப்போது ஆரம்பிப்பது என்பது தொடர்பில் அந்தந்த வேளைகளில் சர்ச்சை ஏற்பட்டமை மறுக்கவோ, மறைக்கவோ கூடியதல்ல.ஆனால் அத்தகைய சமயங்களில் இலங்கையின் நீதித்துறை எப்படி முரண்பட்டுச் செயற்பட்டிருக்கின்றது என்பதுதான் இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

இப்படித் தமது இரண்டாவது பதவிக் காலத்துக்காகத் தேர்தலை முற்கூட்டியே நடத்தி வெற்றிபெறும் ஜனாதிபதி ஒருவரின் இரண்டாவது பதவிக் காலம் எப்போது ஆரம்பமாகின்றது என்பதை அரசமைப்பின் 3 ஆவது திருத்தம் தெளிவாக வரையறுத்துக் கூறுகின்றது.

அதன்படி, அந்த ஜனாதிபதியின் முதலாவது பதவிக் காலம் எப்போது தொடங்கியதோ, அதற்கு நேரொத்த திகதி (Corresponds to the date), புதிய (இரண்டாவது) தேர்தலின் பின்னர் எப்போது வருகின்றதோ அதனையே அடுத்த பதவிக் காலத்துக்கான ஆரம்பமாகக் கருத வேண்டும். அப்படித்தான் அந்த அரசமைப்புத் திருத்தம் வெளிப்படையாகத் தெரிவிக்கின்றது; தெளிவுபடுத்துகின்றது.

அதுதான் ஜனாதிபதி ஜெயவர்த்தனா விடயத்தில் கைக்கொள்ளப்பட்டது. அதுவே, இப்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் உயர்நீதிமன்றின் ஆலோசனையாகவும் வழங்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடயத்தில் மட்டும் இந்த நடைமுறை மதிக்கப்படவில்லை. அவரது ஓராண்டு ஆட்சிக் காலம் அநீதியான முறையில் பறிக்கப்பட்டிருப்பது போல விடயங்கள் நடந்தேறியிருக்கின்றன. அதுதான் இங்கு கவனிக்கத்தக்கது. அதை சற்று விலாவாரியாகப் பார்ப்போம்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் முதலாவது பதவிக்காலம் 04.02.1978இல் ஆரம்பமானது. அதன்படி 04.02.1984 வரை அவர் முதலாவது பதவிக் காலத்தைத் தொடர்ந்திருக்க முடியும். ஆனால் 1982 ஓகஸ்டில் அரசமைப்பை மாற்றி, மூன்றாவது திருத்தத்தைக் கொண்டு வந்த அவர், 1982 ஒக்டோபரில் அடுத்த தேர்தலை நடத்தி வென்றார். ஆனால் அடுத்த (அதாவது இரண்டாவது) பதவிக் காலத்தை ஆரம்பிப்பதற்குத் தமது முதலாவது பதவிக் காலத்தின் நேரொத்த திகதி வரும்வரை அவர் காத்திருந்தார். அதன் பிரகாரம் 04.02.1983 இல் அவரது இரண்டாவது பதவிக் காலத்தை அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து ஆரம்பித்து வைத்தார் அப்போதைய பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன்.

இப்போது ஆட்சியில் உள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முதலாவது பதவிக் காலம் 19.11.2005 இல் தொடங்கியது. அதனை 19.11.2011 வரை அவர் தொடர்ந்திருக்க முடியும். எனினும் முற்கூட்டியே தேர்தலை 26.01.2010 இல் அவர் நடத்தி வெற்றி பெற்றார். அவர் தமது இரண்டாவது பதவிக் காலத்தைத் தமது முதலாவது பத விக்காலம் ஆரம்பித்த தினத்துக்கு நேரொத்த திகதியில் தொடங்கலாம் என உயர் நீதிமன்றம் தற்போது ஆலோசனை கூறிவிட்டது. எனவே முதலாவது பதவிக் காலத்தை ஆரம்பித்த நவம்பர் 19 வரை தற்போதைய பதவிக் காலத்தை அவர் தொடரமுடியும். 19.11.2010இல் அவர் தமது அடுத்த பதவிக் காலத்தை ஆரம்பிப்பார் - உயர்நீதிமன்ற ஆலோசனைப்படி.

இதே விடயத்தை ஜனாதிபதி குமாரதுங்க விடயத்தில் பொருத்திப் பார்ப்போம். 1994 நவம்பர் 12 ஆம் திகதி அவரது முதலாவது பதவிக் காலம் ஆரம்பமானது. அதனை அவர் 2000 நவம்பர் 12 ஆம் திகதி வரை தொடர்ந்திருக்க முடியும். ஆனால் 1999 டிசம்பர் 18ஆம் திகதி முற்கூட்டியே நடத்தப்பட்ட அடுத்த தேர்தலில் அவர் வென்றார். ஜனாதிபதி ஜெயவர்த்தனா விடயத்திலும், தற்போது ஜனாதிபதி ராஜபக்ஷ விடயத்திலும் பின்பற்றும் நடைமுறை சந்திரிகா விடயத்தில் கைக்கொள்ளப்படுமானால் அவரது இரண்டாவது பதவிக்காலம் 2000 நவம்பர் 12 ஆம் திகதிதான் ஆரம்பித்திருக்கும். அப்படி ஆரம்பித்திருந்தால் 2006 நவம்பர் 12 வரை அவர் ஆட்சியிலிருந்திருக்க முடியும்.

ஆனால் அப்போதைய பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான உயர்நீதிமன்ற ஆயம் இரண்டாவது தேர்தல் நடத்தி அதில் வென்றவுடனேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இரண்டாவது பதவிக் காலம் ஆரம்பித்து விட்டதாக அரசமைப்பு வாசகங்களுக்கு அர்த்தம் கற்பித்து அவரது ஒருவருட கால ஆட்சியை முறையற்ற விதத்தில் பறித்துவிட்டது.

இரண்டாவது தேர்தல் முடிந்த கையோடு அதற்கான பதவி ஏற்பை சந்திரிகா மேற்கொண்டதால் அந்த வேளையில் இருந்தே அவரது பதவிக்காலம் ஆரம்பித்து விட்டது என்ற வாதத்தை பிரதம நீதியரசராக இருந்த சரத் என்.சில்வா ஏற்றுக்கொள்ளவில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

இரண்டாவது பதவிக்கான தேர்தல் சமயத்தில் (1999 டிசம்பரில்) இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் படுகாயமுற்ற சந்திரிகா, தாம் நாட்டை ஆளக்கூடிய தேகாரோக்கியத்துடன் உள்ளார் என்பதைக் காட்டவே அச்சமயத்தில் திரும்பவும் ஒருதடவை பதவி ஏற்று மக்களுக்குக் காட்டினார் என்றும், எனினும் அதன் பின்னர் 2000 டிசம்பரில் மீண்டும் தமக்கு முன்னால் இரண்டாவது பதவிக் காலத்தை ஏற்பதற்கான சத்தியப்பிரமாணத்தை அவர் செய்துகொண்டார் என்றும் குறிப்பிட்டிருந்த அப்போதைய பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, பின்னர் சில வருடங்கள் கழித்து, அரசியல் நிலைமை மாறியதும், சந்திரிகாவின் இரண்டாவது பதவிக்காலம் அவர் இரண்டாவது தேர்தலில் 1999 டிசம்பரில் வென்றபோதே ஆரம்பித்து விட்டது எனத் தீர்ப்பளித்து பெரும் குளறுபடியைச் செய்துள்ளார்.

ஜெயவர்த்தனா விடயத்தில் பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன் செயற்பட்டமை போல, இப்போது மஹிந்த ராஜபக்ஷ விடயத்தில் பிரதம நீதியரசர் அசோக என்.சில்வா தலைமையிலான உயர் நீதிமன்ற ஆயம் செயற்பட்டுள்ளது. ஆனால் சந்திரிகா விடயத்தில் மட்டும் அப்போதைய பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான உயர்நீதிமன்ற ஆயம் குளறுபடி பண்ணிவிட்டது. நீதியின் பெயரால் அரங்கேறும் இத்தகைய பித்தலாட்டங்களுக்கு எங்கு நியாயம் தேடுவது?

# கொழும்பில் நேற்று எதிரணி ஆர்ப்பாட்டம்



கொழும்பு, பெப். 04

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அதனை ரத்துச் செய்யக் கோரியும் எதிர்க்கட்சியினர் நேற்றுக் கொழும்பில் நடத்திய மிகப் பெரிய ஆர்ப்பாட்டப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கு கொண்டனர்.

கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் ஆரம்பமான பேரணியால் நகரின் பல பகுதிகளில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

இதேவேளை, அலரிமாளிகையை நோக்கி ஆர்ப்பாட்டக்காரர்கள் செல்வதைத் தடுப்பதற்காகக் கலகத்தடுப்புப் பொலிஸார் உட்படப் பெரும் எண்ணிக்கையான பொலிஸாரும் இராணுவத்தினரும் பணியில்ஈடுபட்டிருந்தனர்.

எதிர்க்கட்சிகளின் பல்வேறு மூத்த தலைவர்களும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டனர். (அ-சி)

# பதவியில் நீடிப்பார் தேர்தல் ஆணையாளர் அவரே நேற்று ஊடகவியலாளரிடம் தெரிவிப்பு



கொழும்பு, பெப்.04

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு பதவியிலிருந்து ஓய்வுபெறுவதற்குத் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க ஏற்கனவே எடுத்த தீர்மானத்தை இப்போது மாற்றியுள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் அவரது பணி தொடரும் என்று அவர் நேற்று அறிவித்துள்ளார்.

தேர்தல்கள் செயலக அதிகாரிகளும், எதிர்க்கட்சிகளும் விடுத்த வேண்டுகோளையடுத்தே அவர் தமது பழைய தீர்மானத்தை மாற்றினார் என்று தயானந்த திஸாநாயக்க கூறினார்.

அவர் ஓய்வு பெறுவது தொடர்பாக, நீதிமன்றத்தினதும், சட்டத்தரணியினதும் ஆலோசனைகளையும், கருத்துக்களையும் தாம்எதிர்பார்த்து நிற்கின்றார் என்றும் அவர் சொன்னார். ராஜகிரியவில் உள்ள தேர்தல்கள் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார். (அ-சி)

# ஒன்றில் தேர்தல் முடிவை ரத்துச் செய்யுங்கள் அல்லது வாக்குகளை திரும்ப எண்ணுங்கள்

## பொதுவேட்பாளர் ஜெனரல் பொன்சேகா கோரிக்கை

கொழும்பு, பெப்.04

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் இரத்துச் செய்யப்பட வேண்டும் அல்லது வாக்குகள் மீள எண்ணப்பட வேண்டும் என்று ஜெனரல் சரத் பொன்சேகா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவை நேற்றுத் தேர்தல்கள் செயலகத்தில் சந்தித்தபின் ஊடகவியலாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இரத்தினபுரியில் வாக்கு எண்ணும் நிலையம் ஒன்றில் இருந்து வெளியே வீசப்பட்ட 64 வாக்குச் சீட்டுகள்எமது கையில்சிக்கியுள்ளன.

அவற்றில் 27 சீட்டுக்களில் அன்னச் சின்னத்திற்குத் தெளிவாகப் புள்ளடியிடப்பட்டுள்ளது. மீதிச் சீட்டுகள் தீமூட்டி சேதப்படுத்தப்பட்டுள்ளன. அந்த வாக்கெண்ணும் நிலையத்தில் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளை வெளியே விட்டுவிட்டே வாக்குகள் எண்ணப்பட்டன.

அதேபோல் வாக்குகள் எண்ணும் நிலையங்கள் பலவற்றில் எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் விரட்டப்பட்ட பின்னரே வாக்குகள் எண்ணப்பட்டன.

எமது கையில் கிடைத்த இந்த வாக்குச்சீட்டுகளை நாம் தேர்தல்கள் ஆணையாளரிடம் ஒப்படைத்துள்ளோம். இது தொடர்பில் தாம் நடவடிக்கை எடுப்பார் என்றுஆணையாளர் எம்மிடம் கூறினார்.



மொத்தத் தில் இந்தத் தேர்தல் மோசடிமிக்கதாகவே அமைந்துள்ளது. இத்தேர்தல் முடிவுகளைத் தேர்தல்கள் ஆணையாளர் இரத்துச் செய்ய வேண்டும் அல்லது வாக்குகளை மீளஎண்ணவேண்டும் - என்றார். (அ-சி)

# பல்கலைக்கழகங்களில் புதிய பாடநெறி

யாழ்ப்பாணம், பெப்.04

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களில் கல்வியாண்டு 2009/2010ஆம் ஆண்டு பட்டப்பயில் நெறிகளில் புதிய பாடநெறி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

''தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும்'' எனும் கற்கை நெறியே புதிதாக அறி முகப்படுத்தப்பட்டுள்ளது.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் இந்த கற்கைநெறிக்கு முதற்கட்டமாக 35உத்தேச அனுமதிகள் வழங்கப்படவுள்ளன.

நான்கு வருட பி.எஸ்.சி (ஹொனர்ஸ்) கற்கை நெறியான தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் பாட நெறிக்கு பரீட்சார்த்தி ஒருவர் பின்வரும் தகுதியை பெற்றிருக்க வேண்டும்.

உயர்கணிதம், இணைந்த கணிதம், கணக்கீடு, பொருளியல், புவியியல், அளவையியலும் விஞ்ஞானமுறையும், கணிதவியல், பௌதிகவியல், வணிகப் புள்ளிவிவரவியல் ஆகிய பாடங்களில் ஏதாவது ஒரு பாடத்தில் ஆகக் குறைந்தது 'சி' தரத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

அத்துடன் ஜி.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சையில் ஆங்கிலத்திலும், கணிதத்திலும் குறைந்தது 'சி' தரச்சித்தியும், மொறட்டுவப் பல்கலைக்கழகத்தினரால் நடாத்தப்படும் உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைய வேண்டியதும் கட்டாயமானதாகும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை இலங்கை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ள ''பட்டப் பயில் நெறிகள்'' கல்வியாண்டு 2009/2010ஆம் ஆண்டுக்கான அனுமதி எனும் கைநூலைப்பார்த்து அறிந்துகொள்ள முடியும். (14-16)

## நாளை

| | | |
|---|---|---|
| தை | 23 | 05.02.2010 |
| | | வெள்ளிக்கிழமை |
| திதி: | | ஸப்தமி |
| | | பி.இ. 12.06 வரை |
| நட்சத்திரம்: | | சுவாதி |
| | | பி.இ. 05.44 வரை |
| சுபநேரம்: | | 06.35 - 08.05 வரை |
| ராகுகாலம்: | | 11.05 - 12.35 வரை |

# மானிப்பாய் இந்துவின் நூற்றாண்டு விழா

மானிப்பாய், பெப்.04

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட இருக்கிறது. எதிர்வரும் ஜூலை மாதம் 4ஆம் திகதி நடைபெறவிருக்கும் இவ் விழாவை முன்னிட்டு நூற்றாண்டு மலரும் வெளியிடப்படவிருக்கிறது.

இதற்கான ஒழுங்குகளைத் துரிதமாக மேற்கொண்டு வரும் நூற்றாண்டு விழாச் சபை கல்லூரி பற்றிய சான்றுகள், புகைப்படங்கள் போன்ற விவரங்களை அனுப்பி வைக்குமாறு பழைய மாணவர்களைக் கோரியுள்ளது. (ஒ-115)

# கண்ணிவெடி குறித்த விழிப்புணர்வுச் செயலமர்வு

கோப்பாய், பெப்.04

யாழ்.வலயக்கல்வி ஆசிரியர்களுக்கு கண்ணிவெடி விழிப்புணர்வு தொடர்பான செயலமர்வு இடம்பெறவுள்ளது. யாழ்.கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகள் ஒவ்வொன்றிலும் இருந்து தலா இரண்டு ஆசிரியர்கள் இந்தச் செயலமர்வில் பங்குபற்ற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி பெறும் ஆசிரியர்கள் மீள்குடியேற்ற நிலைமை காரணமாக மாணவர்களின் பாதுகாப்புக் கருதி அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் எனவும் உரிய ஆசிரியர்களின் பெயர் விவரங்களை யாழ்.கல்வி வலய ஆசிரிய வள நிலையத்திற்கு எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு ஆசிரியர் வள நிலைய முகாமையாளர் ஆர்.இரத்தினசிங்கம் அதிபர்களைக் கேட்டுள்ளார். (ஒ-72)

# ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், பெப்.4

சிறுப்பிட்டி வடக்கு ஸ்ரீ விஷ்ணு துர்க்காதேவி ஆலய அலங்கார உற்சவம் கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகாயத்திலும் தரையிலும் ஓடும் விமானம்




உலக வரலாற்றில் பற்பல பிரமாண்ட வளர்ச்சிகளையும், கண்டுபிடிப்புகளையும் இந்த மனித சமுதாயம் கண்டு முதலில் ஆற்றாமையில் வெறுத்தும் பின்னர் வியந்தும் தான் ஏற்றுக் கொண்டிருக்கிறது. விமானம் கண்டு பிடித்த ரைட் சகோதரர்களும் சரி, மகிழுந்தை நமக்கு கொடுத்த ஹென்றி போர்ட் ஆக இருந்தாலும் சரி இதே நிலை தான்.........

முதலில் வெறுத்து ஒதுக்கிய அதே சமுதாயம் மெல்ல மெல்ல அவர்களை அங்கீகரிக்க அவர்களது கண் [illegible] வெற்றிகர [illegible] முதல் கட்ட சோதனையைச்செய்து முடித்துள்ளனர்.... எதைப் பற்றி பேசிக் கொண்டு இருக்கிறோம்? இந்த நிறுவனம் 2006 ஆம் ஆண்டு மசாசுசெட்ஸ் பல்கலைகழகத்தில் பயிற்சி பெற்ற விமானப் பொறியியாலர்கள் மற்றும் வர்த்தக நிர்வாகத்தில் முதுகலை பட்டம் பெற்ற சில நண்பர்கள் கூடி இந்த நிறுவனத்தை ஆரம்பித்து வைத்தனர். இவர்கள் செய்து முடித்து இருக்கின்ற சோதனை முயற்சி, தரையிலும் வானத்திலும் ஓடக்கூடிய ஒரு விமானம் மற்றும் மகிழ்ந்து......

இதை இயக்க மேலும் 20 மணி நேரம் இவர்கள் விமானம் செலுத்தும் முறையை பயிற்றுவிக்கின்றனர். முன்பே விமானம் செலுத்தத் தெரிந்திருந்தால் இந்த வண்டியை வாங்கும் பொழுது இதற்கான பயிற்சியை மட்டும் அளிக்கின்றனர்.

இந்த வண்டியின் விலையை தான் தீபாவளி வானவேடிக்கை போல தலை நிமிர்ந்த பார்க்க வேண்டியதாய் இருக் கிறது..... அறிமுக விலை ஒரு லட்சத்து தொண்ணூற்று நான்காயிரம் அமெரிக்க டொலர்கள்.

சிந்தித்துப் பார்த்தால் இந்த வண்டி அதிகமாய் புழக்கத்திற்கு வந்து விட்டால் சடக்கென்று கதவைத் திறந்துவிட்டு போய் வானத்தில் இருக்கின்றபோது ஏன்டா கண்ண எங்க வைத்து வண்டியைச் செலுத்துகிறாய் என்று ஏக வசனம் எல்லாம் பேச முடியாது. கொஞ்சம் போக்குவரத்து நெரிசல் தரையில் குறையும். வானத்தில் அதிகம் ஆகலாம். மேலே பறக்கும் காவற் படை போட்டு கண்காணிக்கலாம். தரையில் கார் என்று சொல்லி ஓட்டுநர் உரிமம் கேட்கும் போது, இறக்கையை விரித்து பறந்து கொஞ்சம் ஜகா வாங்கலாம்.

# இளம் வயதில் வரும் மாரடைப்பு

- சிறிய விஷயங்களுக்குக் கூட நீங்கள் குழப்பம் ஆகிறீர்களா?

- பரச்சினையை சமாளிக்கத் தெரியாமல் அடிக்கடி சத்தம் போடுகிறீர்களா?

- எதற்கெடுத்தாலும் மூக்கு நுனியில் கோபத்தை கொண்டு வருகிறீர்களா?

இத்தனைக்கும் ஆம் என்றால் முதலில் அவற்றை கைவிட முயற்சியுங்கள். இல்லாவிட்டால் இளம் வயதில்கூட மாரடைப்பு வரும் அபாயம் உள்ளது.

கோபப்படும் போது அமுக்கம் அதிகமாகி ரத்த அழுத்தம் அதிகரிக்கின்றது. அட்ரினலின் சுரப்பி அதிக வேலை செய்கிறது. அதனால் இதயத் தசைகளுக்கு அதிக ஒட்சிசன் தேவைப்படுகிறது. அப்படிக் கிடைக்காதபோது ப்ளேட்லெட்ஸ் என்ற பசுபசுப்பான திரவம் சுரந்து, குருதிக்குழாய்களில் படிந்து, அதில் அடைப்பை ஏற்படுத்துகிறது. அடைப்பு ஏற்படுவதால் குருதி ஓட்டத்தில் பாதிப்பு ஏற்படுகிறது. அஞ்சைனா என்ற மார்பு வலி, குருதிக் குழாயில் 70 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை அடைப்பு ஏற்பட்டால் வரும்.

உணவு மற்றும் பழக்க வழக்கங்களின் முரண்பாடே இதயப் பாதிப்பிற்கு அடிப்படை காரணியாக இருக்கிறது. ஆனாலும், மன அழுத்தம் ஏற்படும்போது தான் அதிக பாதிப்பு இதயத்தில் ஏற்படுகிறது. கொலஸ்ட்ரால் போன்றவற்றால் குருதி அழுத்தம் ஏற்படுபவர்களைவிட கோபம் மற்றும் குழப்பம் அடைபவர்களுக்குத்தான் மன அழுத்தம் அதிகம். ஏனைய இதயநோயாளிகளை விட குழப்பமானவர்கள நான்கு மடங்கு அதிகமாக இதயநோய் தாக்கும்.

அமைதியாக செயல்படுபவர்களுக்கு பொதுவாகவே எந்த உடல் பாதிப்பும் வருவதில்லை. அவர்களின் உணவுப்பழக்க வழக்கங்களில் மாற்றம் இருந்தால் மட்டுமே பாதிப்பு ஏற்படும். ஆனால் எதற்கெடுத்தாலும் கோபப்படுவோருக்கு மன அழுத்தம் ஏற்பட்டு, பல நோய்களுக்கு அது திறவுகோலாகிறது. இளைய தலைமுறையினருக்கு அதிகளவில் இப்போது மன அழுத்தம் ஏற்படுவதாக தற்போதைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

எனவே இளந்தலைமுறையினர் மன அழுத்தத்தைத் தவிர்த்து மகிழ்ச்சியுடன் வாழ முன்வர வேண்டும்.

# சூரியனில் ஆய்வு நடத்த நாசா திட்டம்

சூரியனில் ஆய்வு நடத்த அமெரிக்காவின் நாசா நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் சூரிய மண்டலத்தில் நிகழும் அதிசயங்கள், இதன் மூலம் பூமியில் ஏற்படும் குழப்பங்களுக்கும்



தீர்வுகாண முடியும். இதற்காக எதிவரும் 9 ஆம் திகதி ஆய்வகத்தை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இங்கிருந்து 5 ஆண்டுகள் ஆய்வு நடத்தவும் திட்டமிட்டுள்ளது

## ட்விட்டர் நட்சத்திரச் சிறுவன்

ட்விட்டரில் அரட்டையடித்து நேரம் வீணாக்குபவர்களில் இருக்கும் உலகில் உருப்படியான வேலைகளைச் செய்து பெயரெடுக்கும் நபர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

அமெரிக்காவில் இருக்கும் Adorian Deck எனும் 16 வயது மட்டுமே நிரம்பிய பாலகன் ட்விட்டர் கணக்கு ஒன்றை ஆரம்பித்து அதில் திகைக்கவைக்கும் தகவல்களைப் போடத்தொடங்கினான். OMG Facts (Oh My God) எனும் அடைபெயருடன் இவன் கடந்த செப்ரெம்பர் மாதம் ஆரம்பித்த ட்விட்டர் கணக்கில் அறிவியல், கணக்கியல், வரலாறு பூகோளம் போன்றவற்றில் இருந்து திகைக்கவைக்கக் கூடிய தகவல்களை வெளியிட்டு வந்தான்.

இந்த ட்விட்டர் கணக்கு பிரபலமாக பல பிரபலங்களும் இவனைப் பின்தொடரத்தொடங்கியமை மேலும் சிறப்பு. இதுவரை சுமார் 310,000 இற்கும் மேற்பட்ட பின்தொடர்பவர்களைக் கொண்டுள்ள இந்தச் சிறுவன் ஒரு ட்விட்டர் நட்சத்திரம் ஆகிவிட்டான்.

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 03 1951



உதிர்வு 05 02 2009

## திருமதி எட்வேட் அன்ரன் மேரி அஞ்சலீனா

அன்பின் திருவுருவாய், பாசத்தின் உறைவிடமாய், குடும்பத்தின் ஒளி விளக்காய்
எங்களை வழிநடத்திய தெய்வமே... ஆண்டு ஒன்று முடிந்ததம்மா, உங்கள் நினைவுகள் நீங்காதம்மா

**எங்கள் கண்ணீர்ப்பூக்களால் அர்ச்சித்து ஆண்டவன் அடியில் உங்கள் ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்திக்கின்றோம்.**

**இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாவற்குழி புனித அந்தோனியார் ஆலயத்தில் 6-02-2010 அன்று காலை 10.30 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகிறது.**

உங்கள் பிரிவால் துயருறும் கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் பதிலளிக்க மறுப்புத் தெரிவித்த சிதம்பரத்துக்கு பா.ஜ.கட்சி கண்டனம்!

## வருத்தம் தெரிவிக்குமாறு கோருகிறார் ராதாகிருஷ்ணன்

சென்னை, பெப். 04

தமிழில் கேள்வியெழுப்பிய பத்திரிகையாளர்களிடம் தமிழில் பதிலளிக்க மறுத்த மத்திய அமைச்சர் சிதம்பரம், தமிழ் மொழிக்கு எதிரான தனது செயல் மூலம் ஒட்டு மொத்த தமிழ் இனத்திற்கும் அவமானத்தை ஏற்படுத்தியுள்ளார். இதற்காக அவர் வருத்தம் தெரிவிக்க வேண்டும் - என்று பா.ஜ.க. மாநில தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

செம்மொழி மாநாட்டை நடத்தும் துரித முயற்சியில், தமிழக அரசு செயற்பட்டு வருகிறது. தமிழில்தான் நாடாளுமன்றில் உரையாற்றுவேன் என மத்திய அமைச்சர் அழகிரி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இலங்கை கடற்படையால் தமிழர்கள் தாக்கப்படுவது குறித்து, மத்திய அமைச்சர் சிதம்பரத்திடம் டில்லியில் சில பத்திரிகையாளர்கள், தமிழில் கேள்வி கேட்டுள்ளனர். அதற்கு, தமிழில் கேள்வி கேட்டால், மற்றவர்களுக்கு புரியாது; ஆங்கிலத்தில் கேட்டால் மட்டுமே பதில் சொல்வேன் என சிதம்பரம் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

தனக்குத் தெரியாத ஹிந்தியில், பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினால், தன் உதவியாளர் மூலம் புரிந்து கொண்டு சிதம்பரம் பதில் அளிக்கிறார். ஹிந்தியில் கேள்வி கேட்டால், ஹிந்தி தெரியாத பத்திரிகையாளர்களுக்கு அது புரியாது; எனவே, ஹிந்தியில்கேள்வி கேட்காதீர்கள் என ஒரு போதும் சிதம்பரம் சொன்னதில்லை.

நாடாளுமன்றின் உள்ளேதான், தமிழில் பேச உரிமைப் போராட்டம் நடக்கிறது என்றால் நாடாளுமன்றுக்கு வெளியே, தமிழ் தெரிந்த தமிழக மத்திய அமைச்சர், தமிழில் கேள்வி கேட்பதை நிராகரிப்பது வெட்கக் கேடானது.

தமிழகம் வந்து விட்டால், தமிழ் பற்றியும், தமிழன் பற்றியும் மூச்சுக்கு முன்னூறு தடவை பேசும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், தமிழகத்திற்கு வெளியே, தன்னைத் தமிழன் என்று அடையாளம் காட்டிக் கொள்ளவும், தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் தவறுவது கண்டனத்துக்குரியது. தமிழ் மொழிக்கு எதிரான தனது செயல் மூலம், ஒட்டு மொத்த தமிழ் இனத்திற்கும், தமிழ் மொழிக்கும் மிகப்பெரிய அவமானத்தை சிதம்பரம் ஏற்படுத்தியுள்ளார். இதற்காக அவர், வருத்தம் தெரிவிக்க வேண்டும்.

அதுவரை, தமிழ் செம்மொழி மாநாட்டு ஏற்பாடுகளிலோ, மாநாட்டிலோ சிதம்பரம் பங்கேற்க தமிழக முதல்வர் அனுமதிக்கக் கூடாது - என்றுள்ளது. (சி)

## இந்தியாவில் செல்போன் பாவிப்போர் 51 கோடி பேர்

இந்தியாவில் கையடக்கத் தொலைபேசி உபயோகிப்பாளர்களின் எண்ணிக்கை 51 கோடியைத் தாண்டிவிட்டது என மத்திய தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் சச்சின் பைலட் தெரிவித்தார்.

குவாஹாட்டி அருகே சாய்காவ்ன் என்ற இடத்தில் அதிவேக கம்பியில்லா தகவல் சேவை ஒன்றை தொடக்கி வைத்துப் பேசிய அவர், மேலும் கூறியவை வருமாறு -

இத்தகைய கம்பியில்லா தொழில்நுட்ப சேவை நாட்டிலேயே முதல்முறையாக இங்கு தொடக்கிவைக்கப்பட்டுள்ளது. கேபிள்களை பதிக்கமுடியாத பகுதிகளில் இம்முறை பயன்படுத்தப்படுகிறது. இதனால் செலவு மிச்சமாகிறது. வடகிழக்கு மாநிலங்களுக்கு இத்தகைய தொழில்நுட்பம் மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது- என்றார். (சி)

# அமெரிக்கர்கள் இந்தியாவுக்கு வந்து விருது வாங்கும் நிலை வரவேண்டும்

## நடிகர் கமல்ஹாசன் தெரிவிப்பு

வேலூர், பெப். 04

அமெரிக்கர்கள் இந்தியாவில் விருது வாங்கும் நிலை வரவேண்டும் என்பதே எனது கனவு என்றார் நடிகர் கமல்ஹாசன்.

வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 'விஐடி ரிவேரா - 2010' நிறைவு விழாவில் மாணவர்களின் கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் வருமாறு:-

எனது ரோல்மொடல் ஈ.வெ. ராமசாமி. நான் படிக்காவிட்டாலும், என் வாழ்க்கை எப்போதும் திறந்த புத்தகம். யார் வேண்டுமானாலும் படித்துக் கொள்ளலாம். எனது வாழ்க்கை ஒரு அற்புதமான பயணம். அதில் எந்தக் குருவும் குருதட்சணை கேட்க வில்லை.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் கனவை நனவாக்கி வருகிறேன். எனக்குப் பிறகு, நாளைய கலைஞன் வந்துவிட்டார். அவரைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன். அவர் கிடைத்துவிட்டால், நடிப்பதற்கு ஓய்வு கொடுத்துவிட்டு, படம் பார்க்கச் சென்றுவிடுவேன். ரஜினியுடன் இணைந்து நடிப்பதற்குப் படம் எடுக்கத் தயாரிப்பாளர்கள் யார் தயாராக உள்ளனர்? இதனால்தான் உங்களின் (மாணவர்களின்) இந்த எதிர்பார்ப்பு நிறைவேறாமல் உள்ளது.

ஹொலிவுட் திரைப்படத்தில் நடிக்கும் எனது கனவு பற்றிக் கேட்கிறீர்கள். ஆனால், அமெரிக்கா சென்று விருது வாங்குவதைத் தவிர்த்து, அமெரிக்கர்கள் இந்தியாவுக்கு வந்து விருது வாங்கும் நிலை வரவேண்டும். இதுதான் எனது கனவு - என்றார். (சி)

# ஈழ அகதிகள் மீது பொலிஸார் தாக்குதல்; வன்மையாகக் கண்டிக்கிறார் நெடுமாறன்



சென்னை, பெப். 04

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் இலங்கை அகதிகள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தினர் எனக் கூறப்படும் சம்பவத்திற்கு பழ. நெடுமாறன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள 31 ஈழத்தமிழ் அகதிகள் மீது நேற்றுமுன்தினம் இரவு 10 மணிக்கு மேல் பொலிஸாரால் மிகக்கடுமையான தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தங்கள் குறைகளைத் தீர்ப்பதாக முதலமைச்சர் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நேற்றுமுன்தினம் அந்தக் கைதிகள் அனைவரும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினர். ஆனால் இரவு 10 மணிக்கு மேல் திடீரென 200 இற்கும் மேற்பட்ட பொலிஸார் உள்ளே புகுந்து உறங்கிக் கொண்டிருந்த அகதிகள் மீது மிகக்கடுமையான தாக்குதலை நடத்தியுள்ளார்கள்.

மிகமோசமான முறையில் பாதிக்கப்பட்ட 13 அகதிகளை மட்டும், அங்கிருந்து பொலிஸார் அகற்றிவிட்டனர். அவர்கள் கதி என்னவாயிற்று என்பதும் தெரியவில்லை.

முதல்வர் கருணாநிதியின் கட்டுப்பாட்டில் உள்ள பொலிஸ் துறை, உண்ணாவிரதம் இருந்த அகதிகள் மீது நடத்திய தாக்குதல் முள்ளிவாய்க்கால் படுகொலையை நினைவுப்படுத்தியிருக்கிறது.

படுகாயமடைந்த அனைத்து அகதிகளையும் உடனடியாக விடுதலை செய்வதோடு அவர்களை வைத்தியசாலையில் சேர்த்து தக்க சிகிச்சையளிக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன் - என்றுள்ளது. (சி)

## புகை பிடிக்கும் காட்சிகள் வேண்டாம் அஜித்துக்கு அன்புமணி கடிதம்



சென்னை, பெப். 04

அஜித் நடித்து வெளியாகவுள்ள 'அசல்' திரைப்படத்தில் புகைப்பிடிக்கும் காட்சிகள் இடம்பெறுவதை தடுக்க வேண்டும் - என்று முன்னாள் மத்திய அமைச்சர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் 'அசல்' படத்தின் கதாநாயகன் அஜித், தயாரிப்பாளர் பிரபு, இயக்குநர் சரண் ஆகியோருக்கு எழுதிய கடிதத்தின் விவரம் வருமாறு -

சிறுவர்களையும், இளைஞர்களையும் புகைப் பிடிக்கும் கொடிய பழக்கத்துக்கு அடிமையாக்க சிகரெட் நிறுவனங்கள் முயல்கின்றன. இதற்காகத் திரைப்படங்களில் புகைப்பிடிக்கும் காட்சிகள் திட்டமிட்டு திணிக்கப்படுகின்றன என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நடிகர்கள் ரஜினிகாந்த், கமல்ஹாசன், விஜய், சூர்யா ஆகியோர் புகை பிடிக்கும் காட்சிகளில் நடிப்பதில்லை என்பதைக் கொள்கையாகக் கொண்டுள்ளனர். ஏ.வி.எம். நிறுவனமும் தங்களது படங்களில் புகைப்பிடிக்கும் காட்சிகள் இடம்பெறாது என அறிவித்திருக்கிறது.

எனவே, தமிழக இளைஞர்களின் எதிர்கால நலன் கருதி, 'அசல்' படத்தில் மிகக் குறைவான காட்சிகளில் புகைப்பிடிக்கும் காட்சிகள் இடம்பெற்றிருக்குமானால்; அக்காட்சிகள் படத்தின் கதையம்சத்தில் முக்கியமில்லாததாக இருக்குமெனில் அவற்றை நீக்கிவிடுங்கள் - என்றுள்ளது. (சி)

# மீனவர் மீதான இலங்கையின் தாக்குதலை தடுக்கக் கோரி இடதுசாரிகள் ஆர்ப்பாட்டம்

300 பேர் கைதாகி விடுதலை




இந்தியச் செய்திகள்

தமிழக மீனவர் மீது இலங்கைக் கடற்படை நடத்தி வரும் தாக்குதலைத் தடுக்கக் கோரி ஆளுநர் மாளிகையை முற்றுகையிட முயன்ற மார்க்சிஸ்ட் கட்சியினர், மீனவர்கள் உள்ளிட்ட 300 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதையடுத்து பொலிஸாருடன் தள்ளு முள்ளு ஏற்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

மீன்பிடித் தொழில் ஒழுங்குமுறை மற்றும் மேலாண் மைச் சட்டத்தை வாபஸ் பெறக்கோரியும், தமிழக மீன வர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து தாக் கப்பட்டு வருவதை தடுக்கக் கோரியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மீனவர் அமைப்புகளுடன் இணைந்து சென்னை சைதாப்பேட்டை பனகல் மாளிகை முன்பு நேற்றுமுன்தினம் போராட்டம் நடத்தினர்.

போராட்டம் குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் என்.வரதராஜன் கூறும்போது தமிழக மீனவ மக்கள் தொடர்ந்து இலங்கை படைகளால் தாக்கப்படுகின்றனர். மீன்பிடி படகுகள், வலைகள் சூறையாடப்படுகின்றன. முன்பு விடுதலைப்புலிகளுக்கு பொருட்கள் கடத்தப்படுவதாக கூறி மீன வர்கள் தாக்கப்பட்டனர். ஆனால், இப் போதும் தொடர்ந்து மீனவர்கள் தாக்கப் படுகின்றனர். மத்திய அரசு உடனடியாக இலங்கை அரசுடன் பேசி மீனவர் மீதான தாக்குதல் சம்பவத்தை தடுத்து நிறுத்த வேண்டும். மேலும், மீன்பிடித் தொழில் ஒழுங்குமுறை மற்றும் மேலாண்மை சட்டத்தை வாபஸ் பெற வேண்டும் - என்றார்.

பின்னர், என்.வரதராஜன் தலைமையில் ஒரு குழுவினர் காரில் கவர்னர் மாளிகைக்கு புறப்பட்டுச் சென்றனர். பின்னர், அங்கே மனு கொடுத்துவிட்டு திரும்பி வந்தனர்.

பின்னர், போராட்டக்காரர்கள் ஆளுநர் மாளிகையை முற்றுகையிடப் புறப்பட்டனர். அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதனால், போராட்டக்காரர்கள் பனகல் மாளிகை முன்பு வீதி மறியலில் ஈடுபட்டனர். பின்னர், வீதி மறியலில் ஈடுபட்ட மார்க்சிஸ்ட் கயூம்னிஸ்டு கட்சியினர், மீனவர்கள் உள்ளிட்ட 300 பேரையும் பொலிஸார் கைது செய்தனர். இதில், 75 பேர் பெண்கள் ஆவார்கள். கைது செய்யப் [illegible] மாலையில் விடு [illegible]பட்டனர். (சி)

# தனித்தெலுங்கானா பற்றி முடிவெடுக்க நீதிபதி கிருஷ்ணா தலைமையில் குழு

## உள்துறை அமைச்சு அறிவிப்பு

டில்லி, பெப். 04

தெலுங்கானா மாநிலம் அமைப்பது குறித்து முடிவெடுக்க மத்திய குழு அமைக்கப்பட்டது. நீதிபதி டி.என்.கிருஷ்ணா தலைமையில் 5 பேர் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதை மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. தெலுங்கானா அமைப்பதற்கான சாத்தியம் குறித்து இந்தக் குழு ஆய்வு செய்யும். குழுவின் மற்ற உறுப்பினர்களாக டில்லி தேசிய சட்ட பல்கலைக்கழக துணை வேந்தர் ரன்பீர் சிங், சர்வதேச உணவு கொள்கை ஆய்வு கூட அறிஞர் அபு சலேஹ் ஷரீப், பேராசிரியர் ரபீந்தர் கவுர் மற்றும் முன்னாள் உள்துறை செயலர் வி.கே.டக்கால் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி கட்சியின் தலைவர் சந்திரசேகர ராவ், தொடர் உண்ணாவிரதம் இருந்து தனித் தெலுங்கானா அமைக்க மத்திய அரசிடம் இருந்து அனுமதி வாங்கினார். அன்று முதல் ஆந்திராவில் கலவரம் ஆரம்பித்தது. தெலுங்கானா அமைக்கக் கூடாது என்றும், தெலுங்கானா அமைக்க உறுதியளித்துள்ளதால் உடனே அதை மத்திய அரசு அமுல்படுத்தவேண்டும் என்றும் ஆங்காங்கே கலவரங்கள் வெடித் தன. பிரச்சினை பூதாகரமாக, டில்லிவரை எதிரொலித்தது. எம்.எல்.ஏக்கள், எம்.பிக்கள் ராஜினாமா எனத் தொடர்ந்து நெருக்கடி வலுத்துவர, தெலுங்கானா விவகாரத்துக்குத் தீர்வு காண மத்திய குழு அமைக்க முடிவு செய்யப்பட்டது. தெலுங்குதேச கட்சி அரசியல் குழுத் தலைவர் எர்ரா நாயுடு தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் கூட மத்திய உள்துறை அமைச்சரைச் சந்தித்து தெலுங்கானா விவகாரத்தில் அவசரம் காட்ட வேண்டாம் என கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் நேற்று நீதிபதி டி.என். கிருஷ்ணா தலை[illegible] மத்திய குழு அமை[illegible]

## நடிகர் வடிவேலுவிடம் பல கோடி ரூபா மோசடி?

நிலம் வாங்கித் தருவதாகக் கூறி தன்னிடம் பல கோடி ரூபா மோசடி செய்யப்பட்டது என நகைச்சுவை நடிகர் வடிவேலு பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

விருகம்பாக்கத்தில் உள்ள வடிவேலுவுக்குச் சொந்தமான வீடு, அலுவலகங்களில் சோதனை நடத்தப்பட்டது. அதே நேரத்தில் மதுரை விரகனூரில் உள்ள அவரது வீட்டிலும் வருமான வரி சோதனை நடந்தது.

இதில் சில முக்கிய சொத்து ஆவணங்களை சரிபார்த்தபோது, பெரும்பாலானவை புறம்போக்கு நிலங்கள், சுடுகாட்டு மனைகள் என்பது தெரியவந்தது.

இதுகுறித்து நிலம் வாங்கித் தந்த தனது நண்பர்கள், புரோக்கர்களிடம் பணத்தைத் திருப்பித் தருமாறு கேட்டபோது, வடபழனி பகுதியைச் சேர்ந்த சிலர் வடிவேலுவை மிரட்டினர் எனக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் பிரச்சினையில் கவனம் செலுத்துக வலியுறுத்துகின்றது ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி

கொழும்பு, பெப். 04

தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்தி அவர்களுக்கான நியாயத்தை நிலைநாட்ட வேண்டும் - என்று ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி வலியுறுத்துகின்றது.

இடம்பெயர்ந்த மக்களுக்கும், தமிழ் மக்களின் பிரச்சினைக்கும் நியாயமான தீர்வொன்றை கொண்டு வர வேண்டும் என்றும் அவ்வாறு செய்தால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நீண்ட நாட்களுக்கு ஆட்சியைக் கொண்டுசெல்ல முடியும் என்றும் அக்கட்சி சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஏ.எஸ்.பி.லியனகே தெரிவித்துள்ளார்.

கொழும்பு நிப்போன் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜனாதிபதியிடம் நாம் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றோம். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிச்சயமாக தமது கவனத்தைச் செலுத்தி தமிழ் மக்களுக்கு நியாயத்தை நிலைநாட்ட வேண்டும். இடம்பெயர்ந்த மக்களுக்கும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கும் நியாயமான தீர்வொன்றை கொண்டு வரவேண்டும். அவற்றை செய்தால் அவரால் நீண்ட நாளைக்கு இந்த ஆட்சியை கொண்டு நடத்தலாம் என்று நான் நினைக்கின்றேன்.

வடக்கு கிழக்கில் எமக்கு அதிக வாக்குகள் கிடைத்துள்ளன. யாழ் பல்கலைக்கழகத்தின் பேராசியர்கள், யாழ். சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சியில் போட்டியிட அனுமதிக்குமாறும் தாம் யாழ்ப்பாணத்தில் எமது கட்சியை வெற்றி பெற வைக்கின்றனர் எனவும் எம்மிடம் தெரிவித் துள்ளனர். ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி சார்பாக போட்டியிட்ட எனக்கு 14 ஆயிரத்து 200 வாக்குகளை மக்கள் அளித்துள்ளனர்.

இலங்கையின் பல முன்னணி தலைவர்களை விட எனக்கு அதிக வாக்குகள் கிடைத்துள்ளன. இதன்மூலம் ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சிக்கு மறைமுகமான சக்தி உள்ளது என அறியலாம். எமது தொழிலாளர் கட்சிக்கு உதவுவதாக பிரித்தானியாவில் ஆட்சி செய்கின்ற தொழிலாளர் கட்சி அறிவித்துள்ளது. தொழிலாளர்களாகிய நாம் மன்னர்களை உருவாக்காமல், நாம் மன்னர்களாக மாறுவோம். தொழிலாளர்களின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமாயின் நாடாளுமன்றத்தில் எமக்கு குரல் கொடுக்க பிரதிநிதிகள் இருக்க வேண்டும். இரண்டு பிரதான கட்சிகளிலிருந்தும் பலர் எமது கட்சியில் இணைந்து கொள்ளத் தயாராக உள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர். எனவே நாடாளுமன்றத் தேர்தலில் நாம் தனித்து போட்டியிட்டு நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை தொழிலாளர்களுக்காக ஏற்படுத்தப்போகின்றோம். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜோர்ஜ். டபிள்யூ.புஷ்ஷுடன் போட்டியிட்ட ஜோன் கெரி தனது தோல்வியை ஏற்றுக்கொண்டு தாம் அமெரிக்கர்களின் நலனுக்காக பாடுபடுவதாக தேர்தலின் பின்னர் குறிப்பிட்டார்.

எனினும் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தவர்கள் தமது தோல்வியை ஏற்றுக்கொள்ளாமல் நீதிமன்றத்துக்குச் சென்று வழக்கு தாக்கல் செய்யப் போவதாக குறிப்பிடுகின்றனர். இதனை நாம் மாற்ற வேண்டும் - என்றார். (சி)




ஜன.31-பெப்06

இப்போது விற்பனையில்

* ஜனாதிபதித் தேர்தல் சொல்லும் சேதி
* சிறுபான்மையினரின் வாக்குகள் என்ன சொல்கின்றன?
* உயிர்வலிக்கும் கணங்கள் தொடர்...
* வேண்டப்படாத ஒரு தலைவர்
* வேலுப்பிள்ளையின் இறுதி நாள்கள்
* நளினிக்குக் கருணை கிடைக்குமா?
* மற்றும் வழமையான பல்சுவை அம்சங்களுடன் வெளிவந்துள்ளது.

விலை: 25 ரூபா.

உங்கள் உதயன் முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்..


## ஆசிரியர்கள் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்.பெப்.04

இடம்பெயர்ந்துவந்து தரம் 1தொடக்கம் 5வரை கல்வி பயிலும் மாணவர்களில் எழுத, வாசிக்க இயலாதவர்களுக்கான செயற்பாடுகளை செயற்படுத்தம் பாடசாலை ஆசிரியர்கள், எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.கல்விவலய முகாமைத்துவ மண்டபத்திற்கு சகல ஆவணங்களுடனும் வருகைதருமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (50-16)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 03 | | 05 |
| ★ | | ★ |
| 05 | | 01 |
| ★ | | ★ |
| 1922 | | 2010 |



**அமரர் கணபதிப்பிள்ளை சபாரத்தினம்**

(Rtd .S.P.H.I,A.M.C) ஸ்தாபகர், திலகநர்த்தனாலயம்

தாயை நாமிழந்து தரணியிலே தவித்த போது
தாயாக எமைவளர்த்த தன்னிகரில்லாத் தந்தையே!
அன்னையை நெஞ்சிலும் எங்களைத் தோளிலும் சுமந்து
நீங்கள் வாழ்ந்த தவவாழ்க்கை நிறைவாக முடிந்ததையா!
பரதமும் கல்வியும் பக்குவமாய் நாம் கற்று
பாரினில் தலைநிமிர பணிசெய்த தெய்வமே-உங்கள்
அன்பும் அரவணைப்பும் அழகான குறுஞ்சிரிப்பும் -நெஞ்சில்
அழியாத கோலமாய் அழவைத்துப் பார்க்குதையா!
தில்லைக் கூத்தன் நடனமது திக்கெட்டும் பரவிடவே
திவ்யமாய் 'திலகநர்த்தனாலயத்தை' ஸ்தாபித்த தந்தையே -உங்கள்
இதயத்தில் வாழும் அன்னையோடிணைந்தே இறைவனுடன்
இரண்டறக் கலந்தின்று முப்பத்தொரு நாளய்யா!

முகவரி:
இல.05, கல்லடி வீதி,
சாவகச்சேரி. (சி/564609) குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி





**திருமதி முருகேசு அன்னம்மா**

கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் மூத்த உறுப்பினர் லயன் ஏ.எம். கனநாயகம் அவர்களுடைய அன்புத் தாயாரின் மரணச் செய்தி கேட்டு கவலையடைந்தோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவருடைய ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

**கோப்பாய் லயன்ஸ் கழக உறுப்பினர்கள்.** (94589)


உ
சிவமயம்

## திறப்பு விழா அழைப்பு

நிகழும் மங்களகரமான விரோதி வருடம் தை மாதம் 23ஆம் நாள் (05.02.2010) வெள்ளிக்கிழமை சுவாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய பகல் 9.07 மணி முதல் 10.45 மணிவரையுள்ள மீன லக்கின சுபமுகூர்த்த வேளையில்

**வினு ரெக்ஸ் VINU TEX**

என்னும் புடைவை விற்பனை நிலையத்தினை பெரியோர்கள் ஆசீர்வாதத்துடன் ஆரம்பிக்க இருப்பதால் அத்தருணம் தாங்கள் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.15, 16 பெரியகடை,
யாழ்ப்பாணம்.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி பத்மகுமாரன்
(உரிமையாளர், யோகாஸ் ரெக்ஸ்)

(சி/564610)




வல்வெட்டித்துறையில் சுகாதார உத்தியோகத்தர்களுடன் படையினரும் இணைந்து மேற்கொண்ட டெங்குநோய் தடுப்பு பரப்புரையின்போது பொதுமகன் ஒருவருக்கு வழங்கப்பட்ட துண்டுப் பிரசுரத்தை அவர் வாசிப்பதையும் அருகில் பொலிஸ், சுகாதார உத்தியோகத்தர்கள் நிற்பதை முதலாவது படத்திலும், துண்டுப் பிரசுரங்களுடன் பொலிஸ், சுகாதார உத்தியோகத்தர் ஆகியோர் வீதியில் வருவதை இரண்டாவது படத்திலும், படையினர் ஒருவர் வீட்டுக்குச் சென்று துண்டுப்பிரசுரம் வழங்குவதை மூன்றாவது படத்திலும் காணலாம் (படங்கள்: கர்ணன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ். மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவையின் வருடாந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பிராந்திய ஆணையாளர் திருமதி ப. சிவலிங்கம் மற்றும் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும், நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி. ப. சிவலிங்கத்துக்கு மூத்த பிரஜைகள் பேரவைத்தலைவரின் பாரியார் திருமதி விசாகதேவி சிவகுமாரன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (50)

# ஏ-9 வீதி திறந்த பின்னர் யாழ்ப்பாணத்தில் 25 முஸ்லிம் குடும்பங்கள் மீளக் குடியமர்வு

யாழ்ப்பாணம்,பெப்.4

ஏ-9 தரைப்பாதை திறக்கப்பட்டதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் 25 முஸ்லிம் குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ளன.

ஏனைய முஸ்லிம்களும் யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர ஆர்வமாக உள்ளனர். வசதிவாய்ப்புகள் ஏற்படுத்தாததால் குடியமரப் பின்னடித்து வருகின்றனர் என்று யாழ். மாநகரசபை உறுப்பினர் மௌலவி பி.ஏ.எஸ். சுபியான் உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்களின் மீள் குடியமர்வு தொடர்பாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்கள் தற்போது மீளக் குடியமர்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஏ-9 தரைப்பாதை திறக்கப்பட்டதில் இருந்து இது வரை 25 குடும்பங்கள் மீளக் குடியேறியுள்ளன.

ஏனையவர்களும் மீளக்குடியேறுவதில் ஆர்வமாக உள்ளனர். ஆனால் அவர்களது வீடுகள் சேதமடைந்துள்ளன. சிலரது வீடுகள் தரைமட்டமாக உள்ளன. அவர்கள் மீளவும் குடியமர்வதற்கான வசதிகளை இதுவரை எந்த அரச அமைப்புக்களோ அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களோ மேற்கொள்ளவில்லை.

மீளக் குடியமர விரும்புகின்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வருமானால் அதிகளவிலான முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறுவார்கள் - என்றார். (50-9)

## கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப் 4

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு ஆள் சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 12ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம், இல:857, கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும், எதிர்வரும் 13ஆம் திகதி வவுனியா, புகையிரத வீதியில் அமைந்துள்ள கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகத்திலும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (50-201)

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர்களுக்கு அபராதம்

சங்கானை, பெப் 4

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற எட்டுப்பேரை வட்டுக்கோட்டை பொலிஸார் அப்பகுதி மின்சாரசபை உத்தியோகத்தர்களின் உதவியுடன் கைதுசெய்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட எட்டுப் பேருக்கும் மல்லாகம் மாவட்ட நீதிபதி தலா 24 ஆயிரத்து 904 ரூபா தண்டப்பணம் விதித்து தீர்ப்பளித்தார்.

வேரம், மூளாய், அராலி கிழக்கு, சுழிபுரம் மேற்கு, முன்கோடை, காளி கோயிலடி, மூளாய் ஐயனார் கோயிலடி ஆகிய பகுதிகளில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர்களே கைது செய்யப்பட்டவர்களாவர். (50-201-29)




## ஜனாதிபதித் தேர்தலில் கடமையாற்றிய உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு

யாழ்ப்பாணம், பெப்.4

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கடமையாற்றிய உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்குவது தொடர்பான சுற்று நிருபம் அரச திணைக்களங்களுக்கு இன்று வியாழக்கிழமை அனுப்பி வைக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ. குகநாதன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பணிபுரிந்த அனைத்து உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள் அடங்கிய சுற்றுநிருபம் தேர்தல் திணைக்களத்தால் எமது திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அறிவிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளின் விவரம் வருமாறு:-

வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றிய சிரேஸ்ட தலைமை அதிகாரிகளுக்கு 2 ஆயிரத்து 250 ரூபாவும், கனிஷ்ட தலைமை அதிகாரிக்கு ஆயிரத்து 250 ரூபாவும் கனிஷ்ட ஊழியர்களுக்கு 900 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

வாக்குச் சீட்டுகளை எண்ணும் பணியில் ஈடுபட்ட உதவித்தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும் சிரேஷ்ட தலைமை அதிகாரிக்கு ஆயிரத்து 750 ரூபாவும் கனிஷ்ட தலைமை அதிகாரிக்கு ஆயிரத்து 500 ரூபாவும் கனிஷ்ட ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்குரிய கொடுப்பனவு விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன-என்றார் அவர். (50-9)

## யாழ்ப்பாணத்து வெங்காயப் பூவுக்கு தென்னிலங்கையில் பெரும் கிராக்கி

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்ப்பாணத்து வெங்காயப் பூவுக்குத் தென்பகுதியில் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது வெங்காயப் பூ 'சீசன்' என்பதால் குடாநாட்டில் அறுவடை செய்யப்படும் இந்த வெங்காயப் பூக்கள் வியாபாரிகளால் கட்டுக்கட்டாக தென்பகுதிக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

தென் பகுதிக்குப் பெருமளவு வெங்காயப் பூ தினமும் ஏற்றுமதி செய்யப்படுவதால் குடாநாட்டின் பிரதான சந்தைகளில் அவற்றுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

தற்போது ஒரு கிலோ வெங்காயப் பூ கிலோ 150ரூபா முதல் 180 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

கடந்த வருடங்களில் இந்தப் போகத்தில் வெங்காயப் பூவை விவசாயிகள் சந்தைப் படுத்த முடியாமல் அவற்றைக் கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (50-224)

## கொழும்புத்துறையில் கிணற்றிலிருந்து இளம் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், பெப்.4

கொழும்புத்துறை, நெடுங்குளம் வீதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

நெடுங்குளம் வீதியைச் சேர்ந்த எஸ். சிவராசா (வயது-35) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

சடலத்தின் தலையிலும் உடம்பிலும் பலத்த அடிகாயங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்தக் குடும்பஸ்தர் கொலை செய்யயப்பட்டுப் பின்னர் கிணற்றில் போடப்பட்டிருக்கலாம் என்று விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (50-224)

## சர்வதேச தரத்திலான ஆங்கிலக் கற்கை நெறியை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை

### பிரிட்டிஷ் கவுன்ஸில் மேற்கொள்கிறது

யாழ்ப்பாணம்,பெப்.4

சர்வதேச தரத்திலான ஆங்கிலக் கற்கை நெறியை முதல்முதலாக் யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை பிரிட்டிஸ் கவுன்ஸில் மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ். நூலகத்தில் இடம்பெற்றது.



பிரிட்டிஸ் கவுன்ஸிலின் பதில் பணிப்பாளர் டங்கன் வில்சன், இலங்கைக்கான பரீட்சைகள் முகாமையாளர் கிசோர்ரோய், யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ. சரவணபவ மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ்.பிரதம நூலகர் கே.தனபாலசிங்கம் ஆகியோர் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

யாழ். மக்களின் நன்மை கருதி இந்த ஆங்கிலக் கற்கை நெறியை யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பான விரிவான கலந்துரையாடல் எதிர்வரும் 23 ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பிரிட்டிஷ் கவுன்ஸிலின் ஆங்கிலக்கற்கைநெறியை நடத்தி இங்கேயே பரீட்சையினையும் நடத்துவதற்குரிய திட்டங்கள் தொடர்பாக அன்றைய தினம் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுவான பயனுள்ள நிகழ்ச்சித் திட்டமாக அமையும் இந்த ஆங்கிலக் கற்கை நெறியின் மூலம் யாழ் மாவட்ட மாணவர்கள் அதிக நன்மை யடை[illegible] எதிர்பார்க்கப்படுகிறது. (50-14-16)

## சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இளைஞர் பொது மக்களிடம் மாட்டினார்

### விசாரணைக்காக பொலிசாரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், பெப்.4

திருட்டுச் செயல்களில் ஈடுபடும் நோக்கில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய இளைஞர் ஒருவரை, பொதுமக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த சம்பவம் ஒன்று கோப்பாயில் இடம் பெற்றது.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது :

கோப்பாயில் தெற்கு மற்றும் கல்வியங்காடு பகுதியில் இரவு நேரத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் சிலர் நடமாடி வந்ததை அப்பகுதி மக்கள் அவதானித்தனர்.

இந்த நிலையில் கோப்பாய் தெற்கு இராஜ வீதியிலுள்ள வாழைத் தோட்டம் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு மூன்று இளைஞர்களின் நடமாட்டத்தை அப்பகுதி மக்கள் அவதானித்தனர்.

இவர்களை மடக்கிப்பிடிக்கும் நடவடிக்கையில் மக்கள் சிலர் தயாராகியபோது மூவரும் தப்பியோட முற்பட்டனர். எனினும் அவர்களில் ஒருவர் வகையாகப் பொது மக்களிடம் மாட்டிக்கொண்டார்.

பொதுமக்களிடம் பிடிபட்ட அந்த நபரிடம் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய எவ்விதமான சான்றும் இருக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

அது மட்டுமன்றி இளைஞரான அந்த நபர் தன்னைப்பற்றிய தகவல்களை வழங்குவதில் பின்னடித்தார். இதனையடுத்து பொதுமக்கள் அந்த நபரைக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். (50-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று இலங்கையின் சுதந்திரதினம்

**ஒரு நோக்கு**

இன்று சு(சூ)தந்திரதினம். பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து இலங்கைத் திருநாடு சுதந்திரமடைந்த நாள். இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் எந்தவொரு சிங்களவரும் இலங்கைக்குச் சுதந்திரம் வேண்டுமென்று சிந்திக்கவில்லை. படித்த முட்டாள்களான தமிழர்களே இலங்கைக்குச் சுதந்திரம் வேண்டும் எனப் போராடியவர்கள். பிரித்தானிய அரசாங்கம் இலங்கைக்கு (தனது ஆட்சியின் கீழ்) அதிகாரப் பகிர்வு வழங்க முற்பட்டபோது சிங்களத் தலைவர்கள் அதனை ஏற்றுக்கொண் டார்கள். யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. அத்துடன் அப்போதிருந்த தமிழ்த் தலைவர்களையும் பிரிட்டிஷ் அரசால் உருவாக்கப்பட்ட அமைச்சரவையில் பங்கேற்க வேண்டாமென வலியுறுத்தியது. இதன் காரணமாக இலங்கையில் உருவாக்கப்பட்ட முதலாவது மந்திரி சபை தனிச் சிங்கள மந்திரி சபையாக விளங்கியது. இன்று வரையும் இந்த நிலை மையே தொடர்கின்றது. (அவ்வப் போது ஒருவர், இருவர் அமைச்சரவையில் ஒட்டிக்கொள்ளும் வழக்கம் உண்டு). இலங்கை சுதந்திரம் அடைந்த போதும் அதி மேதாவித் தமிழர்கள் (தங்களை யூதர்களுடன் ஒப்பிடும் இராணி அப்புக் காத்துமார்). நாங்கள் சிங்களச் சகோதரர் களுடன் இணைந்து ஒற்றுமையாக வாழ்வோம் என பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு உறுதி மொழிவழங்கினர். 1948 ஆம் ஆண்டு இதே தினத்தில் அப்போதைய பிரிட்டிஷ் சாம்ராய்சியத் திடமிருந்து இலங்கை விடுதலை பெற்றது. அன்று முதல் இன்று வரை சிலோனிலும் ஸ்ரீலங்காவிலும் ஆண்டு தோறும் சுதந்திரதினம் வெகுவிமரிசை யாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

ஜனநாயக வழியில் தமிழர்களுக்கு உரிமை கேட்டுப் போராடிய தமிழ்த் தலைவர்கள் சுதந்திர தினத்தை துக்கதினமாக (கரிநாளாக) அனுஷ்டிக்குமாறு கோரிக்கை விடுத்தனர். தமக்கிடையே கட்சி பேதங்கள், அரசியல் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் சுதந்திர தினத்தைப் பகிஷ்கரிப்பது என்ற நிலைப்பாட்டில் தமிழ்க் கட்சிகள் ஒன்றாக இருந்தன. தமிழ் மக்களும் சுதந்திர தினத்தைப் பகிஷ் கரித்தனர்.

1996ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தில் 'கட்டாய' சுதந்திர தினம் ஆண்டுதோறும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் அகதிமுகாமில் வாழ்ந்தாலும் அவர்கள் வசிக்கின்ற இடங்களில் தேசியக் கொடி ஏற்றி சுதந்திரதினம் கொண்டாட வேண்டும். தேசியக் கொடி ஏற்றாவிட்டால் என்ன நடக்கும் என்பது அனைவருக்கும் தெரியும்.

வீதியால் பயணம் செய்பவர்கள் அனைவரும் தேசியக் கொடியுடனேயே பயணம் செய்ய வேண்டும். தேசியக்கொடி கட்டாமல் பயணம் செய்யும் வாகனங்களுக்கு என்ன நடக்கும் என்பதும் எல்லோருக்கும் தெரியும்!

எனவே அன்பார்ந்த தமிழ் மக்களே! இலங்கையில் வாழும் சிங்களச் சகோதரர்களின் ஆணைக்குக் கட்டுப்பட்டு, அவர்கள் இடும் கட்டளைகளை ஏற்று அவர்களின் சொற்படி நீங்களும் சுதந்திர தினத்தைக் கொண்டாடுங்கள். உங்களுக்குச் சுதந்திரமில்லை. சுதந்திர தினம் கொண்டாடுவதில்லை என நீங்கள் சொல்ல முடியாது. சொன்னால்என்னநடக்கும்என்பதும்உங்களுக்குத் தெரியும். எனவே நீங்கள் இந்த சிறிலங்கா ஜனநாயகக் குடியரசில் வாழ விரும்பினால் சிங்களச் சகோதரர்களுடன் சேர்ந்து நீங்களும் சுதந்திர தினத்தைக் கொண்டாடியே ஆக வேண்டும்.

**தில்லைக்கூத்தன்**


யாழ் உயர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தில்
பகுதி நேர (வார இறுதி)

**HNDIT (Higher National Diploma in Information Technology)**

கற்கை நெறிக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளல்

SLIATE

மேற்படி ஆங்கில மொழிமூல கற்கை நெறி இவ்வருடம் (2010) முதல் ஆரம்பிக்கப்படுகின்றது.

**அடிப்படைத் தகைமைகள்:**

க.பொ.த (உ/த) இல் புதிய பாடத்திட்டத்தின் படி மூன்று பாடங்களிலும் பழைய பாடத் திட்டத்தின் படி நான்கு பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அரச அல்லது தனியார் துறைகளில் கணனியுடன் தொடர்புடைய பணியில் இருக்க வேண்டும்.

சொந்தமாகவோ அல்லது பணியிடத்திலோ கணினியைப் பயன்படுத்தும் வசதி இருக்க வேண்டும்.

**கட்டண விபரம்:**

ஒவ்வொரு அரையாண்டுக்கும் ரூபா 10,000 வீதம் நான்கு அரையாண்டுகளுக்கும் மொத்தம் ரூபா 40,000

**விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பப் படிவங்களை கீழே தரப்பட்ட முகவரியில் பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 14.02.2010 க்கு முன்னர் அதே முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்க.

முகவரி:
இயக்குனர்
யாழ் உயர் தொழிநுட்பவியல் நிறுவகம்.
இல. 665/2, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

TP: 021 2222595
email : jaffnaatidirector@yahoo.com






මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

02.02.2010

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2203

வெற்றி எழுத்து: R
வெற்றி எண்கள்: 9 0 7 1 1 6

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | R | 9 | 0 | 7 | 1 | 1 | 6 | ரூபா.17,618,119/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 9 | 0 | 7 | 1 | 1 | 6 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | | 0 | 7 | 1 | 1 | 6 | ரூபா. 100,000/= | பரிசுகள் 16 |
| 3 பரிசுகள் | | | | 7 | 1 | 1 | 6 | ரூபா. 10,000/= | பரிசுகள் 144 |
| 4 பரிசுகள் | | | | | 1 | 1 | 6 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1401 |
| 5 பரிசுகள் | | | | | | 1 | 6 | ரூபா. 100/= | பரிசுகள் 13997 |
| 6 பரிசுகள் | | | | | | | 6 | ரூபா. 20/= | பரிசுகள் 138498 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 9 | 0 | 7 | 1 | 1 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 16 |
| 8 பரிசுகள் | | 9 | 0 | 7 | 1 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 138 |
| 9 பரிசுகள் | | 9 | 0 | 7 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1398 |
| 10 பரிசுகள் | | 9 | 0 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13864 |
| 11 பரிசுகள் | R | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 55229 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 14,846,240.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு
Rs. 17,813,617.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றறுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 2470662, 4607000, Hotline: 243[illegible] www.nlb.lk


# 31 ஆம் நாள் நினைவு அலைகள்

**திருமதி மனோகரி யோசப்பின் (மனோ) மனுவேற்பிள்ளை**



இளவாலையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட மனோஅக்கா 04.01.2010ஆம் திகதி இறைவனடி சேர்ந்துள்ளார். 31ஆம் நாளான இன்று (04.02.2010) வியாழக்கிழமை நினைவுகூருகின்றோம்.

ஊரிழந்த வேளையில் உறவு தந்து,
உருக்குலைந்த வேளையில் கைகொடுத்த
எமது அன்னைக்கு
எமது கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

நாவலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

தம்பிராஜா மாஸ்டர்
குடும்பம்,

(சி/564607)

# மரண அறிவித்தல்

## நடராஜா தர்மேஸ்வரி



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா தர்மேஸ்வரி 02.02. 2010 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை- செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.02. 2010) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப 10 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
எஸ்.சாந்தலிங்கம்-
(மருமகன் -கட்டட ஒப்பந்தகாரர்)

30/5, மூத்தவிநாயகர்வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(94588)

# தொலைத்தொடர்பு சீராக்கல் ஆணையக பணிப்பாளர் நாயகம் ராஜினாமா

கொழும்பு, பெப். 04

இலங்கைத் தொலைத்தொடர்பு சீராக்கல் ஆணையகத்தின் பணிப்பாளர் நாயகம் பிரியந்த காரியபெரும நேற்று முன்தினம் தனது பதவியை இராஜினாமாச் செய்திருக்கிறார் என தொலைத்தொடர்பு சீர்படுத்தல் ஆணையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர் தமது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளரும் மேற்படி ஆணையகத்தின் தலைவருமான லலித் வீரதுங்கவிடம் நேற்று முன்தினம் கையளித்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இவரின் பதவி விலகலுக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை, இவர் ஜனாதிபதி செயலகத்தில் பணியாற்றுவதற்காக முன்னர் அழைக்கப்பட்டிருந்தார் என்றும், எனினும் தற்போதைய சூழ்நிலையில் அது நிச்சயமற்றதொன்றாகவே உள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்பு சீராக்கல் ஆணையகத்தின் புதிய பொது நிர்வாகி விரைவில் நியமிக்கப்படுவார் என ஆணையகத்தின் தலைவர் லலித்வீரதுங்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் இலங்கையில் உள்ள அனைத்து கைத்தொலை பேசிகளுக்கும் ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தி ஒன்று - குறுஞ் செய்தியாக-இலவசமாக- அனுப்பிவைக்கப் பட்டமையை ஒட்டி, எழுந்த சர்ச்சையில் பிரியந்த காரிய பெருமவின் பெயரும் அதிகம் அடிபட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (சி)


STUDY IN UK
Australia, USA, Malaysia & Singapore
FREE IT COURSE FOR EVERY ENROLLED
VISA பெற்றுக்கொள்ள முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
எமது சேவை முற்றிலும் இலவசம்
flex Institute
Step Towards a Bright Future
4, IBC Road, Colombo 6.
Call: 0777-761346
E-mail: flexinstitute@sltnet.lk
(A Subsidiary of Flex Graphic)
Web: www.flexinstitute.lk

விற்பனைக்கு
முட்டையிடும் பேட்டுக் கோழிகள் விற்பனைக்கு உண்டு.
தொ.பே: 0779398891
(94586)


### வறுத்தோலை கிராமத்துக்கு மின் விநியோகம்

சங்கானை, பெப். 4

சுழிபுரம், றத்தலடி வறுத்தோலை கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளை வட்டுக்கோட்டை மின்சார சபையினர் மேற்கொண் டுள்ளனர்.

இதனால் இக்கிராமத்தைச் சேர்ந்த ஏறத்தாழ [illegible] குடும்பங்கள் நன்மையடைய உள்ளன என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

(50-201-29)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தை 5 விக்கெட்டுக்களால் வென்றது கே.சி.சி.சி.

வலி.வடக்கு,பெப்.4

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் அமரர்கள் விக்ரம் -கங்கு - ராஜன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான வருடாந்தம் நடத்திவரும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி 5 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆட்டமொன்றில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி 05 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.

கே.சி.சி.சி அணியும் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் 30 ஓவர்கள் நிறைவில் 07 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது.

றொகான் 35 ஓட்டங்களையும், சுதர்சன் 56 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

கொக்குவில் கே.சி.சி.சி. அணியின் கிருபவன் 06 ஓவர்கள் பந்து வீசி 04 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், பிரதீபன் 06 ஓவர்கள் பந்துவீசி 37 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், நதீஸ்வரன், றொபேசன் ஆகியோர் முறையே 17, 28 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

162 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி 26.4 ஓவர்களில் 05 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. வல்லவகுமரன் 50 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த றொகான் 5.4 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், அலன்குமார் 05 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும்கைப்பற்றினார்கள். (50-86)

## உதைபந்தாட்டம் 8ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.4

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (50-23)

## மத்தியஸ்தர் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் ஞாயிறன்று

யாழ்ப்பாணம்,பெப்.4

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளத்தினால் நடத்தப்படும் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50-23)

## சென்.நீக்கிலஸ் வெற்றி

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.உதைப்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் 'ஏ'அணி வெற்றிபெற்றது.

இப் போட்டியில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் 'ஏ' அணியை எதிர்த்து பாசையூர் சென்.அன்ரனிஸ் 'பி' அணி மோதியது.

இதில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் 'ஏ' அணி தன்னை எதிர்த்து விளையாடிய பாசையூர் சென்.அன்ரனிஸ் 'பி' அணியை 6:2 என்ற கோல் கணக்கில் வென்றது. (50-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.4

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் நவிண்டில் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும். (50-23)

* * *

யாழ்ப்பாணம், பெப்.4

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும். (50-23)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.4

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான எல்லே போட்டி இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் (50-23)

* * *

'எக்ஸ்போ எயார்' விமானசேவை நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.நகர்மைய றோட்டறக்ட்கழகம் நடத்தும் பாடசாலைகளில் ஆண், பெண் அணிகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆண்களுக்கான போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்.இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெறும்.

இதில் யாழ்.மத்தியகல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதும். (50-23)

* * *

வலி.வடக்கு,பெப்.4

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் அழைக்கப்பட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே அமரர்கள் விக்ரம்-கங்கு-ராஜன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான வருடாந்தம் நடத்திவரும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் போட்டியில் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அணியும் மோதவுள்ளன. (50-86)

## மத்திய கல்லூரி வீரர்களுக்கான நீச்சல் போட்டி அல்லைப்பிட்டியில்

வலி.வடக்கு,பெப்.4

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு அல்லைப்பிட்டி கடற்பரப்பில் இல்லங்களின் வீரர்களுக்கு இடையிலான ஒரு கிலோ மீற்றர் நீச்சல் போட்டியொன்று நடைபெறவுள்ளது.

கடந்த ஐந்து வருடகால இடைவெளியின் பின்னர் நடைபெறும் இந்த நீச்சல் போட்டி மட்டுப்படுத்திய வீரர்களைக் கொண்டதாக நடத்தப்படுகின்றது.

ஐந்து இல்லங்களில் இருந்தும் தலா பத்துப் பேர் என்ற அடிப்படையில் மொத்தம் ஐம்பது பேர் இப்போட்டியில் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த காலங்களில் இப்போட்டியில் அதிக எண்ணிக்கையானவர்கள் கலந்து கொள்வது வழமையாகும்.

இப் போட்டிக்கு கல்லூரியுடன் இணைந்து கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் கடற்படையினர் ஆகியோர் ஆதரவு வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (50-86)

## கராத்தே சங்கத்தின் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.மாவட்ட கராத்தே சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

தற்போது சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களின் இரண்டு பிரதிநிதிகளை இக் கூட்டத்துக்கு சமுகம் கொடுக்குமாறு சங்கச் செயலாளர் சென்சேய் ரி.துஷ்யந்தன் அறிவித்துள்ளார். (50-23)

## மென்பந்துக் கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,பெப்.4

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான மென்பந்துக் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8. 30 மணி தொடக்கம் ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும். (50-23)

## கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.மத்திய கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும், இடையிலான 19 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் ஆட்டம் நாளையும் நாளை மறுதினமும் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும். (50-23)

## வீதியோட்டத்தில் வெற்றி பெற்றோர்

வலி.வடக்கு,பெப்.4

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு நடத்திய ஆண்களுக்கான 8கிலோ மீற்றர் வீதி ஓட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வீரர்களின் விவரங்கள் வருமாறு:-

முதலாம் இடம் பிரான்சிஸ் பிரசாந், இரண்டாம் இடம் நந்த கோபால் தினேஸ் குமார், மூன்றாம் இடம் ரவீந்திரகுமார் திவாகர்.

மேற்படி போட்டியில் 300இற்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டதுடன் 221 வீரர்கள் இலக்கை நிறைவு செய்தமை குறிப்பிடத்தக்கதாகும். (50-86)

## 'நெஸ்ரமோல்ட்' மரதன் ஓட்டம் இம்முறை யாழ்ப்பாணத்தில்

### ஆயிரம் வீரர்கள் பங்கு கொள்வர்

யாழ்ப்பாணம்,பெப்.4

'நெஸ்ரமோல்ட்' நிறுவனத்தினால் வருடந்தோறும் அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும் ஆண், பெண் இருபாலாருக்குமான மாபெரும் மரதன் ஓட்டப் போட்டி இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் மார்ச்மாதம் இந்தப் போட்டி இடம் பெறவுள்ளதாகவும் அகில இலங்கை ரீதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தப் போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கம் மேற்கொண்டுள்ளது. (50-23)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## வீதி ஓட்டம் நாளை

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் முன்னோடி நிகழ்ச்சியான மாணவர்களுக்கான 5 கிலோ மீற்றர் வீதி ஓட்டப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் கல்லூரி முன்றலில் அதிபர் வீ.கணேசராஜா தலைமையில் ஆரம்பமாகவுள்ளது. (50-23)





உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடைபெற்ற வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகமும் உடுவில் மத்தி விளையாட்டுக்கழகமும் மோதிக்கொள்ளும் காட்சிகளே இவை.

(படங்கள்:- நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவத் தாதியர் ஆள்சேர்ப்புக்கான நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், பெப்.4

கொழும்பு சுகாதார அமைச்சால் கடந்த நவம்பர் மாதம் 23ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மாணவத் தாதியர் பயிற்சிநெறிக்கான ஆள்சேர்ப்புக்கு விண்ணப்பித்தவர்களின் தகைமைகளைப் பரிசீலிப்பதற்கான நேர்முகப் பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கும் போது பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ்கள் (ஜி.சீ.ஈ. சா/த, ஜி.சீ.ஈ. உ/த), தேசிய அடையாள அட்டை, 'விவாகமாகாதவர்' என கிராம சேவையாளர், பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ், வாக்காளர் பட்டியல் (3 வருடங்கள்) ஆகிய ஆவணங்களின் மூலச்சான்றிதழ் மற்றும் அவற்றின் பிரதிகளையும் கொண்டு வருமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

நேர்முகப் பரீட்சார்த்திகளுக்கான தனிப்பட்ட அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மேற்குறிப்பிட்ட தினத்தில் நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிக்காதவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனவும் இதற்கான கொடுப்பனவு எதுவும் வழங்கப்படமாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அசோகா விநாசித்தம்பி (கொக்குவில் கிழக்கு), தமயந்தி துரைராஜசிங்கம் (வியாவில், காரைநகர்), தேனுகா கதிர்காமநாதன் (மீசாலை கிழக்கு), சுதர்சினி யோகேஸ்வரன் (யாழ்ப்பாணம்), கஜீபன் நவரத்தினம் (கோண்டாவில் வடக்கு), கிறிஸ்ரீன் பானுமதி சிறிலசேவியர் (இளவாலை).

இந்துஜா வைத்திலிங்கம் (ஆனைக்கோட்டை), சர்மிளா சிவலிங்கம் (மூளாய் மேற்கு), ஜெயகாந் அரசநாயகம் (யாழ்ப்பாணம்), மணிமாறன் சிவபாதம் (இணுவில் மேற்கு) றபிந்தா ஐயாத் துரை (சுழிபுரம் கிழக்கு), சுகன்யா பாலேந்திரா (உடுவில் தெற்கு), சதீஸ்பரமானந்தன் (கோண்டாவில் கிழக்கு), கபாலினி லோகநாதன் (சாவகச்சேரி), பிரசாந்தினி கைலாயபிள்ளை (மீசாலை கிழக்கு).

சோமகாந்தி சோமசுந்தரம் (மீசாலை மேற்கு), டெவிந்தினி சோதிலிங்கம் (கோப்பாய் வடக்கு), சிந்துஜா வசந்தகுமாரன் (சாவகச்சேரி), சுதர்சினி அருட்சோதி (நல்லூர்), விஜித்தா வரதராஜா (மட்டுவில் தெற்கு), யசோதினி பரமானந்தம் (கோப்பாய் தெற்கு), கஸ்தூரி தவரத்தினம் (சாவகச்சேரி), சசிரேகா கோகிலராஜா (நுணாவில் கிழக்கு), சுதீசினி புஷ்பகுமார் (கொடிகாமம்).

சிந்துஜா செல்வராசா (சுதுமலை வடக்கு), நிரோஜினி லோரன்ஸ் (ஆனைக்கோட்டை), பனோஜா ராஜதுரை (கட்டப்பிராய்), சஜந்தினி சோதிநாதன் (தொல்புரம்), நிசாந்தினி பேரின்பம் (அல்வாய் வடமத்தி), புஷ்பவிஜித்தா பரமநாதன் (வரணி), யாழினி வேலாயுதபிள்ளை (திக்கம்), துளசிகா விஜயநாதன் (சுன்னாகம்), யசோதா அழகானந்தம் (இணுவில் மேற்கு).

வொறினா குணநாயகம் (கோண்டா வில் வடக்கு), தாட்சாயினி விவேகானந்தா (கோப்பாய் தெற்கு), பபிந்தா ஞானேஸ்வரன் (கோண்டாவில் வடக்கு),சர்மிலா பாலசுப்பிரமணியம் (கோப்பாய் மத்தி), காயத்திரி ஜெயக்குமார் (யாழ்ப்பாணம்), அனோஜா இலங்கைநாயகம் (சங்கானை), புவி விஸ்வலிங்கம் (ஊரெழு கிழக்கு), சண்முகபிரியா கனகரட்ணம் (புத்தூர் கிழக்கு), டிலானி கந்தசாமி (வண்ணார் பண்ணை).

தீபா புஷ்பராஜா (அளவெட்டி மேற்கு), யொய்ஸ் வில்லியம் கெப்சிபா (உரும்பிராய கிழக்கு) , அபிராமி சிறிகுமார் (சுண்டுக்குளி), சுமித்திரா சரவணபவானந்தன் (மட்டுவில் வடக்கு), சுரேகா பத்மநாதன் (திருகோணமலை, அல்வாய் தெற்கு,) குணசாந்தன் சூரியகுமாரன் (சுழிபுரம் மத்தி), ரவீந்தர் விஜயராஜா (யாழ்ப்பாணம்), பிரேமசங்கர் கலையரசன் (அராலி வடக்கு), சஞ்சீவன் பத்மநாதன் (கோப்பாய் வடக்கு).

கபில்ராஜ் சந்திரசேகரன் (மானிப்பாய்), ஆதவன் மகாலிங்கம் (சுன்னாகம் கிழக்கு), கிரிசாந்தன் சுந்தரலிங்கம் (வண்ணார்பண்ணை), சிறிசாந் சிறிசயந்தராஜ் (நவாலி வடக்கு), சுந்தரநாத் பரமசாமி (சாவகச்சேரி), நவசாந்தன் நவரட்ணம் (சுன்னாகம்), விஜயஐங்கரன் விசாகபெருமாள் (இளவாலை), மதுசுதன் குமாரசாமி (கோண்டாவில்) வக்கிரன் காசநாதன் (சுன்னாகம்), மயூரன் நாகேஸ்வரன் (இருபாலை கிழக்கு).

ஜெயபிரதீப் மரியநாயகம் (உடுவில்), சுதர்னன் நாகராசா (கைதடி தெற்கு), கௌரசங்கர் கணேசமூர்த்தி (கைதடி மத்தி), கிரீந்திரன் த்னபாலசிங்கம் (கோப்பாய் மத்தி), நிசாந்தன் கதிரவேலு (மீசாலை மேற்கு), கோகிலன் கோபாலபிள்ளை (காரைநகர்), யானகி பிரபாசிங்கம் (துன்னாலை கிழக்கு), சரண்ஜா கிருஷ்ணமூர்த்தி (மானிப்பாய் ,முல்லைத்தீவு) கீதாசினி விநாயகமூர்த்தி (சங்கானை கிழக்கு).

# தேர்தல் நிலைப்பாடு குறித்து முன்கூட்டியே அறிவித்து அரசுக்கு உதவத் தயாரில்லை என்கின்றது ஜே.வி.பி.

## உரிய நேரத்தில் அறிவிப்பு வரும்; சோமவன்ஸ கூறுகிறார்



கொழும்பு, பெப். 4

நாடாளுமன்றத் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பில் உரிய நேரத்தில் அறிவிப்போம் எனவும், தமது முடிவைத் தற்போதே தெவிப்பதனூடாக ஆளும் கட்சிக்கு உதவிசெய்வதற்கு தாங்கள் தயாரில்லை எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்தார்.

அத்துடன் தாங்கள் எவ்வாறான முடிவை எடுக்கப்போகின்றோம் என்று பொறுத்திருந்து பாருங்கள் எனவும் அவர் கூறினார்.

கொழும்பை அண்டிய புறநகர்ப் பகுதியான புறக்கோட்டையில் உள்ள சொலிஸ் ஹோட்டலில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே சோமவன்ஸ இவ்வாறு குறிப்பிட்டார்.

மோசடியான ஜனாதிபதித் தேர்தலுக்கு எதிராக மக்களை அணிதிரட்டுவோம் என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் -

ஐக்கிய நாடுகள் சபையின் மூன்று சாசனங்களில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. அரசியல், பொருளாதாரம் மற்றும் கலாசாரம் ஆகிய விடயங்களிலேயே இலங்கை அரசு கைச்சாத்திட்டுள்ளது.

எனவே, இலங்கையில் ஜனநாயகம் கேள்விக்குறியாகும் போது, வெளிநாடுகள் இலங்கையிடம் கேள்வியெழுப்பலாம். அந்த வகையில், வெளிநாட்டு விடயத்தை நாம் நோக்கலாம்.

அதேவேளை, தற்போதைய நிலைமையில் எங்கள் முன் இரண்டு தெரிவுகள் உள்ளன. அதாவது, அடிபணிவது அல்லது எதிர்த்துப் போராடுவது என்ற இரண்டு தெரிவுகளில் அடிபணிவதற்கு நாம் தயாரில்லை என்பது தெரிந்த விடயம். எனவே, எதிர்த்துப் போராடுவோம்.

இலங்கையில் ஜனநாயகத்தை மீளக் கட்டியெழுப்பும் நோக்கில் வெளிநாடுகள் இலங்கையிடம் கேள்வியெழுப்பலாம்.

ஆனால், அதற்கு முன்னர் நாம் ஒரு விடயத்தைப் பயன்படுத்தலாம். அதாவது, சர்வதேசத்திடம் செல்வதற்கு முன்னர் நாம் ஜனநாயக வழியில் இன்னொரு முறையில் போராடலாம். அதுதான் வீதியில் இறங்கிப் போராடுவது. வீதியில் இறங்கி எதிர்த்துப் போராடுவதற்கு வீதிகளை நாங்கள் பயன்படுத்தலாம். அதனை நாங்கள் பயன்படுத்தப் போகின்றோம்; அதனை உறுதியாகப் பயன்படுத்துவோம்- என்றும் அவர் தெரிவித்தார். (அ-சி)


அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1162 நீலம்

வெற்றி இலக்கங்கள்

விருச்சிகம் 04 24 39 48

02-02-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 217,828 | 20/- | 4,356,560/- |
| 2 இலக்கங்கள் | 19,980 | 40/- | 799,200/- |
| 1 இல. + லக்கினம் | 19,774 | 60/- | 1,186,440/- |
| 2 இல. + லக்கினம் | 1840 | 200/- | 368,000/- |
| 3 இலக்கங்கள் | 512 | 1000/- | 512,000/- |
| 3 இல. + லக்கினம் | 51 | 10,000/- | 510,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| மொத்தம் | | | 8,332,200/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 259,993 | | 8,832,200/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,972,000/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் ஈ.ஜீ.சஞ்ஜீவ அக்குரஸ்ஸ

கைத்தொலைபேசி வெற்றியாளர்: ஹர்ஷனி லசந்தி எம்பிலிப்பிட்டிய

2010 பெப்ரவரி 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| பொலன்னறுவை | 400951402-0-14 |
| கொழும்பு | 400940389-7-00 |
| இரத்தினபுரி | 400947340-6-32 |
| கம்பஹா | 400941190-8-28 |
| அனுராதபுரம் | 400950923-0-26 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02


# ஊடகவியலாளர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் மீதான ஒடுக்குமுறைகளை நிறுத்தக் கோருகிறது மன்னிப்புச்சபை

கொழும்பு, பெப்.4

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் ஊடகங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கு எதிராக முன்னெடுக் கப்படும் ஒடுக்குமுறைகளை நிறுத்துமாறு சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கை அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபை அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இரு படுகொலைகள், பல தாக்குதல் கள் உட்பட 85 சம்பவங்கள் தேர்தலுக்குப் பின்னர் இடம்பெற்றுள்ளன எனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான வெற்றியும், அதன் பின்னர் இடம்பெற்றுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலும் அரசியல் ஒடுக்குமுறையை முடிவுக்குக் கொண்டுவந்திருக்கவேண்டும். எனினும், அதற்குப் பதில் கருத்துச் சுதந் திரத்திற்கு எதிராகக் கடும் ஒடுக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளமையையே காண்கிறோம் என சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிராந்திய பிரதி இயக் குநர் மது மல்ஹோத்திரா கவலை வெளி யிட்டுள்ளார்.

அச்சுறுத்தல், தாக்குதல்கள் மற்றும் கைதுசெய்யப்படுதல் என்பவற்றின் கார ணமாக மனித உரிமை ஆர்வலர்கள் தங் களது அரசியல் நிலைப்பாட்டை வெளியிட அஞ்சுகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்குப் பிந்திய காலத்தை, புதிய ஒடுக்குமுறைகளுக்கு பயன்படுத்துவதற் குப் பதிலாக ராஜபக்ஷ அரசு கடந்தகால மனித உரிமை மீறல்களுக்குத் தீர்வைக் காண முயலவேண்டும் என்றும் மது மல் ஹோத் திரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை பத்திரிகையாளர்கள் கடும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள தமது சகாக்கள் ஐம்பது பேரின் பெயர்கள் அடங்கிய பட்டியலொன்றை சர்வதேச மன்னிப்புச் சபையிடம் சமர்ப்பித்துள்ளனர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ஐ.ரி.என்., லேக்ஹவுஸ் போன்ற அரச ஊடகங்களில் பணிபுரிபவர்களின் பெயர்களும் இந்தப் பட்டியலில் உள்ளமை முக் கியமானது.

ஜனவரி 29ஆம் திகதி எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவின் அலுவலகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது கைதுசெய்யப்பட்ட 13 முன்னாள் இராணுவ அதிகாரிகளும், வெளியூடகத் தொடர்பின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

# மனித உரிமைகள் குறித்து முப்படைகளுக்கும் பயிற்சி

## ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, பெப். 4

மனித உரிமைகள் தொடர்பாகவும் மனித உரிமைகளைப் பேணுவதில் அரச தரப்பினருக்கு உரிய கடப்பாடு தொடர்பாகவும் முப்படையினருக்குப் பயிற்சியளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன் முதல் கட்டமாக பொலிஸாருக்கு விளக்கங்களும் பயிற்சிகளும் அளிக்கப்படவுள்ளன என ஆணைக் குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என இணையச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் பொலிஸாருக்கு முக்கிய பங்கு உள்ளது எனவும் சமூக பாதுகாவலர்கள் என்ற வகையில் முப்படையினருக்கு இது குறித்த தெளிவு அவசியம் தேவை எனவும் அவர் சுட்டிக்காட்டினார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தேசிய சேமிப்பு வங்கியின் சுன்னாகம் கிளையினால் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வங்கி முகாமையாளர் ந.பகீரதன் மற்றும் விருந்தினர்களான யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவபீட விரிவுரையாளர் ஆ.சரவணபவன், சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள், வலிகாமம் வலயக் கணக்காளர் திருமதி க.ஆனந்தகிருஷ்ணன், வணபிதா இராஜ்குமார் அடிகள் ஆகியோர் அழைத்து வரப்படுவதையும் கௌரவிக்கப்பட்ட மாணவர்கள் விருந்தினர்களுடன் இருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

## பிரதான வீதியிலுள்ள மாநகர வளாகத்தை சுற்றி பாதுகாப்புவேலி அமைக்கும் பணி

யாழ்ப்பாணம், பெப்.04

பிரதான வீதியில் சுப்பிரமணியம் பூங்காவுக்கு எதிரே முன்னர் யாழ்.மாநகராட்சி மன்றம் அமைந்திருந்த வளாகத்தைச் சுற்றி முட்கம்பியிலான பாதுகாப்பு வேலி அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.



பலராலும் போற்றப்பட்ட சகல வசதிகளையும் கொண்ட இந்த மாநகராட்சி மன்றம் கடந்தகால கொடூர யுத்தத்தினால் அழிக்கப்பட்டு தரைமட்டமாக உள்ளது.

தற்போது புற்கள் வளர்ந்து காடுபோல் காட்சியளிக்கும் இந்த வளாகத்தைத் துப்புரவு செய்து பாதுகாப்பு வேலி அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு துப்புரவாக்கும் பணிகள் இடம் பெறுகின்றமையால் மீளவும் அந்த வளாகத்தில் மாநகராட்சி மன்றம் அமைக்கப் படப் போகிறதா என்னும் எதிர்பார்ப்பு பொது மக்களிடம் எழுந்துள்ளது. (50-224)

## தென்மராட்சிப் பாடசாலைகள் சிலவற்றில் விஞ்ஞான ஆய்வுகூட, கணனி அறை வசதியில்லை

யாழ்ப்பாணம், பெப் 4

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகள் சிலவற்றில் விஞ்ஞான ஆய்வு கூடம், கணனிப் பயிற்சி மையம், நூலகம், செயற்பாட்டறை போன்றவை இல்லாதமையால் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

15 பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுகூடங்களும், 6 பாடசாலைகளில் கணனி பயிற்சி மையங்களும், 15 பாடசாலைகளில் நூலகங்களும் 22 பாடசாலைகளில் செயற்பாட்டு அறைகளும் இல்லையெனவும் இதனால் சுமார் 7 ஆயிரத்து 500 மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (50-207)

## விவசாய பீடமாணவர் ஒன்றியத்தின் விஞ்ஞான வினாவிடைப்போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.04

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விவசாயபீட மாணவர் ஒன்றியம் பாடசாலைகளுக்கிடையேயான விஞ்ஞானவினாவிடைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

அமரர்களான கிருபாகர், ஜெயக்குமார் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் மேற்படி போட்டிகள் பாடசாலைகளுக்கிடையிலும் தனிப்பட்ட மாணவர்களுக்கு இடையிலான போட்டியாகவும் நடைபெறவுள்ளன.

இரண்டு கட்டங்களாக நடைபெறும் இப்போட்டியில் முதற்கட்டமாக பொது அறிவு எழுத்துப் பரீட்சையும், இரண்டாம் கட்டமாக வாய்மூலமான வினாவிடைப் போட்டியும் நடைபெறவுள்ளன.

யாழ்.மாவட்ட ஜி.சீ.ஈ. சாதாரண, உயர்தர வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகள் ஒவ்வொன்றிலிருந்தும் தலா ஐந்து மாணவர்கள் வீதம் போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

மேற்படி போட்டிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு விவசாய பீட மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.சயந்தன் அறிவித்துள்ளார். (50-16)

## பருத்தித்துறை வைத்தியசாலையில் நாளை தோல் சிகிச்சை 'கிளினிக்'

யாழ்ப்பாணம், பெப் 4

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நாளை வெள்ளிக்கிழமை விசேட தோல் சிகிச்சைக் 'கிளினிக்' நடைபெறவுள்ளது.

நாளை பிற்பகல் 2 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை நடைபெறவுள்ள இந்தக் கிளினிக்கில் லண்டனிலிருந்து வருகை தந்துள்ள தோல் சிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி என்.இரவீந்திரன் சிகிச்சைகளை வழங்குவார்.

இதில் சம்பந்தப்பட்ட நோயாளர்களைப் பங்குபற்றிப் பயன்பெறுமாறு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் வி.ஜெயராஜா அறிவித்துள்ளார். (50-16)

## சாவகச்சேரி இந்து நிறுவுநர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.04

சாவகச்சேரி இந்துக்கல்லூரி நிறுவுநர் தின நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பியும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர் கு.சிவானந்தமும் கலந்துகொள்வர்.

நிறுவுநர் நினைவான தாமோதரன் சஞ்சிகையின் 105ஆவது வெளியீடும் இடம்பெறும். தாமோதரன் சஞ்சிகை வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் நிகழ்த்தவுள்ளார்.

சஞ்சிகையைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி வெளியிட முதற்பிரதியை சாவகச்சேரி அம்பிகா மருந்தக உரிமையாளர் ந.சிவபாலன் பெற்றுக்கொள்வார். (ஒ-207)




## சமய சந்நிதிகளில்

சுழிபுரம், பெப் 4

சுழிபுரம் வட-கிழக்கு அருள்மிகு சம்பு நாதேஸ்வரி சமேத சம்புநாதேஸ்வரர் தேவஸ்தான நவராத்திரிகால மஹோற்சவம் இன்று முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் சிவராத்திரி தினத்தன்று செ.சிவபாதத்தின் பஜனைக் கச்சேரியும் பொ.சித்திரம் குடும்பத்தினரின் மிருதங்கக் கச்சேரியும் ஆ.கனகரத்தினத்தின் வயலின் கச்சேரி என்பனவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (50-16-28)

* * *

யாழ்ப்பாணம், பெப் 4

சுன்னாகம் தாளையடி ஸ்ரீஅரிகர புத்திர ஐயனார் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

மகாகும்பாபிஷேக தினத்தன்று துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், சிவத்திரு வ.குமாரசாமி ஐயா ஆகியோர் ஆசியுரைகளை வழங்கவுள்ளனர். (50-16)

* * *

யாழ்ப்பாணம், பெப் 4

யாழ்ப்பாணம் ஆரியகுளம் ஸ்ரீஞான வைரவர் ஆலய புனருத்தாரண அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று மாலை 6 மணிக்குப் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து குருமார் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளன. எனவே அடியார்கள்னைவரும் வைரவப் பெருமானின் கும்பாபிஷேக நிகழ்விலும் எண்ணெய்க் காப்பிலும் கலந்து பெருமானின் இஸ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டப்படுகின்றனர். (50-16)

## ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு புதிதாக இரண்டு மாடிக்கட்டடம்

யாழ்ப்பாணம், பெப் 4

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு, மருந்துக் களஞ்சியம் ஆகியவைகளை கொண்ட இரண்டு மாடிக்கட்டடம் ஒன்று புதிதாக அமைக்கப்படவுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள இப்புதிய கட்டடத்திற்கான மதிப்பீடுகள் பற்றி ஆராய்வதற்காக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன், யாழ். கட்டடங்கள் திணைக்களப் பொறியியலாளர் ஆகியோர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் செய்தனர். இக்கட்டடம் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையின் உள்வளவின் கிழக்குப் புறத்தில் அமைக்கப்படவுள்ளது. (50-300)

## சீநோர் மீன்வாடி வீதி மக்கள் பாவனைக்கு

குருநகர், பெப்.04

யாழ்.கடற்கரை வீதியில் பழைய சுங்கத்திணைக்களத்திற்கு முன்னால் குருநகர் சீநோர் மீன் வாடியை நோக்கிச் செல்லும் வீதி படையினரால் மக்கள் போக்குவரத்துக்கு அண்மையில் திறந்து விடப்பட்டுள்ளது.

இவ் வீதியூடாக குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலைக்கும் செல்லக் கூடிய வாய்ப்பு தற்போது உருவாகியுள்ளது.

எனினும் இவ் வீதி இதுவரை காலமும் படையினரின் பாவனையில் இருந்ததனால் செப்பனிடப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. (சசா)

## சைக்கிள் விடப்படும் கொட்டிலில் மாணவர்களுக்கு சங்கீத வகுப்பு

### மீசாலை வீரசிங்கம் ம.வியிலேயே இந்த நிலை

யாழ்ப்பாணம், பெப்.04

சைக்கிள் பாதுகாப்பு நிலைய கொட்டிலில் மாணவர்களுக்கான சங்கீத பாட வகுப்பு நடைபெறுகிறது.

நிலத்தில் இருந்து மாணவர்கள் சங்கீதம் கற்பதை அவதானிக்க முடிந்தது. மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்திலேயே மாணவர்கள் நிலத்தில் அமர்ந்திருந்து சங்கீத பாடம் கற்கின்றனர்.

வித்தியாலயத்தில் போதிய கட்டட வசதிகள் இல்லாததால் பாதுகாப்பு நிலையத்திற்கென அமைக்கப்பட்ட கொட்டிலில் வகுப்புக்கள் நடாத்தப்படுவதாகவும் பாடசாலை மரங்களின் நிழலில் சைக்கிள் விடுவதாகவும் வித்தியாலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் நவோதய பாடசாலை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-207)

## டெங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன.4

இலங்கை வங்கியின் யாழ்ப்பாண கிளையின் அனுசரணையுடன் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான சமூக விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கி வட பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் வளவாளர்களாக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் சமூக மருத்துவத்துறை சார்ந்த வைத்திய கலாநிதிகளான ஆர். சுரேந்திரகுமார், எஸ்.சிவகணேசன் என்.இராஜேஸ்கண்ணன் ஆகியோர் கலந்துகொள்வதுடன் வங்கி உயர் அதிகாரிகளும் கலந்து கொள்ள வுள்ளனர்.

மேற்படி விழிப்புணர்வு நிகழ்வு வங்கியின் கடப்பாட்டுக்கான திட்டத்தின் கீழ் காலத்தின் தேவைகருதி மேலும் விரிவு படுத்தப்படவுள்ளதாக இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப்பொது பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார். (50-201)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரஹ்மானை எனக்கு ரொம்பப் பிடிக்கும்!



''இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானின் ரசிகன் நான். அவரை எனக்கு ரொம்பப் பிடிக்கும்'' என சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.

சச்சின் டெண்டுல்கர் குறித்து கல்கத்தாவைச் சேர்ந்த பத்திரிகையாளரான கௌதம் பட்டாசார்ய எழுதிய புத்தகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டது.

அந்தப் புத்தகத்திலேயே சச்சின் கூறியவை எனக் குறிப்பிட்டு இக்கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் சச்சின் மேலும் கூறியிருப்பவை வருமாறு:-

''ஏ.ஆர்.ரஹ்மானை அதிகம் மதிப்பவன் நான். அவர் ஆஸ்கார் விருது பெற்றபோது மிகவும் பெருமையடைந்தேன். அப்போது நியூஸிலாந்தில் விளையாடிக் கொண்டிருந்தேன். அங்கிருந்தே அவருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பினேன்.

''பல்வேறு சமயங்களில் பல்வேறு விதங்களில் நான் ஊக்கம் பெறுகிறேன். உணர்ச்சிகரமான பேச்சு, கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் போட்டியின் இறுதியாட்டம் போன்றவை எனக்கு ஊக்கமளித்துள்ளன.

''சில பெரியோர்தங்கள் தொழிலை நேசிப்பதும் என்னைக் கவர்ந்துள்ளது. சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் ஆஷா போன்ஸ்லே பாடியதைக் கேட்டேன். 75 வயதில் அர்ப்பணிப்பு உணர்வுடன் அவர் பாடியதைக் கேட்டு மெய் சிலிர்த்தேன். அவரது உற்சாகம் நம்ப முடியாத அளவுக்கு இருந்தது.

''அதே போன்று லதா மங்கேஷ்கரும் பல ஆண்டுகள் தொடர்ந்து ஆயிரக்கணக்கான பாடல்கள் பாடிய பின்பும், அதே உற்சாகத்துடன் இன்றும் பாடிவருவது பிரமிக்கத்தக்கது.

அதேவேளை, அமிதாப் பச்சன் நடித்துள்ள அனைத்துப் படங்களையும் விரும்பிப் பார்த்துள்ளேன். அவரது வசன உச்சரிப்பு மிகவும் அற்புதமானது.

அமிதாப், லதா, ஆஷா ஆகியோர் மும்பையில் வசிப்பதால் அடிக்கடி அவகர்களைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். அவர்கள் முன்னோடிகளாக வாழ்ந்து வருபவர்கள். அவர்கள் தங்கள் வாழ்வின் ஒவ்வொரு நொடிகளையும் ரசிப்பவர்கள். குறுக்கு வழியில் புகழ்பெற விரும்பாதவர்கள். அவர்களது இந்தப் பெருந்தன்மை எனக்கு மிகவும் பிடித்துள்ளது.

இதேவேளை, கிரிக்கெட்டில் தலைக்கவசம் (ஹெல்மட்) என்ற பாதுகாப்பு கவசம் இருப்பதால் அதை அணிவதுதான் புத்திசாலித்தனமானது. பிராட்மன் காலத்தில் ஹெல்மெட் இருந்திருந்தால் அவர் நிச்சயம் அணிந்திருப்பார்.

1999இல் உலகக் கிண்ணம் நடந்து கொண்டிருந்த சமயத்தில் எனது தந்தை இறந்தார். நான் உடனடியாக நாடு திரும்பினேன். நான் மீண்டும் இங்கிலாந்துக்குச் சென்று நாட்டுக்காக விளையாட வேண்டும் என எனது தாயார் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.


தந்தை, நண்பர்களான மார்க் மாஸ்கரென்ஸ், ராஜ்சிங் துங்கர்பூர் ஆகியோர் இறந்த சமயங்களில் எப்படிச் சமாளித்தேன் என்பதை விளக்குவது மிகவும் கடினமானது. அதுபோன்ற சந்தர்ப்பங்களைச் சமாளிப்பதற்கு மிகுந்த மன உறுதி தேவை.

சமகால வீரர்களில் மேற்கிந்தியத் தீவுகளின் பிரையன் லாராவின் ஆட்டத்தை மிகவும் விரும்புவேன். அவரது எல்லா ஆட்டங்களையும் நான் பார்த்ததில்லை.

1990இல் கனடாவில் நானும் லாராவும் முதல் முறையாகச் சந்தித்தோம். இம்ரான்கான் தலைமையிலான பாகிஸ்தான் அணிக்கு எதிராக இருவரும் இணைந்து 'ரெஸ்ட் ஒப் தி வேர்ல்ட்' அணிக்காக விளையாடினோம்.

''இருவரும் இணைந்து 150-160 ஓட்டங்கள் இயைந்து பெற்றோம். அவரது ஆட்டத்தை மறுமுனையில் இருந்து காண்பது சுவாரஷ்யமானது'' - என சச்சின் குறிப்பிட்டுள்ளார்.

# பங்களாதேஷ் அணிக்கு எதிரான 'ருவென்ரி-20': நியூஸிலாந்து 10 விக்கெட்டுகளால் பெருவெற்றி!



பங்களாதேஷ் அணிக்கு எதிரான 'ருவென்ரி-20' போட்டியில் நியூஸிலாந்து அணி 10 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றது.

நியூஸிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, ஒரு 'ருவென்ரி-20', 3 ஒருநாள் போட்டிகள் மற்றும் ஒரு டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில் நேற்று 'ருவென்ரி-20' போட்டி நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து.

அதன்படி களமிறங்கிய பங்களாதேஷ், ஆரம்பத்தில் ஓரளவு சிறப்பாக ஆடியது. எனினும், பின்னர் தடுமாறிக்கொண்டது.

இறுதியில் பங்களாதேஷ் அணி, 17.3 ஓவர்களில் 78 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது.

பங்களாதேஷ் அணியின் துடுப்பாட்டத்தில், ஆரம்ப வீரரான தமிங் இக்பால் 14 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து அவ்ரப் அஹமட் களம்புகுந்தார். இவர் 12 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்தார். இவரைத் தொடர்ந்து மொஹமட் அஷ்ரப் புல் (11) ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த வீரர்களில் ஆகக் கூடுதலாக ராஹிபுல் ஹஸன் 18 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

ஏனைய வீரர்களான சஹிப் அபல்ஹசன் (3), முகமதுல்லா (11), நஜீம் இஸ்லாம் (5), சஹிதாப் குஸைன் (1), சஹிபுல் இஸ்லாம் (1) ஆகியோர் குறுகிய ஓட்டங்களுடன் வெளியேறினர்.

முஷாபிர் ராஹிம் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார். மாஸ்முல் ஹசன் ஆட்டமிழக்காது ஓட்டமெதுவும் பெறாமல் களத்தில் இருந்தார்.

நியூஸிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில் அணித்தலைவர் விற்றோரி 3 விக்கெட்டுகளையும், ரியூபி, மக்கலம், ஓரம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், பிராங்லின் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 79 ஓட்டங்கள் என்ற சிறிய வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, பங்களாதேஷ் பந்துவீச்சுக்களைத் துவம்சம் செய்தது.

ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய மக்கலம்(56), இன்ராம் (20) ஆகியோர் இறுதிவரை ஆட்டமிழக்காது களத்தில் இருந்து அணியை வெற்றிபெறச் செய்தனர்.

இறுதியில் நியூஸிலாந்து அணி 8.2 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 79 ஓட்டங்களைப் பெற்றது.இதன் மூலம் 10 விக்கெட்டுகளால் பெரும் வெற்றி பெற்றது.

ஆட்டநாயகனாக நியூஸிலாந்து அணியின் தலைவரான விற்றோரி தெரிவு செய்யப்பட்டார்.

# நாங்கள் செய்தால் ஏமாற்றுக்காரர்; அது வெள்ளையராக இருந்தால் கலை!

''வெள்ளைக்காரர்கள் செய்தால் கலை என்கிறார்கள். அதையே நாங்கள் செய்தால் ஏமாற்றுக்காரர்கள் என்கிறார்கள்''-இவ்வாறு பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரான இம்ரான்கான் கூறியுள்ளார்.

அப்ரிடி பந்தைச் சேதம் செய்த குற்றச்சாட்டை அடுத்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து இம்ரான் கான் கூறியவை வருமாறு:-

''எல்லா அணிகளும்தான் பந்தைச் சேதம் செய்கின்றன. ஆனால், ஆசிய துணைக் கண்ட வீரர்கள் மட்டுமே தண்டனைகளைப் பெறுகின்றனர்.

''நாங்கள் விளையாடும்போது 'ரிவர்ஸ் ஸ்விங்' என்ற ஒன்றைக் கண்டுபிடித்தோம். ஆனால் எங்களை ஏமாற்றுக்காரர்கள் என்று குற்றஞ்சாட்டினர். ஆனால், இதையே இங்கிலாந்து மற்றும் பிற பந்து வீச்சாளர்கள் செய்தபோது இது ஒரு கலையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.''

''மற்ற அணி வீரர்களும் பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றி பந்தின் தன்மையை மாற்றியுள்ளனர் இதற்கான பதிவு செய்யப்பட்ட சம்பவங்கள் நிறையவே உள்ளன'' - என்றார்.




# தென்னாபிரிக்காவுக்கு எதிரான பயிற்சி ஆட்டம்: இந்திய லெவன் அணி 318 ஓட்டங்கள் சேர்ப்பு!

நாக்பூர், பெப். 04



தென்னாபிரிக்காவுக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் அபிஷேக் நாயரின் சதத்தால் சரிவிலிருந்து மீண்ட இந்திய கிரிக்கெட் லெவன் அணி, 318 ஓட்டங்களைச் சேர்த்தது.

2 டெஸ்ட் மற்றும் 3 ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்பதற்காக ஸ்மித் தலைமையிலான தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணி இந்தியா சென்றுள்ளது.

முதலாவது டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் (6ஆம் திகதி) நாக்பூரில் தொடங்குகிறது.

அதற்கு முன்னதாக தென்னாபிரிக்கா, இந்திய கிரிக்கெட் சபை லெவன் அணியுடன் 2 நாள்கள் பயிற்சி ஆட்டத்தில் மோதுகிறது.

இந்தப் பயிற்சி ஆட்டம் நாக்பூரில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற கிரிக்கெட் சபை லெவன் அணி, தொடக்கத்தில் திணறியது.

பார்த்தீவ் பட்டேல் (8), முகுந்த் (8), அணித்தலைவர் ரோஹித் சர்மா (20), ரஹானே (12), அதிரடியாக ஆடிய மனீஷ் பாண்டே (43), புஜாரா (17) ஆகியோர் 114 ஓட்டங்களுக்குள் 'பெவிலியன்' திரும்பினர்.

இந்த நெருக்கடியான கட்டத்தில் ஜோடி சேர்ந்த அபிஷேக் நாயரும், ஷிகர் தவானும் அணியைச் சரிவிலிருந்து மீட்டனர். சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த இந்த ஜோடி, அணி 295 ஓட்டங்களை எட்டிய போது 'ரன்-அவுட்'டில் பிரிந்தது.

தவான் 70 ஓட்டங்களுடன் ஆட்டமிந்தார். இவரைத் தொடர்ந்து வந்த பியுஷ் சாவ்லா (8), அஷ்வின் (8) ஆகியோர் விரைவாகவே வெளியேறினர். மறுமுனையில் அபாரமாக ஆடிக்கொண்டிருந்த அபிஷேக் நாயர் சதம் அடித்து ஆட்டமிழந்தார்.

முடிவில் கிரிக்கெட் சபை லெவன் அணி முதல் இன்னிங்ஸில் 74.4 ஓவர்களில் 318 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது.

தென்னாபிரிக்கத் தரப்பில் பார்னல், மோர்னே மோர்கல் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். விக்கெட் காப்பாளர் பௌச்சர் தவிர ஏனைய அனைவரும் அதாவது 10 தென்னாபிரிக்க வீரர்கள் பந்துவீசியமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய தென்னாபிரிக்க அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவின்போது 13 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 44 ஓட்டங்களை [illegible] பிரின்ஸ் 13 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் ஸ்மித் 30 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தார்கள்.

# தெற்காசிய விளையாட்டுப் போட்டி: இலங்கைக்கு மேலும் ஒரு இறக்கம்!

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் நேற்று மாலை வரையான நிலைவரப்படி இரண்டாவது மூன்றாவது இடத்திலிருந்த இலங்கை, நான்காவது இடத்திற்குப் பின் தள்ளப்பட்டுள்ளது.

11ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் நடைபெற்று வருகிறது.

நேற்றுமுன்தினம்வரை - போட்டிகள் ஆரம்பமாகும்வரை இலங்கை மூன்றாவது இடத்தில் இருந்தது. எனி னும், பின்னர் பங்களாதேஷ், இலங்கையை முந்திக் கொண்டு 3ஆவது இடத் திற்கு வந்தது. இந்தியா தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது. பாகிஸ்தான் இரண்டாவது இடத்தில் உள்ளது.

முன்னதர் இலங்கை இரண்டாவது இடத்தில் இருந்து மூன்றாவது இடத்திற்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

நேற்று மலை வரை இலங்கை எந்தவொரு பதங்கங்களையும் பெற்றிருக்கவில்லை.

நேற்றுமாலை வரை ஒவ்வொரு நாடுகளும் பெற்றுக்கொண்ட பதக்கங்களும், நாடுகள் வகிக்கும் இடங்களும் வருமாறு:-

| நாடு | தங்கம் | வெள்ளி | வெ.கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| இந்தியா | 5 | 4 | 7 | 26 |
| பாகிஸ்தான் | 6 | 11 | 4 | 21 |
| பங்களாதேஷ் | 4 | 4 | 9 | 17 |
| இலங்கை | 3 | 9 | 5 | 17 |
| நேபாளம் | 0 | 0 | 7 | 7 |
| ஆப்கானிஸ்தான் | 0 | 0 | 5 | 5 |
| பூட்டான் | 0 | 0 | 0 | 0 |
| மாலைதீவு | 0 | 0 | 0 | 0 |
| மொத்தம் | 28 | 28 | 37 | 93 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.09.1987

★ தமிழ்ப் போராளிகள் குழுக்களால் இதுவரை ஒப்படைக்கப்படாததாகக் கருதப்படும் ஆயுதங்களைக் கைப்பற்ற இந்திய அமைதிப்படையினர் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தேடுதல் மேற்கொள்வரெனத் தெரிவிப்பு.

★ நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முன்றிலில் உண்ணாவிரதம் இருக்கும் திலீபனை, விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் நேரில் சென்று சந்திப்பு.

★ எம்மிடமிருந்து ஆயுதங்களைக் களைவதில் இந்தியா காட்டிய அக்கறை -அவசரத்தை, எமது அடிப்படை உரிமைகளைப் பெற்றுத்தரும் விடயத்தில் காட்டவில்லை என விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் தெரிவிப்பு.

17.09.1987

★ தமிழ்ப் போராளிகள் ஏற்கும் விதத்திலான இடைக்கால நிர்வாக சபை குறித்த விவரங்கள் இன்று அரசால் வெளியிடப்படும். இடைக்கால நிர்வாக சபையில் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு 51 சதவீதமும், ஏனைய இயக்கங்களுக்கு 41 சதவீதமும் பிரதிநிதித்துவம் வழங்கப்படுமெனத் தெரிவிப்பு.

★ தமது மரணத்தின் பின்னராவது மக்கள் புரட்சி வெடிக்கட்டும், என சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் திலீபன் தெரிவிப்பு.

★ திலீபனின் உண்ணாவிரதம் தொடர்வதையடுத்து விடுதலைப்புலிகளின் இரண்டு பிரதிநிதிகள் இந்திய அரசால் அவசரமாகப் புதுடில்லிக்கு வரவழைப்பு.

18.09.1987

★ ஐந்து அம்சக் கோரிக்கைகளை இந்திய அரசிடம் முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து வரும் திலீபனின் உடல்நிலை மோசமடைகிறது. உண்ணாவிரதத்தை நிறுத்தச் செய்ய இந்தியத் தரப்பால் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

சுதந்திரக் கட்சி பதவிக்கு வந்தால் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கிழித்தெறியப்படுவதுடன், இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதியில் நிலைகொண்டுள்ள இந்தியப் படையினரும் திருப்பி அனுப்பப்படுவர் என எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவிப்பு.

★ சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் திலீபனை ஈரோஸ் பிரமுகர் பாலகுமார் மற்றும் ஐந்து வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள் நேரில் பார்வையிட்டுக் கவலை தெரிவிப்பு.

19.09.1987

★ எனது உண்ணாவிரதப் போராட்டத்தை நிறுத்துமாறு எவரும் என்னை வற்புறுத்த வேண்டாம். இலட்சியத்துக்காகவே நான் இதனை மேற்கொள்கிறேன் எனத் தனது உண்ணாவிரதப் போராட்டத்தின் நான்காம் நாள் முடிவில் திலீபன் தெரிவிப்பு.

★ சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளும் திலீபன் குறித்து அக்கறை எதுவும் காட்டாது, எஞ்சியுள்ள ஆயுதங்களை ஒப்படைக்குமாறு இந்திய இராணுவ அதிகாரிகள் விடுதலைப் புலிகளுக்கு நெருக்குதல் கொடுத்து வருகின்றனர்.

20.09.1987

★ திலீபனின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடுமாறு இந்தியா விடுத்த வேண்டுகோளை விடுதலைப்புலிகள் நிராகரிப்பு. தமது கோரிக்கை குறித்து உறுதிமொழி எதனையும் இந்தியா வழங்க முன்வரவில்லை எனவும் குற்றச்சாட்டு.

★ இந்திய உளவு நிறுவனமான 'றோ' அமைப்பே வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இயக்கங்களுக்கு இடையே மோதல்களைத் தூண்டி வருவதாக விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் தெரிவிப்பு.

★ மாகாண சபைக்கான அதிகாரப் பரவலாக்கம் குறித்து கொழும்பில் இந்திய, இலங்கை அதிகாரிகள் மத்தியில் இடம்பெறும் பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்பட்டிருப்பதாக இந்தியத் தூதுவர் டிக்ஸிற் தெரிவிப்பு.

21.09.1987

★ தொடர்ந்து ஆறு நாள்களாக உண்ணாவிரதம் இருந்து வரும் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திலீபன் அபாயகரமான கட்டத்தில் இருப்பதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவிப்பு.

★ சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளும் திலீபனை, நவசமாஜக் கட்சிச் செயலாளர் வாசுதேவ நாணயக்கார நேரில் சென்று பார்வையிட்டார்.

★ வடக்கு-கிழக்கில் மேலும் பல பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு இலங்கை அரசுக்கு இந்திய அமைதிப்படை உதவும் எனத் தெரிவிப்பு.

22.09.1987

★ சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் திலீபனின் உணர்வு நிலை மந்தமடைந்து வருவதாகவும், நாடித்துடிப்பு சீரற்ற நிலைக்குச் சென்று கொண்டிருப்பதாகவும் வைத்திய அறிக்கைகள் தெரிவிப்பு.

★ தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சாத்வீகப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் விதத்தில் இந்திய அரசு பொய்ப் பிரசாரம் மேற்கொண்டு வருவதாக விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் குற்றச்சாட்டு.

★ இந்தியப் பிரதிநிதிகள்-புலிகள் தரப்புக்களின் நேற்றைய பேச்சும் பலன் அளிக்கவில்லை. இடைக்கால அரசின் கீழ் பொலிஸ் நிர்வாகத்தை ஏற்படுத்த விடுதலைப்புலிகள் வற்புறுத்து.

24.09.1987

★ திலீபனின் உண்ணாவிரதத்தை நிறுத்தும் முயற்சியாக இந்தியத் தூதுவர் 'டிக்ஸிற்'றுக்கும், விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் பலாலி இராணுவ முகாமில் நடந்த பேச்சுவார்த்தை தோல்வி.

★ இந்தியா வழங்கும் வெறும் வாக்குறுதியை ஏற்று எனது உண்ணாவிரதத்தை நிறுத்திவிட வேண்டாம் எனத் திலீபன் தன்னிடம் தெரிவித்ததாக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் தெரிவிப்பு.

★ விடுதலைப்புலிகள் இயக்கம் எம்மிடம் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாகத்தில் இடம்பெறுவோரின் பெயர்ப்பட்டியலை தாம் இலங்கை அரசுக்கு அனுப்பியுள்ளதாக புதுடில்லி வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் தெரிவிப்பு.

25.09.1987

★ தமிழ்ப் பொலிஸ் படையுடன் கூடிய இடைக்கால அரசாங்கமொன்றே தேவை எனவும் அரசாங்க அதிபரின் நிர்வாகத்துக்கு உட்பட்ட ஆலோசனைச் சபை யோசனையை ஏற்க இயலாதெனவும் விடுதலைப்புலிகள் இயக்கம் இந்திய அரசிடம் வலியுறுத்து.

★ கடந்த பதினொரு நாள்களாக உண்ணாவிரதம் இருந்துவரும் விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலீபனின் உடல்நிலை மோச மடைகிறது. உணர்வு இழக்கும் 'கோமா' நிலைக்கு அவர் உள்ளாகியிருப்பதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவிப்பு.

★ திலீபனுக்கு அடுத்ததாக சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் மத்தியில் போட்டா போட்டி நிலவுவதால் குலுக்கல் முறையிலேயே அடுத்ததொருவரைத் தெரிவு செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகளின் பிரமுகர் காசிஆனந்தன் தெரிவிப்பு.

26.09.1987

★ இடைக்கால நிர்வாகம் தொடர்பாக ஜனாதிபதி ஜே.ஆருடன் தாம் பேச்சுவார்த்தை மேற்கொண்டு வருவதாகவும், திலீபனின் உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறும் இந்தியத் தூதுவர் 'டிக்ஸிற்' மீண்டும் விடுத்த வேண்டுகோள் விடுதலைப் புலிகளால் நிராகரிப்பு.

★ எமது விடுதலைப் போராட்டம் சாத்வீக வடிவில் புதிய பரிணாமம் பெற்று வரும் இச்சந்தர்ப்பத்தில் போராளிகள் தம்மிடையேயான மோதல்களைக் கைவிட்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து செயற்பட முன்வர வேண்டுமென விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் ஏனைய போராளி இயக்கங்களுக்கு அழைப்பு.

27.09.1987

★ இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி கடந்த 12 நாள்களாக நீராகாரம் கூட அருந்தாது சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலீபன் நேற்று 26.09.1987 திகதியன்று உயிரிழப்பு.

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த அரசு 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, பெப்.4

டெங்கு நோயைக் கட்டுப்படுத்தவென அரசாங்கம் 500 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகச் சுகாதாரப் பராமரிப்பு, போஷாக்குத்துறை அமைச்சின் பொதுச் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்தார்.

சுகாதாரக் கல்விப் பணியகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதிப் பணிப்பாளர் நாயகம் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டில் டெங்கு நோயை முழுமையான அடிப்படையில் கட்டுப்படுத்துவதற்கென விரிவான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் 40 புகை விசிறல் இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு டெங்கு நுளம்புகள் பெருகும் அச்சுறுத்தல் மிக்க பிரதேச மருத்துவ அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் 60 புகை விசிறல் இயந்திரங்கள் தருவிக்கப்படவுள்ளன.

இதேநேரம், டெங்கு நோயைச் சரியாக உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்கு தேவைப்படும் இரத்தப் பரிசோதனை இயந்திரங்களும் இறக்குமதி செய்யப்பட்டு அரசாங்க வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளன.

நாட்டில் 61 மருத்துவ அதிகாரிகள் பிரிவுகள் டெங்கு நுளம்புகள் பெருகும் அதிக அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்ளாக விளங்குகின்றன. இப்பிரதேசங்களில் டெங்கு நுளம்பு ஒழிப்புப் பணிகளை முன்னெடுக்கவென ஒவ்வொரு மருத்துவ அதிகாரி பிரிவுக்கும் 15 போர்களை உள்ளடக்கிய விசேட செயலணிகள் அமைக்கப்படவுள்ளன.

கியூபாவின் பி.ரி.ஐ.பேக்யரியா நுண்ணங்கியைப் பாவித்து நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவென அமைச்சரவை அங்கீகாரம் வழங்கவுள்ளது. இதற்கமைய அக்குரணை, கம்பளை, கண்டி ஆகிய பிரதேசங்களில் பி.ரி.ஐ.யைப் பயன்படுத்தி நுளம்புகளை ஒழிக்கும் திட்டம் முதற்கட்டமாக ஆரம்பிக்கப்படும். தற்போது பி.ரி.ஐயை தருவிப்பதற்கு கேள்வி கோரப்பட்டுள்ளன.

தற்போது யாழ்ப்பாணம், வவுனியா கொழும்பு, கம்பஹா, கண்டி ஆகிய மாவட்டங்களில் டெங்கு தீவிரமடைந்துள்ளன. அதனால் நுளம்புகள் பெருகும் இடங்களை ஒழித்துக்கட்டுவதில் ஒவ்வொருவரும் அதிக கவனம் செலுத்துவது அவசியம் என பொதுச் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (50)

# தேசத்துக்கு மகுடம் கண்காட்சி கண்டியில் இன்று ஆரம்பம்

கொழும்பு, பெப். 4

இலங்கையின் 62ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் இன்று வியாழக்கிழமை கண்டி தலதா மாளிகை மஹமலுவ பகுதியில் நடைபெறுவதையொட்டி தேசத்திற்கு மகுடம் (தயட்ட கிருள) கண்காட்சியும் கண்டி பள்ளேகல சர்வதேச பௌத்த ஆராய்ச்சி நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதனை இன்று ஆரம்பித்து வைப்பார்.

கண்காட்சியில் 300 அரச, தனியார் கண்காட்சிக் கூடங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. கண்காட்சி 51 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும் சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் பாதுகாப்புத் தொடர்பான கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

# கிராமசேவையாளர் வெற்றிடங்களை நிரப்ப அமைச்சு துரித நடவடிக்கை

கொழும்பு, பெப்.4

வடக்கு, கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் நிலவும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட கிராமசேவையாளர் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன எனப் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன்னதாக மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு உத்தேசித்துள்ளது என அமைச்சின் உயரதிகாரியொருவார் தெரிவித்தார்.

கடந்த வருடத்திலும் பெருமளவிலான கிராம சேவையாளர் வெற்றிடங்களை நிரப்ப முடிந்துள்ளன. அத்துடன் தற்போதுள்ள வெற்றிடங்களை நிரப்பும் வகையில் அதற்கான விண்ணப்பங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு போட்டிப் பரீட்சைகள் மூலம் தகுதியானவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் தற்போது 322 கிராம சேவையாளர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன. இதன்படி கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் 85 வெற்றிடங்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 59 வெற்றிடங்களும், திருகோணமலை மாவட்டத்தில் 43 வெற்றிடங்களும் உள்ளன.

வடக்கில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 43 வெற்றிடங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 25 வெற்றிடங்களும், யாழ்பாண மாவட்டத்தில் 23 வெற்றிடங்களும் மன்னார் மாவட்டத்தில் 31 வெற்றிடங்களும், வவுனியா மாவட்டத்தில்13 வெற்றிடங்களும் உள்ளன. இவற்றை விரைவாக நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறதென அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

(சி)

# ஐ.நாவின் நிதி உதவி அதிகரிப்பு

கொழும்பு, பெப்.4

இலங்கையின் 2010 ஆண்டுக்கான செயற்றிட்டங்களுக்கென ஐக்கிய நாடுகள் சபை தனது நிதியுதவியை அதிகரித்துள்ளது.

அதன்படி ஐக்கிய நாடுகள் சபை உலக உணவுத் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கும் நிதியுதவியை 32 கோடியே 8 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளது.

2010 ஆண்டுக்கான செயற்றிட்டங்களுக்கே இந்நிதியுதவி அதிகரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக உள்நாட்டில் இடம்பெயர்ந்து மீளக்குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கான உணவுத் தேவைகளைக் கருத்திற் கொண்டே இந்நிதியுதவி அதிகரிக்கப்பட்டுள்ளது என தேச நிர்மாண அமைச்சு தெரிவித்தது.

ஐ.நா. உலக உணவுத்திட்ட நிறுவனமானது ஏற்கனவே 2010 ஆம் ஆண்டுக்கென 134 கோடியே 4 லட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலரையே இலங்கைக்கென ஒதுக்கியிருந்தது.

இடம்பெயர்ந்தோரின் உணவுத் தேவைகளைக் கருத்திற்கொண்டு, பின்னர் இந்நிதி 163 கோடியே 3 லட்சத்து 30 ஆயி ரம் அமெரிக்க டொலராக அதிகரிக்கபட் டுள்ளது என உலக உணவுத் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜோஷெல் ரைன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை, உலக உணவுத் திட்டத்தின் கீழ் கல்வி நடவடிக்கைகளின் போதான உணவு, தாய் - சேய் சுகாதார உணவுத் திட்டம் மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட, மீள்குடியேற்றப்பட்ட, யுத்தப் பாதிப்புக்குள்ளான பிரதேசங்களில் வாழும் மக்கள் ஆகியோரைக் கருத்திற் கொண்டே நிதியுதவிகளை வழங்கி வருகின்றது

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல்களை உடனடியாக நிறுத்த வேண்டும்

## சர்வதேசத்தில் முறையிடப்படும் என்றும் எச்சரிக்கிறார் ஜயலத் எம்.பி



கொழும்பு, பெப்.04

''நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு வாக்களிக்கவில்லை. இதனால் அரசதரப்பை சேர்ந்தோரால் பலவித இன்னல்களுக்கு அவர்கள் முகம் கொடுத்து வருகின்றனர்.''

''எனவே இந்த அசாதாரண செயல்களை, அரசியல் பழிவாங்கல்களை அரசதரப்பு அமைச்சர்கள், அதிகாரம் பெற்றோர் உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லாவிடின் இந்த விடயங்களை சர்வதேசத்திற்கு முறையிடுவேன்''

-இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

2010 ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் பேசும் மக்களில் பெரும்பாலானோர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு வாக்களிக்கவில்லை. தாம் விரும்பும் வேட்பாளருக்கு வாக்களிப்பது எமது நாட்டின் அனைத்து பிரஜையினதும் ஜனநாயக உரிமையாகும். ஆயினும் தமிழ்ப் பேசும் மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு வாக்களிக்காததால் பலவித துன்புறுத்தல்கள், இன்னல்கள், அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

விஷேடமாக வடக்கில் வாழும் தமிழ் அகதிகள், தமிழ் வியாபாரிகள், உரிமையாளர்கள், அரச ஊழியர்கள் போன்றோர் பலவித அச்சுறுத்தல்களுக்கும் இன்னல்களுக்குப் முகம்கொடுத்து வருகின்றனர். இதில் பலர் பயத்தால் உயிருக்குப் பயந்து பொலிஸ்நிலையத்திலோ, அரச ஊழியர்களுக்கோ முறைப்பாடு செய்ய முடியாது மௌனமாக துன்புறுகின்றனர். ஆயினும் இவ்வாறான துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்ட பலர் என்னிடம் தொலைபேசி, மின்னஞ்சல், தொலை நகல் மூலம் தொடர்புகொண்டு விவரம் தெரிவித்துள்ளனர். மேலும் அகதிமுகாம்களில் வாழும் மக்கள் மேலும் துன்புறுத்தப்படுகின்றனர்.

உண்மையில் தமிழ் மக்களுக்கு தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள நிலைமை எண்ணெய்க்குப் பயந்து நெருப்பில் விழுந்த கதையாகிவிட்டது. முன்பு யுத்தத் தால் மக்கள் பலவித இன்னல்களுக்கு முகம்கொடுத்து வந்தனர். தங்கள் இருப் பிடங்களை இழந்து, தமது சொந்தங்களை இழந்து அகதிகளாயினர். தற்போது இன்னும் துன்பங்கள், இன்னல்கள் குறைந்தபாடில்லை. தமது ஜனநாயக உரிமையைக் கூட இழந்து ஜனாதிபதி தேர்தலின் போது வாக்கை உபயோகித்ததற்காக துன்புறுத்தப்படுகின்றனர்.

தமிழ் மக்களும் எமது நாட்டின் பிரஜைகள் ஆவார். அவர்களுக்கும் தாம் விரும்பும் வேட்பாளரைத் தெரிவுசெய்யும் உரிமையுண்டு. அத்துடன் அவர்களது இந்த வாக்கு தம்மை பிரதிநிதித்துவப்படுத்தும் பல தமிழ் பேசும் தலைவர்கள் ஒன்றிணைந்திருந்ததால் அவர்கள் தமது இனத்தைச் சேர்ந்தவர்களில் கொண்டுள்ள நம்பிக்கை யில் வாக்களித்துள்ளனர். இது எவ்வாறு தவறாகும். இதற்காக தமிழ்ப் பேசும் மக்கள் துன்புறுத்தப்படுவாராயின் அது எவ்விதத்திலும் நியாயமானதல்ல.

எனவே இவ்வாறு நான் என்றும் நேசிக்கும் தமிழ் மக்கள் துன்புறுத்தப்படுதலை என்னால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இது ஜனநாயகத்தை மீறும் செயலாகும். எனவே அரச தரப்பு அமைச்சர்கள் அதிகாரம் பெற்றோர் உடனடியாக இந்த அசாதாரண செயல்களை அரசியல் பழிவாங்கல்களை உடனடியாக நிறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். இல்லாவிடின் நான் இந்த அசாதாரண செயல்களை சர்வதேசத்திற்கு எடுத்துச் செல்வேன். சர்வதேச ரீதியில் இதற்குரிய நடவடிக்கையை எடுப்பேன் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கையில் எந்த இடத்திலும் தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அநீதிகளை உடனடியாக எனக்கு அறியத்தரவும். உங்கள் தகவல்களின் ரகசியம் பேணப்படும் என்றுள்ளது. (ஏ)

# ஜனாதிபதி மஹிந்தவுடன் போட்டியிட்ட எதிர்க்கட்சிகள் மூக்குடைபட்டுள்ளன

## அமைச்சர் ரிஷாத் தெரிவிப்பு



கொழும்பு, பெப்.04

''ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகச் செயற்பட்ட எதிர்க்கட்சிகள் இன்று மூக்குடைந்து போயுள்ளன.''

-இவ்வாறு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு வாக்களித்த வடமாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் நிவாரணக் கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு ஜனாதிபதியின் நன்றியைத் தெரிவிக்கும் வகையில் அக்கிராமங்களுக்கு விஜயம் செய்தபோது அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியாக தெரிவாகுவார். பத்து இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளால் அவர் வெற்றி பெறுவார் என நாம் உறுதியாக கூறியபோதும் எதிர்க்கட்சியில் உள்ள சிலர் விதண்டாவாதம் புரிந்தனர்.

கடந்த கால தேர்தல் முடிவுகளைவிட இத்தேர்தல் முடிவு ஜனநாயகத்துக்கும் தமிழ், முஸ்லிம் மக்களின் எதிர்காலத்துக்கும் கிடைத்த வெற்றியாகும்.

இன்று மக்கள் அச்சமற்ற சூழ் நிலையில் வாழ்ந்து வருகின்றனர். நாட்டுக்கு நல்ல தலைவரொருவர் ஜனாதிபதியாக இருக்கிறார். இவரது கடந்த நான்கு வருட ஆட்சி காலம் மிகவும் பெறுமதி வாய்ந்தது.

குறிப்பாக இன்று வடபுலத்து முஸ்லிம்கள் தமது தாயாக மண்ணில் சுதந்திரமாக மீள் குடியேற வழி செய்தவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே. இவ்வாறு எமக்கு உதவி செய்த ஜனாதிபதிக்கு முஸ்லிம் மக்கள் அதிகமானவர்கள் தமது வாக்குகளை அளித்துள்ளமை நன்றியுணர்வை வெளிக்காட்டுகின்றது.

இந்த தேர்தலில் ஜனாதிபதிக்கு எதிராக செயற்பட்ட எதிர்க்கட்சி இன்று மூக்குடைபட்டு போயுள்ளது. கடந்த 2005 ஆம் ஆண்டு தேர்தலில் வன்னி மாவட்டத்தில் 16 ஆயிரம் வாக்குகளையே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பெற்றார். இம்முறை அவர் 32 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளை பெற்றுள்ளார். கடந்த தேர்தலில் 33 ஆயிரம் வாக்குகளைப் பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இம்முறை ஐயாயிரம் வாக்குகளை மட்டுமே புத்தளம் மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த மக்களிடத்தில் பெற்றுள்ளது. இது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வீழ்ச்சியை காட்டுகின்றது.

மக்களின் தேவையறிந்து சேவை செய்பவர்களையே மக்கள் அங்கீகரிப்பார்கள் என்பதையே இத்தேர்தல் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது.-என்றார். (ஏ)

# தனியார் துறையினருக்கு வேதன உயர்வு: 43 சம்பள நிர்ணய சபைகளுடன் பேச்சு

கொழும்பு,பெப். 04

தனியார்த்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவது தொடர்பாக சம்பள நிர்ணய சபைகளுடன் பேச்சு நடைபெற்று வருகிறது. அதன்படி தனியார் ஊழியர்களுக்கு 2 ஆயிரம் ரூபா வரை சம்பள உயர்வு கிடைக்கும் என தாம் எதிர்பார்கிறார் என தொழில் திணைக்கள ஆணையாளர் ஜி. எஸ். பதிரண தெரிவித்தார்.

இதன்மூலம் தனியார் துறையைச் சேர்ந்த சுமார் 35 இலட்சம் ஊழியர்களுக்கு 15 சத வீதம் அல்லது அதனை விடக் கூடு தலான சம்பள உயர்வு வழங்கப்பட உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட உள்ள 25,000 ரூபா சம்பள உயர்வுடன் இணைந்ததாக தனியார் ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்க அரசு தீர்மானித்துள்ளது. இதன்படி தனியார் ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்குவது தொடர்பாக 43 சம்பள நிர்ணய சபைகளுடன் பேச்சு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அவர் கூறினார்.

தனியார் ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கும் திட்டத்தின் படி தோட்ட ஊழியர்களுக்கு ஜனவரி 15 ஆம் திகதி முதல் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தனியார்துறை ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளம் 5,750 ரூபாவாகும். ஆனால் பல தனியார்துறை ஊழியர்கள் இதனைவிட பல மடங்கு அதிக சம்பளம் பெறுகின்றனர் எனத் கூறிய அவர், சம்பள நிர்ணய சபைகளுடனான பேச்சுகளின் பின்னர் சம்பள உயர்வு தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றார்

தற்பொழுது சகல தனியார் ஊழியர்களுக்கும் 100 ரூபா முதல் 300 வரை வருடாந்தம் சம்பள உயர்வு வழங்கப்பட்டு வருகிறது எனவும் அவர் கூறினார்.

2009 ஆம் ஆண்டில் தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட வில்லை. ஆனால் சம்பள நிர்ணய சபைகளுடனான பேச்சுகளின் அடிப்படையில் துரிதமாக தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கதிட்டமிடப்பட்டுள்ளது.

தனியார் துறைக்கு சம்பள உயர்வு வழங்கப்படுவதோடு அவர்களுக்கான ஊழியர் சேமலாப நிதி மேலதிக நேரக் கொடுப்பனவுகளும் மற்றும் கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்படவுள்ளன.- என்றார். (ஏ)


## சிட்டை எழுதுநர் தேவை

தட்டாதெருச் சந்திக்கு அருகில் உள்ள விற்பனை நிலையத்திற்கு சிட்டை எழுதுநர் (Bill Clark)பெண்தேவை. விருப்பமுடையோர் நேரில் வரவும்.

வீனஸ் பாம்

பலாலி வீதி, நல்லூர் AGA Office முன்பாக, திருநெல்வேலி.

(94584)


# மனித மேம்பாடும் மெய்யுணர்வைப் பெறுதலும்

மனிதப்பிறவி என்பது ஆதர்சத்தை நிலைநாட்டத் தேவையானது. இன்றைய மனிதன் உள்ளுறையும் தெய்வீகத்தை மறந்துவிட்டு வாழ்க்கை நடத்துகிறான். மனித உயர்குண நலன்கள் மறக்கப்பட்டு மிருக வாழ்க்கை வாழ்கிறான். ஏனெனில் அவனுள் கோபம், காமம், லோபம், பேராசை போன்ற தீய குணங்கள் நிறைந்திருக்கின்றன. மனித வாழ்க்கை என்பது மிகவும் விலைமதிப்பானது.

உள்ளுறை தெய்வீகம் அதனையும் விட உயர்ந்தது. இன்றைய மனித சமுதாயம் சில கடினமான காலத்தைக் கடந்து கொண்டிருக்கிறது. ஏனெனில் உள்ளுறை தெய்வீகத்தின் புனிதத்துவம் புரிந்து கொள்ளப்படாததுதான் காரணம்.நெறிமுறைப்படி வகுக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாட்டுடன் கூடிய வாழ்க்கைக்கான கோட்பாடுகளைப் பின்பற்றாததே இந்த அவலநிலைக்குக் காரணம். தன்னுடைய உண்மையான இயல்பை மறந்து மனிதன் புலனிச்சைகளால் அடையும் சிற்றின்ப சுகத்திலே நாட்டம் கொண்டு உலக விடயங்களிலேயே முழுநேரமும் ஈடுபட்டு வருகிறான். இப்படி உலக விடயங்களில் அடையும் சொற்ப மகிழ்ச்சியில் அவன் அமைதி பெறமுடியுமா? அது முடியாது. கடைசியில் வாழ்க்கையை அதிருப்பதியுடனும், ஏமாற்றத்துடனும் முடித்துக் கொள்கின்றான்.

தூய்மையான, நிரந்தரமான உண்மை வடிவான தெய்வீகத்தைத் தன்னுள் பெற்றிருக்கும் மனிதன் அசுரத் தன்மைகளையும், மிருகத் தன்மைகளையும் பெருக்கிக் கொள்கின்றான். தர்மமே எல்லாவற்றிக்கும் வேர் போன்றது. அதுவே மிக உயர்ந்த நற்பண்பாகும். சீரிய ஒழுக்கம் என்பது தர்மத்தினால் உண்டாவதேயாகும். அன்றாட உலக வாழ்க்கையில் சில சட்ட திட்டங்களைப் பின்பற்றுவது மட்டும் நல்லொழுக்கமாகாது. நல்லொழுக்கம் என்பது நேர்மையானதும், புனிதமானதுமான நன்னடத்தையைப், பின்பற்றுதலேயாகும். நல்லொழுக்கம் நன்னடத்தையில் மலர்வதே. அதுவே மனிதனை சாதனையின் உச்சிக்கு வழிகாட்டும் நெடுஞ்சாலையாகும். சமூகத்தின் சிறப்பு நல்லொழுக்கத்தைச் சார்ந்தே உள்ளது. நல்லொழுக்கமின்றி சமூகமே சீரழிந்துவிடும். சமூகத்தை வளர்ப்பதும், கெடுப்பதும் நல்லொழுக்கமே. ஒழுக்கத்தில் உறுதியாய் நிலைத்திருப்பவனிடம் மட்டுமே முழுமையான ஆளுமை வெளிப்படும். உள்ளே மறைந்து உறையும் தெய்வீகத்தை எவன் வெளிப்படுத்துவானோ அவனுக்கே ஆளுமை என்ற சிறப்புப் பொருந்தும். மனித உருவம் மட்டும் ஒருவனுக்கு முழு ஆளுமையைத் தராது. அவனுடைய நடத்தையே முக்கியமானது. சுயகட்டுப் பாட்டுடன் வாழ்க்கையை நன்னெறிப்படி நடத்துபவர்களே தங்களுக்குள் உள்ள தெய்வீக இயல்பை வெளிக்காட்டும் உண்மை மனிதர்களாக கருதப்படத்தக்கவர்கள். மனு, நளன், ரகு, பலிச்சக்கரவர்த்தி, அரிச்சந்திரன் போன்றவர்களே மனித மேம்பாட்டை வெளிப்படுத்தும் உன்னதமான உதாரணங்கள் ஆவார்கள். இப்படி மனிதனின் சிறப்பியல்புகளை முழுமையாக வெளிப்படுத்திய மகாபுருஷரே இயேசு ஆவார். நபிநாயகமும், முகம்துவும் சிறந்த ஆன்மீக நன்னெறி வாழ்க்கையை வாழ்ந்து காட்டி வரலாற்றுச் சிறப்புபெற்றவர்களே.



இயல்பாகவே தெய்வீகத்தன்மை கொண்ட மனிதன் தன்னுள் ஆத்மாவைக் கொண்டிருந்தும் தீய செயல்களில் ஈடுபட்[illegible] மனித குல[illegible] களங்கம் ஏற்படுத்[illegible] [illegible] துர்ப்பாக்கிய[illegible] காலம் [illegible] இப்படிப் [illegible] கொடுமையான [illegible] அரக்கத்தன[illegible], மிருகத்தன்மை[illegible] ஈடு பட்ட[illegible] ஏதோ ஒரு [illegible] சமாதானம் கூறலாம். ஆனால், இக்காலத்தில் [illegible] முன்னேறி அதனால் பற்பல [illegible] நிகழ்த்தி [illegible] நாகரிகம் மிக்கவர்கள் [illegible] கொள்ளும் மனிதர்கள் இப்படிப்பட்ட கொடிய செயல்களில் நன்றியுணர்வின்றி ஈடுபட்டால் இவர்கள் அரக்கர்களா? மனிதர்களா? என்ற சந்தேகம் எழுகிறது.

## சாயி சிந்தனை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்றைய தேர்தல் மேடைகளில் பிரதிபலிக்கும் இந்தத் திருட்டு ஒப்பந்தக் கதையும் கூட கைச்சரக்கேயாகும். இனவாதத்தைக் கிளறிவிடுவதும் கூட கண்டனத்துக்குரியதாகும். வெட்கம் கெட்ட தனமாக இனவாதத்தைக் கிளறி விடுவதென்பது, இலங்கையின் தேர்தல் வரலாற்றின் கண்டனத்துக்குரிய, கீழ்த்தரமான இலட்சணமொன்றேயாகும் என்ற சாரப்பட அமைகிறது இவ்விமர்சனக் கட்டுரை.**

**ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்புக்கு முன்னர் 'கே.டபிள்யூ ஜனரஞ்சன்' என்பவரால் எழுதப்பட்ட இக்கட்டுரை கடந்த 17 ஆம் திகதிய 'ராவய' பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. தேர்தல் முடிவுகளின் பின்னரும் இக்கட்டுரை கூறும் விடயங்கள் அர்த்தம் நிறைந்தவையாகத் தொனிப்பது கவனிக்கத்தக்கது.**

# தேர்தல் வெற்றிகளுக்காக கிளப்பப்படும் இனவாதம்!

நாடு மீண்டும் இனவாதத்தின் அடித்தளம் வரையில் கொண்டு செல்லப்படுகிறது. எதிர்பார்க்கப்பட்டது போன்றே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் செயற்பாட்டின் கடைசித் துரும்புச் சீட்டாக இனவாதத்தை முதன்மைப்படுத்தும் கருமமே இத்தினங்களில் இடம்பெற்று வருகிறது. இலங்கையின் வாக்காளர்களுக்குக் கேட்டுப் பழகிப்போன 'திருட்டு ஒப்பந்தங்கள்' அல்லது 'இரகசிய ஒப்பந்தங்கள்' என்ற குற்றச்சாட்டு மீளவும் அரங்கத்துக்கு வந்துள்ளது.



இரா. சம்பந்தன்

விமல் வீரவன்ஸ

''நாம் மீட்டெடுத்த நாட்டைத் தாரைவார்த்துக் கொடுப்பதற்கு ஒரு போதும் இடமளிக்கப்பட மாட்டாது. அவ்விதம் நாட்டைத் தாரைவார்த்துக் கொடுப்பதற்காகச் செய்து கொள்ளப்படும் 'திருட்டு ஒப்பந்தங்களை' 27 ஆம் திகதியன்று எமது மக்கள் சுக்குநூறாகக் கிழித்தெறிந்து விடுவார்கள்.'' - இவை, இன்றைய தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆவேச வார்த்தைகளாகும்.

திருட்டு ஒப்பந்தம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, எதிரணி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்ததையடுத்தே இந்தத் 'திருட்டு ஒப்பந்தம்' மற்றும் 'நாட்டைத் தாரை வார்த்துக் கொடுத்தல்' என்ற வார்த்தைகள் கையாளப் படுகின்றன

தரப்பொன்றும் கூட்டமைப்பினுள் வெளிப்பட்டது.

தமிழ்க் கூட்டமைப்புநல்லதொரு வாக்குப்பெட்டி

இங்கு, ஜனாதிபதியின் அரசியல் கையாள்கைக்கு அமைய, தமிழ்க் கூட்டமைப்பென்பது, தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடி நிற்கும் அமைப்பு என்பதை விட அமைச்சர் பதவிகள் ஒன்றையோ, இரண்டையோ வழங்கித் தமக்குக் கீழ்ப்படிவானதாக வைத்துக்கொள்ளக்கூடியதொரு வாக்குப் பெட்டியே என்ற கருத்து நிலவியிருந்தது. ஜனாதிபதியின் கைவந்த கலையாகியிருப்பது, அரசியல் அமைப்புகள் மற்றும் இயக்கங்களை உள்ளக ரீதியில் சிதைத்து அழித்து, அமைச்சர் பதவிகளை மற்றும் இன்னோரன்ன வசதி வாய்ப்புகள், விசேட சலுகைகளைக் காட்டித் தனித்தனியாக நபர்களை ஈர்த்தெடுத்துக் கைக்குள் போட்டுக்கொள்வதேயாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதும் இந்த உபாயங்களுடனான வலைவீச்சு இடம்பெற்றது. அந்த வகையில், கூட்டமைப்பின் ஒட்டுமொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஒருமுகப்படுத்தி சந்திப்பதற்குப் பதிலாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருவர், இருவர் என்றவாறாகத் தனிப்பட்ட சந்திப்புகளுக்கு அழைப்பு விடுத்து, அவர்களுக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்படும் என்பதாகவும், பல்வேறு விசேட சலுகைகள் வழங்கப்படும் என்பதாகவும் ஜனாதிபதி வாக்குறுதிகளைவழங்கியிருந்தார் என்ற விடயத்தைக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரிவித்திருந்தனர். இச் செயற்பாட்டின் ஓர் அங்கமாகவே நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோரின் தனிப்பட்ட ரீதியிலான ஜனாதிபதியுடனான சந்திப்பு இடம்பெற்றது.

யுடனும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டார். அரசியல் அதிகார பலத்துக்கு அல்லாது அரசியல் ஒப்பந்தங்களால் எதையும் செய்ய இயலாதென்பதை அவர் நன்கறிவார்.

மறுபுறத்தில், தனதேயான - தன்னை அடையாளப்படுத்தி நிற்கும் - இறுக்கமான கொள்கைவழி நிலைப்பாடொன்றைக் கொண்டிராத அவருக்கு எந்தவொரு கொள்கை வழி நிற்பவருடனும் தோள் மீது கரம் போட்டு அரவணைத்துக் கொள்வது சிரமத்துக்குரியதுமல்ல. 2005 இல் அனைத்துக் கோணங்களிலுமிருந்த அரசியல் அமைப்புகள் மற்றும் இயக்கங்களை ஒரே முன்னணியாக்கிக் கொள்வதற்கு மஹிந்த ராஜபக்ஷ காட்டி நின்ற திறனாற்றலின் பொதுவான சாதக நிலை அதுவேயாகும்.

இதற்கமைய, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது ஜனாதிபதியை விட்டு விலகிச் சென்றமைக்கான காரணம், ஜனாதிபதியினால் அவர்களது கோரிக்கைகள் ஏற்கப்படாமையே என்ற பிரசாரத்தில் உண்மையிருப்பதாகத் தென்படவில்லை. ஏனெனில், தமிழ்க் கூட்டமைப்பு பகிரங்கமாகவே கோரி நிற்கும் கோரிக்கைகளுக்கு மாற்றில்லாத அதே உருவிலான (உண்மையில் சாதனை மிக்க) பத்துக் கோரிக்கைகளை அண்மையில் தம்மிடம் முன்வைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனும் கூட ஜனாதிபதி இன்றும் ஒரே முன்னணியில் நின்று செயற்படுகின்றமை கவனிக்கத்தக்கதாகும்.

டக்ளஸின் கோரிக்கை

மத்தியில் ஐக்கிய அரசொன்று மற்றும் பிரதேச ரீதியில் சுயநிர்வாகத்துடனான அரசுகள் நிறுவப்படல், அதிஉயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் உடனடியாக அவர்களது வதிவிடங்களில்குடியமர்த்தப்படல், (அதாவது அதி உயர்பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படல் அல்லது சுருக்கிக் கொள்ளப்படல்) பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசர காலச் சட்ட விதிகள் நீக்கப்படல், அரசியல் காரணங்கள் மீது கைது செய்யப்பட்ட, தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கி புனர்வாழ்வளித்தல், தமிழ் மக்களின் மரபுவழி வாழ்விடங்கள் அவர்களுக்கே உரித்தானவை என்பது, மற்றும் ஐக்கிய இலங்கைக்குள் அவர்கள் வாழ்வதை உறுதிப்படுத்துவது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் போன்றவையே டக்ளஸ் தேவானந்தாவின் பத்துக் கோரிக்கைகளுள் உள்ளடங்குபவையாகும்.

இங்கு, மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்றினாலும், ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்றினாலும், சரத் பொன்சேகா நிறைவேற்றினாலும் இத்தகைய கோரிக்கைகளுக்கு இணங்குவதென்பது நாட்டைத் தாரை வார்த்துக் கொடுப்பதாக ஆக மாட்டாது. அது, தென்புலத்தின் அதிகாரப் பேராசைக்காரர்கள் தம்மீது சுமத்திய யுத்தத்தின் அழிவுகளால் திசையறியாது சிதறுண்டு போய் வாழ்ந்துவரும் தமிழ் மக்களுக்குக் குறைந்தபட்சமாகவேனும் செலுத்தும் நட்டஈடாகும் என்றே அவர்கள் கருதுகின்றார்கள்.

ஜெனரல் சரத் பொன்சேகாவிடமிருந்து மட்டுமே தமக்கு நல்லதொரு பதில் கிட்டியதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுகிறது. ஒரு விதத்தில், எதிர்கால அரசியலில் தாம் நேருக்கு நேர் சந்தித்துக் கொள்ள வேண்டி நேர்வது சரத் பொன்சேகாவுடனாகவே இருக்கக்கூடுமென்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கணிப்பிட்டுக் கொண்டிருக்கக்கூடுமென்பதற்கும் கூட இடமில்லாமல் இல்லை.

நம்பிக்கையை ஏற்படுத்துவதற்குத் தவறிய ஜனாதிபதி ராஜபக்ஷ

தமிழ் மக்களுக்குப் பேரழிவை ஏற்படுத்

தெரிகிறது. இன்றைய அளவில் ஜனாதிபதியானவர் அரசியல் மேடைகளில் தமிழ்க் கூட்டமைப்புக்கு எதிராக முன்வைக்கும் கீழ்த்தரமான அபவாதங்களும் நாடு முழுவதிலும் கிளறிவிடப்படும் இனவாதத்தின் தீக்கனல்களும் காட்டி நிற்பது அவரது அந்த எதிர்பார்ப்புச் சிதைந்து போனதன் பிரதிபலிப்பேயாகும்.

பிரபாவுடன் ஜலக்கிரீடை என புனைந்துரைக்கப்பட்ட கதை

வெட்கம் கெட்ட தனமாக இனவாதத்தைக் கிளறிவிடுவதென்பது இலங்கையின் தேர்தல் வரலாற்றிலொரு கண்டனத்துக்குரிய மட்டரகமான இலட்சணமாகும். 2004 பொதுத் தேர்தலின்போது, ரணில் விக்கிரமசிங்க மற்றும் விடுதலைப் புலிகளுக்கிடையில் நாட்டைத் தாரைவார்த்துக் கொடுக்கும் திருட்டு ஒப்பந்தமொன்று நிலவுவதாக மேடைகளில் கூப்பாடு போட்டோருக் கிடையில் ஜே.வி.பியும் உள்ளடங்கியிருந்தது. 2005 இன் ஜனாதிபதித் தேர்தலின்போது நாட்டைத் தாரைவார்த்துக் கொடுக்கும் ரணில் - பிரபா இடையிலான ஒப்பந்தமொன்று செய்துகொள்ளப்பட்டிருப்பதாகவும் மேடைகளில் பிரசாரப்படுத்தப்பட்டது. நடந்து முடிந்த மாகாணசபைகளுக்கான தேர்தல் காலத்தில், பிரபாகரனுடன் ஜலக்கிரீடை புரியும் தென்பகுதி அரசியல்வாதிகளைக் காட்டும் ஒளிநாடாவொன்று கிடைத்துள்ளதாகவும், தேர்தலின் பின்னர் அது காட்சிப்படுத்தப்படுமெனவும் தெரிவித்திருந்த பிரமுகர் டலஸ் அழகப்பெரும ஆவார்.

இந்தத் திருட்டு ஒப்பந்தங்கள் எனக் கூறப்பட்டவற்றைக் கண்ணால் கண்டவர்கள் இதுவரையிலும் எவருமிலர்.

வெட்கக் கேடான அரசியல் துரும்புச் சீட்டு



மஹிந்த

சரத் பொன்சேகா

ரணில் - விக்கிரமசிங்க

2005இல் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகப் புனைந்துருவாக்கப்பட்ட - நாட்டைத் தாரைவார்த்துக் கொடுக்கும் - ஒப்பந்தமென்ற கதை முற்றும் முழுதாகவே கைச்சரக்கே என்பதாக அதன் சிற்பி ஒருவரான மஹிந்த சமரவீரவே பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் பகிரங்கப்படுத்தியிருந்தார். டலஸ் அழகப்பெருமவின் ஜலக்கிரீடை ஒளிநாடா கூட இன்றுவரையில்தென்படவில்லை. ஆனாலும், இவையனைத்துமே சமகால அரசியல் முறைமையினுள் அடங்கும், தேர்தலில் வெல்வதற்கான மட்டுமேயென்பதை - 'இல்லை' 'அவ்வாறில்லை'யெனஆணித்தரமாக மறுத்துரைப்பதற்கு எவரொருவருக்கும் ஆற்றல் இல்லை.

இந்த வெட்கம் கெட்ட தனமான அரசியல் துரும்புச் சீட்டுக்கள் மூலமாக சுமுக நிலையிலிருந்து மானுட விஞ்ஞானத்தைக் காயப்படுத்தி விட்டுள்ள அளவுப் பிரமாணத்தை கருத்தில் கொண்டே அவ்வாறு கூற முடிந்துள்ளது. 2004 இல் கிளறிவிடப்பட்ட இனவாதமானது, அதுவரையில் அரங்கத்துக்கு வந்திருந்த சுமுகநிலை பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் மார்க்கத்துக்குப் பதிலாக அழிவுதரும் யுத்தமொன்று வரையிலும் நாட்டை இட்டுச் செல்லும் பேரினவாத மனோபாவத்தை உருவாக்கியது. 2005 இல் கிளறிவிடப்பட்ட இனவாதத்தின் பெறுபேறு, அந்த யுத்தத்தை நியாயப்படுத்தி உயிரூட்டி விசாலமானதொரு தொகை தமிழ் மக்களுக்கு அழிவையும் மரணத்தையும் மற்றும் சோகத்தையும் வழங்கிவிட்டிருந்தது. இப் பௌதிக அழிவுகளுக்கு மேலதிகமாகக் கணிசமான காலம் வரையிலும் மற்றும் சாதிக்க இயலாத அளவுக்கு வடக்கு மற்றும் தெற்கின் மனித மனங்களைப் பாரதூரமான விதத்தில் வெட்டிப் பிரித்து விடுவதும் கூட அதனோடு இணைந்ததாக நடந்தேறியது.

தமிழரின் அழிவு,சோகத்தை மகிழ்ந்து கொண்டாடுவோர்

2009 மே மாதத்தின் பின்னர், ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டிருந்த காயங்களுக்கு மருந்திட்டு சுகப்படுத்திவிடும் கருமத்தை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் வாய்த்திருந்தது. இருந்தபோதிலும், மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கோ அது தமிழ் மக்களது அழிவை மற்றும்

(18 ஆம் பக்கம் பார்க்க)

என்பதை அனைவரும் அறிவர்.

தாம் ஜெனரல் சரத் பென்சேகாவுக்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படையாகத் தெரிவிப்பதற்கு முன்னர், இந்த ஜனாதிபதியும் சரத் பொன்சேகாவும் பல தடவைகள் தமிழ்க் கூட்டமைப்பைச் சந்தித்துக் கெண்டார்கள் என்பதும் பகிரங்கமானதொரு விடயமேயாகும். அதேபோன்று, யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னரான காலகட்டம் முழுவதிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஜனாதிபதியுடன் பேச்சுகளைமேற்கொண்டுள்ளனர் என்று குறிப்பிட்டுக் கூறக்கூடிய நிகழ்வுகளும் கூட எவரும் அறியாத விடயங்களல்ல.

இந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை ஜனாதிபதியுடன் நெருக்கமாக்கி விடுவதற்கு ஜனாதிபதிக்கு நெருக்கமான சிவில் அமைப்புகள் பகீரதப் பிரயத்தனங்களையும் மேற்கொண்டிருந்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கூட, அரசுடன் இணைந்து கொண்டு, அரசினுள் செயற்படும் தேசியவாதிகளின் பலத்தைச் சமநிலைப்படுத்தவேண்டியுள்ளது என்றும் கூட சிந்தித்தது. ஜனாதிபதி அன்றிருந்த பலமான நிலையினுள் இன்னமும் ஆறு ஆண்டுகளுக்கு நிச்சயமாக அவரே ஜனாதிபதிப் பதவியில் இருப்பாரென்பதால், வழங்கப்படக் கூடிய எதுவொன்றையும் இந்த ஜனாதிபதியிடமிருந்து மட்டுமே பெறமுடியும் என்பதாகவும் கூடக் கூறித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அதனை ஏற்கச் செய்வதற்கும் இந்த சிவில் அமைப்பின் தலைவர்கள் முயற்சி மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பானது செயலிழந்து போனதன் பின்னர் - அதாவது, அது இல்லையென்றானதன் பின்னர் - குழப்பமானதொரு அரசியல் தடுமாற்றத்துக்கு உள்ளாகியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்புதிய வாய்ப்புகள் தொடர்பாகத் தமது கவனத்தைச் செலுத்தி வந்திருந்தனர்.

மேற்படி பேச்சுகளின் பலாபலனொன்றாக, ஜனாதிபதிக்குத் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டியுள்ளதென்ற -அவர் வழங்கும் ஏதேர்வொன்றைத் தமிழ் மக்கள் சார்பாகப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதென்ற - கருத்து நிலைப்பாட்டுடனான

எவ்வாறான போதிலும் இறுதியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பானது ஜனாதிபதியை விட்டுத் தூர விலகிச் சென்றுள்ளது. அவ்விதம் விலகிச் செல்வதற்கு முன்னரும் கூட அவர்கள் ஜனாதிபதியுடன் தீர்க்கமான பேச்சுக்களை மேற்கொண்டிருந்தனர்.

போட்டி எதுவுமற்ற தனது வெற்றிக்கு பெருத்ததொரு தடையை ஏற்படுத்திவிடும் எதிராளியொருவர் தலையெடுத்துள்ள நிலைப்பாடொன்றினுள், வெற்றி குறித்து ஒன்றுக்கு இரு தடவைகள் சிந்திக்க வேண்டியுள்ள பின்புலமொன்றினுள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பைத் தம்பக்கம் திருப்பிக் கொள்வதற்காக ஜனாதிபதி மிகக் கடுமையான முயற்சிகளை மேற்கொள்ளாதிருந்திருக்கக் கூடுமென எண்ண இயலாது.

'தருகிறோம் தம்பி' என்ற ஒப்பந்தக்காரரே இவர்

விசேடமாக 2005 இன் ஜனாதிபதித் தேர்தலில் தமது வெற்றி தொடர்பாகத் தமிழ்

## வாக்களிப்புக்கு முன்பே அம்பலப்படுத்திய 'ராவய'

மக்களின் வாக்குகள் பிரயோகிக்கப்படாது போன விதம் கடுமையானதொரு நிலைப்பாடே என்பது குறித்த கணிப்பீட்டைக் கொண்டுள்ள ஜனாதிபதி, இம்முறை அந்த வாக்குகள் ஏதோவொரு வேட்பாளருக்குச் சாதகமாகிவிடும் அபாயம் குறித்தும் நன்கு அறிந்தேயிருப்பார். அந்த அர்த்தத்தில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பானது ஜனாதிபதியிடமிருந்து விலகிச் சென்றமைக்கு அவர்களது நாட்டைத் துண்டாடும் கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி உடன்படாமையே காரணமாகியிருக்கலாமென்பது வெற்றுவாதமேயாகும். ஏனெனில், ஜனாதிபதியானவர் எதுவொன்றையும் தருவதற்கில்லை எனக் கூறும் பிரமுகரொருவரல்லர். 2005 இல் தம்மோடு கைச்சாத்திட்டுக் கொள்வதற்காக ஒப்பந்தங்களைச் சுமந்துகொண்டு அவரை அணுகிய அனைவருடனும் 'தருகிறேன் தம்பி' என்றவாறு ஒப்பந்தங்களில் அவர் கைச்சாத்திட்டார். அவ்விதமாக ஒரு கரத்தால் ஜே.வி.பியுடன் கைச்சாத்திட்டு மறு கரத்தால் ஹெல உறுமயவுடனும், ஈ.பி.டி.பி.

திக் கொடுத்த யுத்தமொன்றின் பிரதான கர்த்தாக்களான இருவருள் ஒருவருக்கு ஒத்துழைப்பு வழங்கி நிற்கும் பாரதூரம் மிக்க தீர்மானத்துக்கு வருவதற்கு முன்னர் அதை நியாயப்படுத்திக் கொள்ளும் கடும் அவசியம் நிலவும் நிலைப்பாடொன்றின் கீழ், ஜனாதிபதியின் 'எனக்கு உசிதமானது என எது தோன்றுகிறதோ அதைத் தருகிறேன்' என்ற வெளிப்பாட்டினால் மட்டுமே திருப்தியுறுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பாதிருந்திருக்கவும் கூடும். (நம்பிக்கை கொள்ளத்தக்கதாகஒன்றை வெளிப்படுத்தும் குறைந்த பட்ச கொள்கை நிலைப்பாடொன்றைக்கொண்டு செல்வோருடன்மட்டுமே இணக்கப்பாடொன்றுக்கு வர முடியும்)

எவ்வாறான போதிலும், தமிழ்க் கூட்டமைப்பின் ஒத்துழைப்பு தம்மை விட்டும் நீங்கிச் சென்றுள்ளமையானது ஜனாதிபதிக்குப் பெருத்ததொரு அரசியல் மற்றும் தனிப்பட்ட விதத்திலான பின்னடைவை ஏற்படுத்தியுள்ள பாதகநிலையே என்பது தெளிவாகத்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



வாய்ப்புகள் வாயில் தேடி வரும் நாள். வெளியூர்களில் இருக்கும் ஒருவர் எதிர்பாராதவிதமாக உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். உங்களின் சொந்த விடயம் ஒன்றை நண்பர்களிடம் சொல்லி ஆலோசனை கேட்பீர்கள். ஆதாயத்தை எதிர்பாராமல் செய்த காரியம் ஒன்றில் கணிசமான பலன் கிடைக்கும்.

### இடபம்



வழக்கமான சில வேலைகளை ஒத்தி வைத்து விட்டு புதிய வேலைகளில் அக்கறை காட்டுவீர்கள். பிள்ளைகள் வழியில் கணிசமான சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். வயிறு தொடர்பான உபாதைகளைத் தவிர்க்க உணவு விடயங்களில் கவனம் அவசியம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம்.

### மிதுனம்



உறவினர்கள் சிலருக்கு வாக்குக் கொடுத்து விட்டு அதைக் காப்பாற்ற முடியாமல் போகலாம். மனைவி உடல் நலன் தொடர்பான விடயங்களுக்காக கணிசமான பணத்தை செலவிடலாம். சிலர் உங்கள் மூலம் காரியம் சாதித்துக் கொள்ள முற்படுவர். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் அமையும்.

### கடகம்



வீட்டில் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும் நாள். எந்த வேலையையும் மற்றவர்கள் குறை சொல்லாத வகையில் செய்து முடிப்பீர்கள். பற்றாக்குறை நீங்கும் வகையில் உதிரி வருமானங்களைப் பெறலாம். நண்பர்களுடன் சென்று சில வேலைகளை முடிப்பீர்கள். நாடி வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள்.

### சிங்கம்



அலைச்சல்கள் குறைந்து ஓய்வு கிடைக்கும் நாள். மனைவி, குழந்தைகளுடன் சந்தோஷமாக பொழுதைக் கழிப்பீர்கள். உல்லாசமாகப் பேசி சில விடயங்களில் வம்பில் மாட்டிக் கொள்வீர்கள். கொடுக்கல் - வாங்கல்களில் சுமூகமான நிலைமை காணப்படும். விரும்பிய ஒன்றை அடைவதில் தடைகளைச் சந்திக்கலாம்.

### கன்னி



கலகலப்பான அனுபவங்களைப் பெறலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். கடந்த கால அனுபவம் ஒன்றை நினைத்து பார்த்து புதிய முயற்சிகளில் இறங்குவீர்கள். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. மகிழ்ச்சியான செய்திகளைக் கேட்கலாம்

### துலாம்



வீண் பிடிவாதங்களை தவிர்க்க வேண்டிய நாள். மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். பெற்றோர் வழியில் சிறு பிரச்சினைகளுக்கு உட்படலாம். சிலர் மீது கடுமையான கோபம் வந்தாலும் அதை வெளிக்காட்டாமல் நடந்து கொள்வீர்கள். குடும்ப உறுப்பினர்களிடம் கடுமையாக நடந்து கொள்வீர்கள்.

### விருச்சிகம்



வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி, சந்தோஷம் தருவதாக அமையும். உறவினர் ஒருவருக்கு எதிர்பாராதவிதமாக உதவிகள் செய்வீர்கள். பழைய நண்பர் ஒருவரைச் சந்திக்கலாம். ஒரு வகையில் ஏற்பட்ட செலவுகள் மற்றொரு வகையில் வரும் வரவுகளால் சரியாகும். மகிழ்ச்சியான அனுபவங்களைப் பெறலாம்.

### தனுசு



பொறுமையாக செயல்பட்டு பெருமை சேர்க்கும் நாள். உடனே முடிக்க வேண்டிய வேலை ஒன்றால் அலைச்சல், திரிச்சல் ஏற்படும். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். தெரிந்தே சுய நலத்திற்காக சில தவறுகளைச் செய்ய முற்படுவீர்கள். ஒருவருக்கு கைமாத்தாக கொடுத்த பணம் திரும்ப வரும்.

### மகரம்



சோர்வு, சோம்பல் அதிகரிக்கும். பிள்ளைகளுக்கு முக்கியமான விடயங்களில் நல்ல ஆலோசனை சொல்வீர்கள். எதேச்சையாக நடக்கும் சில சம்பவங்களால் மனதில் சந்தோஷம் அதிகரிக்கும். நண்பர் ஒருவருக்காக மற்றொரு நண்பரிடம் உதவி கேட்பீர்கள். உடல் நலம் இல்லாமல் இருக்கும் ஒருவரைப் பார்க்கலாம்.

### கும்பம்



சிக்கனமாக இருக்க நினைத்தாலும் ஏதாவது ஒரு வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். எங்காவது வெளியில் செல்லும் நேரத்தில் யாராவது வந்து அவர்களின் பிரச்சினைகளைச் சொல்லி தொந்தரவு கொடுக்கலாம். மற்றவர்களுக்காக நீங்கள் அலையலாம். கடும் வேலை நெருக்கடிகளுக்கு உட்படலாம்.

### மீனம்



எதிலும் தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். பிரியமான நண்பர்கள், உறவினர்களின் சந்திப்பு நிகழும். இழுபறியாக இருந்த காரியம் ஒன்று சுலபமாக முடிவுக்கு வரும். வெளிநாட்டுத் தொடர்புடையோர் நல்ல செய்திகளைக் கேட்கலாம்.

---


**அருள் மிகு தொட்டில் கந்தன் தேவஸ்தானம், கெருடையம்பதி**
**மண்டலாபிசேக விஞ்ஞாபனம்-2010**
**9ஆம் நாள் உற்சவம் 04.02.2010 வியாழக்கிழமை**

மேற்படி உபயகாரர்கள் சார்பாக அன்றைய தினம் மாலை 6 மணி தொடக்கம் 7மணிவரையும் விசேடநிகழ்வுகளாக தவில் நாதஸ்வரக் கச்சேரியும் இரவு 7 மணிதொடக்கம் இரவு 10 மணிவரையும் 'ராகம்ஸ்' இசைக் குழுவினரின் இன்னிசை கானமும் இடம் பெறக் காத்திருக்கின்றன. எனவே அடியார்கள் அனைவரையும் இந்த நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேற்படி நிகழ்வுகள் யாவும் ஆலய ஆதீன கர்த்தாவும் பிரதம குருமார்களுமாகிய சிவஸ்ரீ பால உலககுருநாதக் குருக்கள் சிவஸ்ரீ பால முத்துச்சாமி குருநாதக் குருக்கள் தலைமையில் அன்றைய உபயகாரர்களாகிய சிவஸ்ரீ உலகவிக்கினேஷ்வரக் குருக்கள் கமலினி அவர்களால் நடத்தப்படும்.

ஆதீன கர்த்தா - பாலசுப்பிரமணியக் குருக்கள்
உபயகாரர் - உலகநாதன் ஐயா - புவனேஸ்வரி குடும்பத்தினர். (யாழ்ப்பாணம்)
அழகரெட்ணம் - பவானி குடும்பத்தினர் (மட்டக்களப்பு)

(94583)



**9ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 15 ★ 08 ★ 1932



மறைவு 14 ★ 01 ★ 2001

**அமரர் ஆறுமுகம் முத்தையா ஐயாத்துரை**
(ஓய்வு பெற்ற கிராம அலுவலர்)
திதி: சஷ்டி (04.02.2010)

எமதன்பு குலவிளக்கே அப்பா! நீங்கள்
எம்மை விட்டகன்று ஆண்டுகள் ஒன்பது
ஓடிவிட்டதன்றோ! - உம்
திருவதனம் எம் கண்ணில் - உம்
நினைவுகள் என்றும் எம் நெஞ்சில்
நீர் மட்டும் இல்லையே எம்முடன்...

9/1, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(94572)


## உரும்பிராயில் சைவ சமயப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.4

உரும்பிராய் கிழக்கு கண்ணகா ஸ்ரீ பரமேஸ்வரி கண்ணகை அம்மன் தேவஸ்தானத்தினால் நடத்தப்படும் சைவசமய போட்டி எதிர்வரும் 6ஆம், 7ஆம் திகதிகளில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் காலை 8மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

உரும்பிராய் இந்துக்கல்லூரி, உரும்பிராய் சைவத் தமிழ் வித் தியாலயம், வசாவிளான் மகா வித்தியாலயம், உரும்பிராய் சந்தி ரோதய பாடசாலை ஆகியவற்றில் படிக்கும் மாணவர்கள் இதில் பங்குபற்ற முடியும் என்றும் தனியார் கல்வி நிலையத்தில் படிக் கும் மாணவர்களும் பங்குபற்றலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள் ளது.

போட்டிக்கான விவரங்களை ஆலய பரிபாலன சபையினரிடம் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ)


**சாரங்கன் பிளாஸ்ரிக் தொழிலகம்**

உடைந்த சகலவிதமான வாகன பிளாஸ்ரிக் பொருள்கள் உரியமுறையில் ஒட்டிக்கொடுக்கப்படும், அத்துடன் சகலவிதமான பூச்சாடிகள், டிசைன் பூ கற்கள், தூக்குக்கல் போன்றவற்றையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சாரங்கன் பிளாஸ்ரிக் கட்டடத் தொழிலகம்,
கண்டி வீதி, மீசாலைச் சந்தி, சாவகச்சேரி.
T.P.: 071 2733487



**தினசரி யாழ். - கொழும்பு**
**கொழும்பு - யாழ்.**

வான் சேவை தொலைபேசியூடாகவே பதிவுகளை மேற்கொள்ளலாம்.

★ ராஜின், நவாலி வீதி,
ஆனைக்கோட்டை

0212222867,
0776090926

(94454)


## கடலோட்டுக் கல்லூரி பயிற்சி நெறிகள்

வண்ணை,பெப்.4

யாழ்.கடலோட்டு மற்றும் இயந்திரவியல் கல்லூரியில் 2010ஆம் ஆண்டுக்கான கடல் வரைபடம் வாசித்தல், தொடர்பாடல் மற்றும் ஜீ.பி.எஸ் செய்மதி உபகரணம் இயக்குதல் ஆகிய தொழில்நுட்பப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக உதவிப்பணிப்பாளர் இ.செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

பயிற்சி நெறிகளில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் இம்மாதம் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக 372, பங்ஷால் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் மேற்படி கல்லூரி வளாகத்தில் பதிவுகளைச் செய்து கொள்ளலாம் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

(ஓ-160)


**மதிவதனன் - ஜெயச்சித்திரா சோதரரின்**
**15ஆம் ஆண்டு ஞாபகார்த்த மாபெரும்**
**விளையாட்டுப் போட்டிகள், கலைப் போட்டிகள் ....**

Carrom opens - Singles, Doubles &
mixed Doubles
T.T opens Singles, Doubles &
mixed Doubles

கரம், மேசைப் பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றும் ஆண், பெண் இருபாலாரும் அதற்குரிய விண்ணப்பப் படிவங்களைக் கீழ் குறிப்பிடும் முகவரியில் இப்போதே பெற்றுக்கொள்ளுங்கள். விண்ணப்ப முடிவுத் திகதி 09.02.2010, போட்டிகள் இம்மாதம் 14ஆம் 15ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

**கலைப் போட்டிகள்**

1.பாட்டுக்குப் பாட்டு
2.தேன் இசை மழை (தனிப்பாடல்)
3.அறிவிப்பாளர் தெரிவுப் போட்டி
4.கலக்கப் போவது யாரு (காமடி கிங் & குயின்)

சிரிப்பூட்டும் பகிடித் துணுக்குகள் மற்றும் தென்னக நடிகர்கள், கலைஞர்கள், அறிஞர்கள்போல் பேசும்திறன் கொண்டவர்கள் பங்கு பற்றலாம். கலைப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் நீங்கள் பங்குபற்ற விரும்பும் நிகழ்ச்சியைக் கடிதமூலம் தெளிவாக எழுதி அனுப்புங்கள். விண்ணப்ப முடிவு திகதி 09.02.2010.

அனுப்ப வேண்டிய முகவரி
மணிக்குரல் V.S சற்குணன்
இல.52, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 7535

*கலைப்போட்டிகளுக்குப் பின்னணி இசை அகில இலங்கை புகழ் பூத்த சாரங்கன் இசைக்குழுவினர்

Proprietor R.V.வாசன்

விளம்பர அனுசரணை: அசோகா நகை அகம்,
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன நிலைகளைப் பயனுள்ள விதத்தில் மாற்றிக் கொள்வோம்

வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் நாம் பல்வேறு சம்பவங்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் எமது மனதில் பல்வேறு எண்ணங்கள் வெளிப்படுகின்றன. நாம் சில எண்ணங்களுக்குச் சார்பாகச் செயற்படுவோம். அவ்வாறான வெளிப்பாடுகள் சில வேளைகளில் பொருத்தமற்றதாகலாம். எனவே அன்றாட வாழ்வில் எதிர் நோக்குகின்ற பல்வேறு நிகழ்வுகளின்போது வெளிப்படும் மனநிலையை அறிந்துகொண்டு கட்டுப்பாட்டுடன் செயற்படவேண்டும்.

வாழ்க்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு சுபாவங்களை மனதில் உணரக் கூடியதாய் இருந்திருக்கும். மனதில் ஏற்படும் மனவெழுச்சிகளை சரியாகச் செயற்படுத்தாவிட்டால் அவை வேகமாகச் செயற்பட்டு எதிரான விளைவுகளையும் உண்டாக்கலாம். உதாரணமாக கோபம் ஏற்படும்போது அதைக் கட்டுப்படுத்தாவிட்டால் கொலை கூட நிகழ வாய்ப்புண்டு.


மனவெழுச்சிகள் காரணமாக இரத்தோட்டம் வேகமடைதல், ஹோர்மோன் சுரத்தல் போன்ற இரசாயன மாற்றங்கள் உடலில் நிகழுகின்றன. நாம் எமது மனநிலைகளை எமக்கு சாதகமாக்கிக் கொண்டு பயனுள்ள விடயங்களில் ஈடுபடுவதன் மூலம் மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

கோபம் ஏற்படும்போது அவ்விடத்திலிருந்து விலகிச் சென்று மனம் அமைதியடையும் இடத்திற்கு அல்லது பூங்கா, ஓடைகளின் ஓரம், நீர்வீழ்ச்சிகள் போன்ற இடங்களுக்கு செல்வதன் மூலம் கோபத்தைத் தணிக்கலாம். மனதில் உள்ள சோகம் குறைய அந்திமாலைப் பொழுதில் காற்று வீசுவதையும் இரவில் நிலவு தோன்றுவதையும் அவதானிக்கலாம். கவலையை அல்லது கோபத்தை குறைக்க சத்தத்துடன் பாடலைப்பாடுதல், நல்லபத்திரிகைகள், புத்தகங்களை வாசித்தல், எதனையாவது உற்பத்தி செய்தல் போன்ற நல்ல விடயங்களில் ஈடுபடலாம்.

மனநிலைகளைப் பயனுள்ள விதத்தில் மாற்றிக் கொள்ள சில விடயங்களில் ஈடுபடலாம். உதாரணமாக சித்திரம் வரைதல், சமய அனுஷ்டானங்களை மேற்கொள்ளுதல், வணக்க ஸ்தலங்களுக்கு செல்லல் போன்றவற்றைக் குறிப்பிடலாம், வேலையைத் திட்டமிட்டுச் செய்வதன் மூலம் மனத் தாக்கங்களைக் குறைத்துக் கொள்ளலாம். மனவெழுச்சிகளை கட்டுப்படுத்திக் கொள்ள தியானம், யோகா போன்ற பயிற்சிகளை மேற்கொள்ளலாம். எனவே நாம் மனநிலைகளைப் பயனுள்ள விதத்தில் மாற்றியமைத்து வளமாக வாழ்வோம்.

உ.தாளசீகா
யா/ கோக்குவில் இந்துக் கல்லூரி.

# மனித நேயம்



மனித நேயம் வளர்த்திடுவோம்- நாம்
நல்லவராய் நாட்டுக்கு உழைத்திடுவோம்
சாதனை மிகுந்த சமுதாயத்தை-நாம்
உருவாக்க முயற்சி செய்வோம்

உறவில் உண்டு சகோதரத்துவம்
சக மாணவர்களிடமும் உண்டு சகோதரத்துவம்
சகோதரத்துவத்தை பேணடா மானிடா- நீ
எப்போதும் உத்தமனாய் வாழ்வாய்

அன்பிற்கு மூன்றெழுத்து- அதை
அரவணைக்கும் அன்னைக்கு மூன்றெழுத்து
அன்புடனே வாழ்வோம் நாம்
வையகத்தைப் பேணுவோம்.

திசை நாதன்- சாரங்கன்
யாழ்/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி,
தரம்-9 பி.

# விரக்தியின் விளிம்பில்!

கால்கள் தடுமாற- என்
நெஞ்சமோ பதை பதைக்க
மனமோ ஏங்கித் தவிக்க- என்
விழிகளோ திக்குத்திசையறியாது
கண்ணைக்கட்டி காட்டில் விட்டது போல்
திசையறியாது வழிமாறிச் செல்ல-என்
தலையோ என்னையறியாமல் விறுவிறுக்க
உணர்வுகளோ செயலற்றுப் போக-எந்தன்
உடலோ மெல்ல மெல்லத் தளர்வடைய
விரக்தியின் விளிம்பில் தொடர்கிறது என் பயணம்
மூசி வரும் அந்தக் கடலலையும்
வீசிவந்து என்மேனியைத் தொட்டுச் செல்லும் தென்றலும்-என்
இரு கரங்களாலும் தொட்டுவிட எண்ணி
அழகு பார்த்து நான் ரசித்த அந்த வானமும்
சலசலவென ஓடும் அந்த நீர் வீழ்ச்சியும் -இவை
அனைத்தையும் பார்த்தவுடன் ஏன் எனக்கிந்தத் தயக்கம்?
விரக்தியின் விளிம்பில் நிலைதடுமாறி
பயணிப்பதால்தான் இந்த நிலையோ!

நவரத்தினம் சதீஸ்,
கந்தர்மடம்.




## கேள்விக்கென்ன பதில்?- 57இன் சரியான விடை

318.4 கிலோ மீற்றர்.

### கேள்விக்கென்ன பதில்?- 57இல் பரிசு பெறுவோர்

1. செ.செந்தூரன், 41/1, பிரம்படி வீதி, கொக்குவில்
2. வே.குமாரசுவாமி, பரமநாதர் வளவு, கரவெட்டி
3. கு.அர்ச்சனா, இல.280, அரசடி வீதி, கந்தர்மடம்.

## கேள்விக்கென்ன பதில்?- 58இன் சரியான விடை

I.ஊதாண்ட் II.பர்மா

### கேள்விக்கென்ன பதில்?- 58இல் பரிசு பெறுவோர்

1. சு.சோபியா, தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்
2. வ.க.ஜெயபாலன், 82/29-34 யாழ்.வீதி, யாழ்ப்பாணம்
3. கே.இராஜகோபால், அடைக்கலம்தோட்டம், வட்டுக்கோட்டை.

## கேள்விக்கு என்ன பதில்?-59

வரலாற்று ஆதாரங்களின் படி உலகில் முதலாவது பேரரசன் யார்?
இவருடைய பேரரசு எங்கு அமைந்துள்ளது?
(சரியான விடையை 11.02.2010 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்).

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.


பெயர் :-......................................
முகவரி :-......................................
:-......................................
........................ ......................................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# சிந்திக்கச் சில துளிகள்...

* பெருமைக்காரன் கடவுளை இழக்கிறான்
  பொறாமைக்காரன் நண்பனை இழக்கிறான்
* சிலர் பிறரைப் பார்த்து கற்பர். சிலர் ஏமாந்த பின் கற்பர்
* மனிதனின் கெட்ட குணங்களை வெறுத்து விடு
  மனிதனை வெறுக்காதே
* சதா தள்ளாடுவதை விட ஒரு முறை விழுந்து விடுவது நல்லது
* ஒருவரையும் நம்பாமல் இருப்பது ஆபத்து
  அனைவரையும் நம்புவது
  பேராபத்து
* பகைவனின் சிரிப்பை
  விட நண்பனின் கோபம் நன்று.
* வாழ்க்கையில் வெற்றி பெறத் தேவை
  சுறு சுறுப்பும் ஊக்கமும்தான்.
* உன்னை விட ஒரு உயர்வான
  மனிதனைத் தவிர மற்றவர்களுடன்
  ஒரு போதும் நட்பு க்
  கொள்ள வேண்டாம்
* சுறுசுறுப்பாய் இருங்கள்
  சுதந்திரமாயிருங்கள்
  சிக்கனமாய் இருங்கள்.

கு.கல்யாணி
உடுவில்.



# இந்த வாரம் வரலாற்றில்

**ஜனவரி 29**



'கார்ல் பென்ஸ்' என்பவரால் வடிவமைக்கப் பட்ட, பெற்றோலை எரிபொருளாகப் பயன்படுத்தி ஓடும் கார் 1886 ஆம் ஆண்டு ஜனவரி 29 ஆம் திகதி வெற்றிகரமாக வீதிகளில் செலுத்தப்பட்டது.

**ஜனவரி 30**

ரஷ்ய நாட்டைச்சேர்ந்த பிரபல எழுத்தாளரும், நாடகவியாளருமான அன்ரன் செக்கோவ் 1860 ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் திகதி பிறந்தார்.



**ஜனவரி 31**



1976 ஆம் ஆண்டு ஜனவரி31 ஆம் திகதி உலக சனத்தொகை 4 பில்லியனை எட்டியது. இதன் பின்னர் உலக சனத்தொகை அதிகரிப்பு வீதம் இரட்டிப்பானமையும் குறிப்பிடத்தக்கது.

**பெப்ரவரி 01**

ஆங்கில மொழியின் பரவுகைக்கும் வளர்ச்சிக்கும் வித்திட்ட 'ஒக்ஸ் போர்ட்' ஆங்கில அதிகாரியின் முதலாவது பிரதி 1884 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி வெளியிடப் பட்டது.




**பெப்ரவரி 02**



பெண் விடுதலைப் போராட்டங்களுக்குக் கிடைத்த வெற்றிகளில் ஒன்றாக, 'லீச் ரென்ஸ்ரீன்' பகுதியிலுள்ள பெண்கள் 1986 ஆம் ஆண்டு பெப்ரவரி 2 ஆம் திகதி முதற் தடவையாக வாக்களிப்பில் கலந்து கொண்டனர்.

**பெப்ரவரி 03**

சோவியத் யூனியனால் தயாரிக்கப்பட்டு விண்ணுக்குச் செலுத்தப்பட்ட 'லூனா-9' என்னும் ஆள்களற்ற விண்கலம் 1966 ஆம் ஆண்டு பெப்ரவரி 3 ஆம் திகதி சந்திரனில் இறங்கியது. இதன் மூலம் சந்திரனில் இறங்கிய முதலாவது விண்கலம் எனும் பெருமையை இது பெற்றது.



**பெப்ரவரி 04**



1945 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி நேச நாடுகளின் தலைவர்களான ரூஸ் வெல்ட், வின்ஸ்டன் சேர்ச்சில், ஸ்டாலின் ஆகிய மூவரும் கிரிமியாவிலுள்ள 'யால்ட்டா' என்னும் நகரில் சந்தித்துப் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டணியில் அதிரடி மாற்றம்? இந்திராவின் பாணியில் ராகுல்

புதுடில்லியில் தேர்தல் கமிஷன் விழாவில் நடந்த சோனியா - ஜெயலலிதா சந்திப்பு, அரசியல் களத்தில் பல்வேறு எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தில் புதிய கூட்டணி என்ற இலக்கை நோக்கி காங்கிரஸின் பயணம் தொடங்குவதற்கு இந்தச் சந்திப்பு அச்சாரமாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.


ராகுல் காந்தி

தேர்தல் கமிஷனின் பவள விழாவில் பங்கேற்க வருமாறு, அனைத்துக் கட்சிகளுக்கும் தேர்தல் கமிஷன் அழைப்பு அனுப்பியது. அந்த வகையில், அ.தி.மு.க., பொதுச் செயலர் ஜெயலலிதாவிற்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. அதோடு விவகாரம் முடிந்திருந்தால் பரவாயில்லை.

காங்கிரஸ் அனுதாபி என எதிர்க்கட்சிகளால் விமர்சிக்கப்படும், தலைமைத் தேர்தல் கமிஷனர் நவீன் சாவ்லா, ஜெயலலிதாவை இருமுறை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விழாவில் பங்கேற்க அழைப்பு விடுத்தார். மற்றத் தலைவர்களைப் போல் அல்லாமல் ஜெயலலிதாவிற்கு கிடைத்த இந்தச் சிறப்பு அழைப்பு குறித்த தகவல் வெளியானதும், அரசியல் அரங்கில் பரபரப்பும் பற்றிக் கொண்டது. சோனியாவின் முழு சம்மதத்துடன்தான், ஜெயலலிதாவுக்கு, நவீன் சாவ்லா அழைப்பு விடுத்துள்ளார் என்ற கருத்து, அரசியல் வட்டாரத்தில் எழுந்தது. சாவ்லாவின் சிறப்பு அழைப்பினை ஏற்று ஜெயலலிதா விழாவில் பங்கேற்றார். சோனியாவைச் சந்திப்பாரா, அரசியல் பேசுவாரா, கூட்டணி மாறுமா என, அடுத்த கட்டமாக எதிர்பார்ப்புகள் எழுந்தன.

''சோனியாவைச் சந்தித்தேன். இருவரும் நலம் விசாரித்துக் கொண்டோம்'' என, ஜெயலலிதா கொளுத்திப் போட்ட வெடி, அரசியல் வட்டாரத்தை மேலும் சூடேற்றியுள்ளது.

கடந்த 12 ஆண்டுகளுக்கு பின்னர் சோனியா, ஜெயலலிதா வெறும் ஐந்து நிமிடங்கள் சந்தித்துப் பேசியிருந்தாலும், அந்தச் சந்திப்பு பல அரசியல் கணக்குகளுக்கு வழி வகுத்துள்ளது. தி.மு.க., ஆதரவு இல்லாவிட்டாலும்,

## ஆட்சியில் பங்கு கேட்கத் தயாராகிறது காங்.

மத்தியில் ஆட்சி தொடரும் என்ற நிலையிலும், தி.மு.க. அமைச்சர்கள் மத்திய அமைச்சரவையில் கோலோச்சி வருகின்றனர். ஆனால், தமிழகத்தில் ஆட்சியில் பங்கு என்ற பேச்சை எடுக்கவே தி.மு.க. தயாராக இல்லாத நிலை நிலவுகிறது. தமிழகத்தில் காங்கிரஸுக்கும் அரசு அதிகாரம் வேண்டும் என்ற காங்கிரஸாரின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்ற இந்தச் சந்திப்பு அச்சாரமாக அமையும் என்ற எதிர்பார்ப்பு, தமிழக காங்கிரஸ் நிர்வாகிகளிடம் ஏற்பட்டுள்ளது.


சோனியா

இதுகுறித்து மூத்த காங்கிரஸ் நிர்வாகி ஒருவர் கூறியவை வருமாறு:-

தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சியை அமைத்தே தீருவேன் என ராகுல் சபதம் எடுத்துள்ளார். இதற்காக தனது பாட்டி இந்திராவின், 'பார்முலா'வை பயன்படுத்த அவர் திட்டமிட்டுள்ளார். வரும் சட்டசபைத் தேர்தலில் 'கூட்டாட்சி' ஒப்பந்தத்திற்கு உடன்பட்டால் தி.மு.கவுடன் கூட்டணியில் நீடிப்பது என அவர் முடிவு செய்துள்ளார். இல்லாவிட்டால், அ.தி.மு.கவுடன் கூட்டணியை உருவாக்கி, அதே ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதுதான் ராகுலின் திட்டம். இத்திட்டத்திற்கு 'ஆர்' பிளான் என பெயர் வைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் சமீபத்தில் நடந்த வருமான வரி ரெய்டு, சோனியா - ஜெயலலிதா சந்திப்பு போன்ற நிகழ்வுகள் அனைத்தும் இந்தத் திட்டத்தின் ஓர் அங்கமாகவே பார்க்கிறோம். மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு தி.மு.க. ஆதரவோ, தயவோ தேவையில்லை.

மத்திய அரசில் இடம்பெற்றுள்ள சில தி.மு.க. அமைச்சர்களால், அரசுக்கும் காங்கிரஸுக்கும் தேவையில்லாத களங்கமே ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் காங்கிரஸ் ஆதரவுடன், தி.மு.க. ஆட்சி நடக்கிறது. ஆனால், காங்கிரஸுக்கு அமைச்சரவையில் இடம் தரவில்லை.

அடுத்த தேர்தலில், கூட்டாட்சிக்கு சம்மதிக்கும் கட்சியுடன் கூட்டணி அமைக்க வேண்டும் என்ற மன ஓட்டத்தில்தான், தொண்டர்களும் உள்ளனர். இதைப் பிரதிபலிப்பதுபோல்தான் லோக்சபா தேர்தலுக்கு முன்னர் 'அ.தி.மு.க.விடம் ஏன் கூட்டணி வைக்கக் கூடாது? என ராகுல் குறிப்பிட்டார்.

இளைஞர் காங்கிரஸ் தேர்தல் தொடர்பாக, தமிழகத்திற்கு ராகுல் மூன்று நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது முதல்வர் கருணாநிதியை அவர் சந்திக்க விரும்பவில்லை. தேர்தல் கமிஷன் விழாவில் சோனியா, ஜெயலலிதா, மம்தா பானர்ஜி ஆகிய மூன்று பேரும், முதல் வரிசையில் உட்கார வைக்க முதலில் முடிவு செய்யப்பட்டிருந்தது. இந்தத் தகவல் தி.மு.கவிற்கு தெரிய வந்த நிலையில், கடும் வற்புறுத்தலால் இந்த முடிவு மாற்றப்பட்டது; சோனியா மேடையில் அமர வைக்கப்பட்டார்.


ஜெயலலிதா

நெல்லை மாவட்டத்தில் நடந்த வீரவணக்க பொதுக் கூட்டத்தில் பேசிய தி.மு.க., மூத்த அமைச்சர் ஒருவர், யார் எந்தக் கூட்டணியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தி.மு.கவை எந்தக் கொம்பனாலும் அசைக்க முடியாது. தேர்தலில், 200 தொகுதிகளில் தி.மு.க. வெற்றி பெறும் என ஆவேசமாகப் பேசியுள்ளார். சட்டசபை தேர்தல் நெருங்கும் வேளையில் 'ஆர்' பிளான் முழுமையாக செயற்படுத்தப்படும்.

ஆட்சியில் பங்கு என்ற உறுதிமொழியை கொடுக்கும் கட்சியுடன்தான், தமிழகத்தில் காங்கிரஸ் அணி சேரும். அதற்கான வாய்ப்பை தேர்தல் கமிஷன் பவள விழா ஏற்படுத்தித் தந்துள்ளது - என்றார். ✱

---

# தேர்தல் வெற்றிகளுக்காக....

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சோகத்தைப் பாற்சோறு உண்டு கொண்டாடி மகிழும் வாய்ப்பாகி விட்டிருந்ததேயல்லாது, அதற்கு மேற்பட்ட கருமமெதற்குமேயான சந்தர்ப்பமாகியிருக்கவில்லை.

ஆனால், ஜனாதிபதியோ தாம் சுகப்படுத்திவிட்ட காயம் மீளவும் புண்ணாக்கப்படுவதாக மேடைகள் தோறும் கூறி வருகிறார். இராணுவப் பலத்தைக் கொண்டு அடிபணியச் செய்து விட்டுள்ளதால் மட்டும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்த்துவிடப்பட்டுள்ளன என்ற தவறான கணிப்பீட்டில் அவர் உள்ளாரென்பது இதிலிருந்து தெரிகிறது. ஆனால், காயம் இன்னமும் சுகமாகவில்லையென்பதும், காயத்தின் காரணமாகப் பக்கவிளைவுகளாகத் தோன்றியுள்ள நோய் இலட்சணங்கள் மட்டுமே 'பிளாஸ்ரர்'களால் மூடிமறைக்கப்பட்டுள்ளன என்பதுமே யதார்த்தமாகும்.

அந்த விதத்திலான யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு எட்டுமாத காலம் கழிந்து போயிருந்தாலும், அக்காலகட்டம் முழுவதிலுமாக அவர் தம்மை மன்னராக உருவகப்படுத்தி, பெருமெடுப்பில் வார்த்தை ஜாலமாடி, ஒன்றன்பின் ஒன்றாகத் தேர்தல்களை நடத்தி, எதிர்க்கட்சிகளை உண்டு, இல்லை என்றாக்கிவிடும் விதமாகச் செயற்பாட்டாரேயன்றி, காயத்தை நிரந்தரமாகத் சொஸ்தப்படுத்தி விடுவது தொடர்பான ஒரு சிறிய நடவடிக்கை தானும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் முன்னெடுக்கப்படவில்லை என்பதே கவலைக்குரிய உண்மையாகும்.

தற்போது கடும்போக்குப் பகையுணர்வை விதைத்துவிடும் விமல்வீரவன்ஸ போன்றோர் மற்றும் அரசின் - அரசிற்கு சார்பான - ஊடகவியலாளர்களின் முழுமையான ஒத்துழைப்புடன் ஜனாதிபதியினால் உச்சாடனம் செய்யப்படும் 'சரத் பொன்சேகா - ரீ.என்.ஏ. திருட்டு ஒப்பந்தமும்' கூட முழுமையான கைச்சரக்கு ஒன்றே என எண்ணுவதற்கு இந்தப் பழைய அனுபவப்பாடங்கள் தேவைக்கும் அதிகமானவையே.

### புகைச்சுருட்டு நடவடிக்கை

தமது குடும்ப ஊழல்கள் பற்றிச் சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளுக்கு எதிராகக் கடந்த காலத்தில் ஜனாதிபதி முன்வைத்த நியாயம், அது, எதிர்க்கட்சியின் புகைச்சுருட்டு நடவடிக்கையே என்பதாகும். இன்று, ஜனாதிபதியும் கூட புகைச்சுருட்டு நியாயத்தை முன்வைத்துள்ளார். இருந்தபோதிலும், எமது நாட்டு மனிதர்கள் கடந்த காலத்திலிருந்து பாடங்களை கற்றுக்கொள்ளாதிருப்பதே துரதிஷ்டவசமானதாகும்.

இன்றைய அரசியல் புறச்சூழல் தொடர்பாகத் தவறான இனவேற்றுமைக் கருத்தில் மூழ்காது நோக்குவோமானால், புறம்பானதொரு இராச்சியம் தொடர்பான கோரிக்கை ஒன்று இச்சந்தர்ப்பத்தில் முன்வைக்கப்படுவதற்கான எந்தவொரு வாய்ப்பும் இல்லையென்பது தெளிவாகத் தெரியும் உண்மையாகும். அது இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாது, இந்நாட்டின் பெரும்பான்மையான மக்கள் கருத்தை அதற்கு எதிராகக் கட்டமைத்துவிடுவதற்கும் மஹிந்த ராஜபக்ஷ அரசு திறம்பெற்றுள்ளது. அந்த அர்த்தத்தில், விடுதலைப் புலிகள் அமைப்பு அற்றுப்போயுள்ளதன் காரணமாக நலிந்துபோயுள்ள தமது பேரம்பேசும் ஆற்றலின் அளவுப் பிரமாணத்தைப் பற்றி உணர்ந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனுபவம்மிக்க ஜனநாயகவாத அரசியல்வாதிகள், தமிழ் மக்களுக்கான புறம்பான நிர்வாகம்போன்ற, உண்மையில் மிகப்பழமையான கோரிக்கைகள்களை யுத்தகளத்தில் தோற்கடிக்கப்பட்டு எட்டு மாதங்கள் வரையில் கழிந்து போயுள்ள இச்சந்தர்ப்பத்தில் மீண்டும் கோரிநிற்பார்கள் என எண்ணுவது ஆக்கபூர்வமானதல்ல. மறுபுறத்தில், அத்தகைய ஒப்பந்தம் ஒன்று இருக்கும் பட்சத்தில் இச்சந்தர்ப்பத்தில் அதைப் பகிரங்கப் படுத்தி அதற்கு மக்களின் அனுமதியைப் பெற்றுக்கொள்[illegible] தில் அதைச் [illegible] என்பதும் எவரொருவராலும் நிறைவேற்றி முடிக்க இயலாத கருமமேயாகும். விசேடமாக, இனப்பிரச்சினையை இனப்பிரச்சினையாகக் கருதாத - அதிகாரப் பகிர்வுக்குச் சம்மதிக்காத - ஜே.வி.பியானது, வியர்வை சிந்தித் தமது கடும் உழைப்பை அர்ப்பணித்து வரும் கூட்டணி ஒன்றினுள் அத்தகைய இணக்கம் ஒன்று ஏற்படுவதும் எதிர்காலத்தில் அது செயற்படுத்தப்படுவதும் கூட ஆக்கபூர்வமான - நிகழக்கூடிய விடயங்கள் அல்ல.

### 'திருட்டு ஒப்பந்த' பிரசாரம் சமூகத்துக்கு கூறுவது என்ன?

அவ்விதமாக, உண்மையில் செய்து கொள்ளப்படாத - ஏட்டில் இல்லாத - திருட்டு ஒப்பந்தம் ஒன்றைப் பற்றி மீண்டும் மீண்டும் தெரிவிப்பதன் மூலம் சமுதாயத்துக்கு தெரியப்படுத்தும் தகவல் தான் என்ன? அதனைச் சற்று ஆராய்வோமானால், அது -

முப்பதாயிரம் சிப்பாய்களைக் காவு கொடுத்து இராணுவ நடவடிக்கை ஒன்றின் மூலம் தரைமட்டமாக்கி விடப்பட்டுள்ளதொன்றேயானாலும், புறம்பானதொரு தமிழ் இராச்சியம் என்ற சதி இன்னமும் சிதைந்து போகாது அவ்விதமே நிலவுவதால், தமிழ் மக்களுடன் எந்த விதத்திலுமான கூட்டிணைவொன்றை எட்டாதிருக்க வேண்டியுள்ளது என்பதாகும். விடுதலைப் புலிகள் அமைப்பு அற்றுப்போயிருந்தாலும், எஞ்சியிருக்கும் அவர்களது அரசியல் தலைவர்களும் கூட, புலிகள் தரப்பொன்றே என்பதாகும். எந்தவிதத்திலுமான அதிகாரப்பகிர்வுவொன்றும் அவர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்படக் கூடாதென்பதாகும்.

இருந்தபோதிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஒத்துழைப்பு வழங்கி நிற்பதற்கு முன்வந்திருந்திருக்கு மானால், இன்று அவர்களைக் கூட்டணி அரசின் மேடையில் 'தேசப்பற்றாளர்களாகவே' நாம் கண்டிருக்கமுடியும்.

[illegible] தமிழ் மக்களுக்கு தமது [illegible] வாழ்விடங்கள் அமைந்துள்ள பிரதேசங்களில் தாம் விரும்பும்விதத்தில் நிர்வாகிக்கப்படுவது தொடர்பாக உரிமை அமையவேண்டியுள்ளது. இந்த உரிமை தொடர்பாக தசாப்தகாலங்களாக அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் மீண்டும் மீண்டும் தோல்வியடைந்தே வருகின்றன. அவர்களது கோரிக்கைகளை புறம்பான இராச்சியமொன்றின் சுவர் மீது சாத்தி வைத்துத் தாக்கி நசித்துவிடும் கருமத்தையே தெற்கு நிறைவேற்றியுள்ளது. நடந்துமுடிந்த யுத்தத்தினால் பாரதூரமான விதத்தில் பின்னடைவுக்கு உள்ளாகியுள்ள அவர்களுக்கு இன்று அரசியல் உரிமைகளைக் கோரித் தென்புலத்து அரசியல்வாதிகளின் பின்னால் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவ்விதம் தம்மைப் பின்தொடர்ந்து வரும் அவர்களை ஏற்றுப் பயணித்துச் செல்லவேண்டிய - அதிகபட்ச தொலைவுவரையிலாவது பயணிப்பதற்குப் பதிலாக - தென்புலத்தின் இனவாத அரசியல்வாதிகளின் செயற்பாடாகியிருப்பது, தாம் அறிந்துள்ள இனவாதத்தின் நெம்புகோலினால் அடித்துத் துவைத்து மீளவும் அந்த மனிதர்களைக் கடைசி எல்லைவரையும் துரத்தியடிப்பதேயாகும்.

அதன் பெறுபேறு, காயம் சொஸ்தமாகிவிடுவதற்குப் பதிலாக உள்ளக ரீதியில் சீழ்கோத்து புரையோடிப்போவதேயாகும் என்பதைப் புரிந்துகொள்வதற்கு ஆழ்ந்த அரசியல் ஞானம் அவசியமில்லை. இருந்தபோதிலும், சமுதாயமொன்று என்ற ரீதியில் நாம் அத்துன்பியலிலிருந்து கரைசேர்வதற்குக் கிட்டும் சந்தர்ப்பங்களையும் கூட வேண்டுமென்றே புறமொதுக்கிவிட்டு பகையுணர்வின் மற்றும் அழிவின் அடிமட்டத்துக்கே பயணித்து வருகிறோம். இத்தலைவிதியினின்றும் மீட்சிபெறவேண்டுமானால் தூரநோக்குச் சிந்தனைகொண்ட குடிமக்கள் தரப்பொன்றும் இராஜதந்திரிகளான தலைவர்கள் தரப்பொன்றும் அமையவேண்டியுள்ளது. துரதிஷ்டவசமாக எமக்குக் கிட்டியிருப்போர், வாக்காளர்களேயன்றி குடிமக்கள் அல்லர். இரத்தத்தால் கைகோத்துக்கொண்டு மனிதர்களுக்கு பகையுணர்வு மற்றும் இனவாதத்தை ஊட்டும் இரண்டு துட்டு அரசியல்வாதிகளேயல்லாது இராஜதந்திரிகளும் அல்லர். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.தொ.காவிலிருந்து விலகியோருக்கு மீண்டும் கட்சிக்குள் இடமில்லை

## அமைச்சர் ஆறுமுகன் தெரிவிப்பு



இரத்தினபுரி, பெப். 04

இலங்கை தொழிலாளர் காங்கிரஸை விட்டு விலகிய எவரும் மீண்டும் கட்சியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள் என்று இ.தொ.காவின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிகுறித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

தேர்தல் காலங்களில் ஒருசிலர் தமது சுயலாபத்திற்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸைவிட்டு மாற்றுக் கட்சியில் சேர்ந்துகொள்கின்றனர். அங்கு அவர்களின் நோக்கம் நிறைவேறாத பட்சத்தில் மீண்டும் இ.தொ. காவுடன் இணைந்து கொள்ளலாம் எனக் கனவு காண்கின்றனர்.

எனினும், இனிவரும் காலங்களில் காங்கிரஸைவிட்டு விலகிய எவரையும் மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்வதில்லை எனத் தீர்மானித்துள்ளோம்.

தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெறுவார் என்று இ.தொ.கா. உறுதிபடக் கூறியிருந்தது. அதன்படி அவரும் வெற்றிபெற்றார். எனினும், அப்போது எமது இந்தக் கூற்றை ஏற்றுக்கொள்ளாதவர்களே கட்சியிலிருந்து வெளியேறிச் சென்றார்கள்.

இதேவேளை, கடந்த ஜனாதிபதித் தேர்தலைவிட இம்முறை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூடுதலான வாக்குகளைப் பெற்று அமோக வெற்றியைப் பெற்றுள்ளார். இதற்கு மலையக மக்கள் பெரும் பங்காற்றியுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் இம்முறை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு லட்சத்து 51 ஆயிரம் வாக்குகளைப் பெற்றுள்ளார். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மிகவும் குறைந்த எண்ணிக்கையான வாக்குகளையே அவர் பெற்றார்.

இதன்படி 2005 ஆம் ஆண்டுதேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளரும், மஹிந்த ராஜபக்ஷவும் பெற்ற வாக்குகளின் வித்தியாசம் ஒரு லட்சத்து 21 ஆயிரமாகும்.

இம்முறை எதிரணி பொதுவேட்பாளர் பெற்ற வாக்குகளுக்கும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பெற்ற வாக்குகளுக்கும் இடையிலான வித்தியாசம் வெறும் 29 ஆயிரம் மட்டுமே. இதன்மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு மலையக மக்கள் பெரும் பங்காற்றியுள்ளனர் என்பது தெளிவாகின்றது.

எதிர்வரும் பொதுத்தேர்தலின் போது, இ.தொ.கா. தனித்துப் போட்டியிடுமா அல்லது பிரதான கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுமா என்பது குறித்து இதுவரை தீர்மானிக்கவில்லை. பொதுத்தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் இது குறித்து முடிவெடுக்கப்படும்.

யாதார்த்தப்பூர்வமான சிந்தனையுடன் இ.தொ.கா. செயற்படுவதனால், மலையக மக்களுக்கு பாரிய அபிவிருத்தியை பெற்றுக் கொடுப்பதுடன், அவர்களின் பாதுகாப்பையும் உறுதிசெய்ய முடிகின்றது-என்றார். (ளி)

# நுவரெலியாவில் ஜனாதிபதிக்கு கிட்டியது வெறும் முப்பதாயிரம் தமிழ் வாக்குகளே!

## மத்திய மாகாணசபை உறுப்பினர் கணபதி கனகராஜ் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 04

அரசுக்குச் சார்பான மலையகத் தமிழ்க் கட்சிகள் நுவரெலியா மாவட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சுமார் 30 ஆயிரம் தமிழ் வாக்குகளையே பெற்றுக் கொடுத்துள்ளன.

எனவே, தாம் பெருமளவு தமிழர்களின் வாக்குகளை ஜனாதிபதிக்குப் பெற்றுக்கொடுத்திருக்கின்றோம் என சில மலையக கட்சிகளின் தலைவர்கள் கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை என இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளரும், மத்திய மாகாணசபை உறுப்பினருமான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

நுவரெலியா மாவட்டத்தில் சுமார் 2 லட்சத்து 30 ஆயிரம் சிங்கள வாக்காளர்களும் , 2 லட்சத்து 25 ஆயிரம் தமிழ் வாக்காளர்களும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

இந்த மாவட்டத்தில் வாக்களிப்பு 72 வீதம் பதிவாகியிருந்தது. பொதுவாக சிங்கள மக்களை முழுமையாகக்கொண்ட தேர்தல் தொகுதிகளில் ஜனாதிபதி 70 வீதம் வாக்குகளைப்பெற்றுள்ளார்.

இதனை தேர்தல் திணைக்களத்தின் முடிவுகளில் இருந்து அறிய முடிகின்றது.

இத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நுவரெலியா மாவட்டத்தின் இன ரீதியிலான வாக்களிப்பு எவ்வாறு அமைந்திருந்தது என்பதை அண்ணளவாக எவராலும் அனுமானிக்க முடியும்.

இதனடிப்படையில் வாக்களிப்பில் பங்கேற்ற சிங்கள வாக்காளர்களில் 70 வீதமானவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு வாக்களித்திருந்தால் அவர் பெற்றுக்கொண்ட வாக்குகள் சுமார் ஒரு லட்சத்து இருபதாயிரமாகும்.

ஜனாதிபதி நுவரெலியா மாவட்டத்தில் ஒரு லட்சத்து ஐம்பத்தோராயிரம் வாக்குகளைப் பெற்றிருக்கிறார்.

இதன்மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு சுமார் 30 ஆயிரம் தமிழ் வாக்குகளை மட்டுமே அரச சார்பு மலையக அரசியல், தொழிற்சங்கங்களால் பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளது என்பது தெளிவாகின்றது.

எனவே, மலையகத்தில் அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி உட்பட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான மலையகத் தமிழ் அமைப்புகள் ஜனாதிபதிக்குத் தாம் அதிகமான வாக்குகளைப் பெற்றுக் கொடுத்தோம் என்று கூறுவதில் உண்மையும் கிடையாது-என்றார். (ளி)




# ஜனாதிபதியின் நான்காண்டு கால ஆட்சியை சிறுபான்மை இனங்கள் அங்கீகரிக்கவில்லை

## ஜ. தொ. கா. அமைப்பாளர் சாட்டை

கண்டி, பெப். 04

''தமிழ் - முஸ்லிம் மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நான்கு ஆண்டு கால ஆட்சியை அங்கீகரிக்கவில்லை என்பது தேர்தல் மூலம் நிரூபணமாகியுள்ளது என ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் தலவாக்கலை - கொத்மலை பிரதேச அமைப்பாளர் பீ.இராஜேந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவு குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

2010 ஜனவரி 26 ஆம்திகதி இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றிருக்கிறார்.

தேர்தல் பிரசார காலத்தில் அரச நிறுவனங்களும், அரச ஊடகங்களும் தம்மைப் புறக்கணித்த விதம் குறித்து தேர்தல்கள் ஆணையாளர் மிகுந்த ஏமாற்றம் அடைந்திருக்கிறார். அவர் இவ்வாறு அறிவித்திருக்கின்றமையை ஜனநாயக விழுமியங்களை மதிப்பவர்கள் கவனத்தில் எடுக்கவேண்டும்.

அடுத்து, மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றிருக்கிறார் என்பதானது தென்னிலங்கையில் பெரும்பான்மைச் சிங்களவர்கள்தான் பெருமளவில் அவரை வெற்றி பெற வைத்திருக்கிறார்கள் என்பதையே வெளிப்படுத்தி நிற்கின்றது.

தமிழ் - முஸ்லிம் தேசிய இன மக்கள், குறிப்பாக மலையத்திலும், கொழும்பிலும், வடக்கு, கிழக்கிலும் வாழும் தமிழ் பேசும் மக்கள் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கவில்லை என்பதும், அவர் ஆணை பெற்றிருக்கிறார் என்பதில் சிறுபான்மையினங்கள் பங்களிக்கவில்லை என்பதும் வெளிப்படையானதாகும்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மிகப் பெருமளவில் தமிழ்மக்கள் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்கவில்லை என்பதால், நாடு முழுவதையும், நாட்டுமக்கள் அனைவரையும் ஆளுவதற்கு ஆணை பெற்றிருக்கிறார் என்பதும் பெருங் கேள்விக்குறியாகும்.

இத்தேர்தலில் குறிப்பிடத்தக்க - கவனத்தில் எடுக்கவேண்டிய விடயம் என்னவெனில், தமிழ் - முஸ்லிம் தேசிய இன மக்கள் ஜனாதிபதியின் கடந்த நான்கு ஆண்டுகால ஆட்சியை அங்கீகரிக்கவில்லை என்பதும் -

இந்த ஆட்சியைத் தொடர்வதை ஏற்கவில்லை என்பதும் வெளிப்படுத்தப்பட்டிருப்பதேயாகும்.

அதேவேளை, இத்தேர்தலில் தமிழ் - முஸ்லிம் மக்களின் ஐக்கியமும், உறவும் பலமடைந்திருக்கின்றன. தங்களுக்கு அரசினால் இழைக்கப்பட்ட அநீதிக்கெதிராக ஒன்றுபட்டு எதிர்ப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

அத்துடன், எதிர்காலத்தில் தங்கள் ஐக்கியத்தையும், உறவையும் பேணிப் பாதுகாப்பதன் மூலம் தங்களின் அரசியல் அபிலாஷைகளையும், ஜனநாயக மற்றும் கலை, கலாசாரங்களையும், தங்கள் வாழ்விடங்களையும் காப்பாற்றிக்கொள்ள முடியும் என்பதையும் தீர்க்கமாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இத்தருணத்தில் முஸ்லிம் - தமிழ் இதயங்களை வென்றெடுப்பதற்கான சவாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொள்ளவேண்டும் - என்று அதில் தெரிவித்துள்ளார். (ளி)

# கேகாலை மாவட்டத்தில் நெல் அமோக விளைச்சல்

மாவனல்லை,பெப்.04

இம்முறை கேகாலை மாவட்டத்தில் பல இடங்களிலும் பெரும்போக நெல் அதிக விளைச்சலை அளித்துள்ளதென விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

சில வயல்களில் தற்போதும் நெல் அறுவடை நடைபெற்று வருவதால் இம்மாத இறுதியாகும்போது கேகாலை, மாவனல்லை அரணாயக்கப் பிரதேசங்களில் அதிகளவு நெல் அறுவடையாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் மூலம் சம்பா, நாடு போன்ற அசிரி வகைகளின் விலைகள் சற்றுக் குறையும் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, தற்போது கேகாலை பிரதேச வர்த்தக நிலையங்களில் அசிரியின் விலை ஓரளவு சரிந்துள்ளமை பாவனையாளர்களுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது. (ளி)

# கண்டிநகரப் பாடசாலைகள் பெப்ரவரி 15 திறக்கப்படும்

கண்டி ,பெப். 04

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் சுதந்திரதின நிகழ்வுகள் காரணமாக மூடப்பட்ட மத்திய மாகாணம், கண்டிநகர எல்லைக்குள் இருக்கும் கண்டி, வத்தேகம கல்வி வலயங்களைச் சேர்ந்த 68 பாடசாலைகள் பெப்ரவரி 15 ஆம் திகதி வழமைபோல் திறக்கப்படும் என மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும், கண்டி பல்லேகல என்னும் இடத்தில் இம்முறை இடம்பெறும் 62 ஆவது இலங்கையின் தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டும், பல்லேகலயில் இடம்பெறும் ''தேசத்தின் மகுடம்'' கண்காட்சி கொண்டாட்டங்கள் தொடர்பாகவுமே இப்பாடசாலைகள் மூடப்பட்டன.

இவ்விரண்டு நிகழ்வுகளிலும் பணிபுரிய அழைக்கப்பட்டுள்ள பாதுகாப்புத் தரப்பினர் உட்பட சுதந்திரதின ஏற்பாடுகளில் ஈடுபடுவோர் தங்குவதற்காகவுமே இவை மூடப்பட்டன.

கண்டி ஸ்ரீபுஷ்பதான மகளிர் வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தொடர்வதால் அப்பாடசாலையைத் தவிர்ந்த ஏனைய 68 பாடசாலைகளும் இவ்வாறு மூடப்பட்டன.

இதேவேளை, பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதியின் பின்னர் பிரதி சனிக்கிழமை நாட்களில் பாடசாலைகளை நடத்துவதற்கு அதிபர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ளி)

# தமிழைக் கொலைசெய்யும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை

மாவனல்லை,பெப்.04

மாவனல்லைப் பிரதேச வீதிகளில் வைக்கப்பட்டுள்ள வழிகாட்டல் பலகைகளில் தமிழ் எழுத்துக்கள் தவறான முறையில் எழுதப்பட்டுள்ளன எனப் பிரதேசவாசிகள் விசனிக்கின்றனர்.

உதாரணத்திற்கு கம்பளை என்பதற்குப் பதிலாக 'ஹம்பொல' என்றும் கேகாலை என்பதற்குப் பதிலாக 'கேக்கல்லை' என்றும் எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு பல இடங்களிலும் வைக்கப்பட்டிருக்கும் பலகைகளில் பாரிய பிழைகள் காணப்படுகின்றன.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் [illegible] பலகைகளிலேயே இவ்வாறான தவறுகள் காணப்படுகின்றன.

இந்த 'தமிழ்க்கொலை' பற்றி இப்பகுதி வாழ் தமிழ்பேசும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட சபை இந்த அறிவித்தல் பலகைகளை திருத்தி எழுதி காட்சிக்கு வைக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களது சமயலறைக் கழிவுப் பொருள்களை உங்களது தோட்டத்துக்குரிய உரமாக்குவது எவ்வாறு?

நாங்கள் திருகோணமலை நகரத்தில் வசித்தபோது எனது தாயார் சமையல றைக் கழிவுகளை இரு பிரிவுகளாக்கு வதை அவதானித்திருக்கிறேன். மரக்கறிகளின் வெட்டிக் கழித்த பகுதிகள், பழத் தோல்கள், பால் எடுத்த பின் கழிக்கப்பட்ட தேங்காய்ப்பூ ஆகியவற்றை அகன்ற வாயுள்ள ஒரு பாத்தி ரத்தில் போடுவார்.

இந்தப் பாத்திரத்தினுள் அரிசி கழு விய நீரையும் அரிசி அவித்தபின் வடிந்த கஞ் சியையும் ஊற்றுவார்.இந்தப் பாத் திரத்தில் சேமிக்கப்பட்ட இவை தினமும் தனது மதிய உணவுக்காக எங்களிடம்வரும் குறிப்பிட்ட ஒரு பசுவிற்குக் கொடுக் கப்படும்.

எஞ்சியுள்ள சமையலறைக் கழிவுகள் வீதியோரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கொட்டப்படும். இதே போலவே எமது அய லவர்களும் தங்களுக்குரிய வருகை விருந் தினர் பசுக்களுக்குக் கொடுத்து எஞ்சிய வற்றை அதே இடத்தில் கொட்டி விடுவர். சில குறிப்பிட்ட நாள்களில் காலை நேரத்தில் துப்புரவுத் தொழிலாளர்க ளுடனான வாகனம் ஒன்றுவந்து அந்தக் கழிவுகளை எடுத்துச்சென்று நகரத்தில் இருந்து அதிக தூரமில்லாத ஒரு இடத்தில் கொட்டி விடுவர். இந்தக் குவிக்கப்பட்ட கழிவுப் பொருள்கள் வெளிவிடும் துர்நாற்றம் சகிக்க முடியாத தாக இருக்கும்.


இவ்விடத்தின் அருகாமையிலேயே தான் துப்புரவுத் தொழிலாளர்கள் தமது மனைவி, பிள்ளைகளுடன் வசிப்பர் ஆனால் யாழ்ப் பாண நகரிலிருந்து மூன்று மைல் தொலை விலுள்ள ஊரில் வசிக்கும் எனது பேர்த்தி யாரின் வாழ்கை முறை வித்தியா சமானது.

இவர்களுடன் நான் எனது விடு முறை தினத்தைக் கழிப்பேன். எனது தாயா ரைப் போலவே எனது பேர்த்தியாரும் மரக்கறிக் கழிவுகள், பழத் தோல்கள் மிகுதியான சோறு, தேங் காய்ப் பூ ஆகிய வற்றைமிருகங் கள் போஷிப்பதற்குப் பயன் படுத்துவார். அவரிடம் சொந்தமாக வளர்ப்பு மிருகங்கள் போடப்படும்.

எனவே அவரது வளவின் குப்பைக ளும் குப்பைத் தொட்டிக்குள் சேரும்

மிகவிரைவில் இவரது குப்பைத் தொட் டிக்கு நடப்பட்ட சீமைக்கிளுவை, முள் முருங்கை கதியால்கள் மரங்களாகி அவற் றின் கொப்புகளும் அளவாக வெட்டப் பட்டு அவற்றின் கழிவுகளும் இந்தக் குப்பைத் தொட்டிக்குள் போடப்படும்.

சீமைக்கிளுவை,முள்முருங்கை போன் றவற்றின் நைதரசன் செறிவுடைய இலை களை தனது வளர்ப்பு மிருகங்களான ஆடு களுக்கு உணவாகக் கொடுப்பார். அதனை விட கிராமத்திலுள்ள எல்லாவ கையான மூலிகைகளும் மருத்துவக் குணங் கொண்ட தாவரங்களான தொட்டாச் சிணுங்கி, முடக் கொத்தான் ,கோரை போன்றவை எனது பேத்தியாரின் வளவில் பாவிக்கப்படாத பகுதி வளவில் வளர்ந் திருக்கும். அவற்றை நிலப்புளுக்களும் ஏனைய சிறிய உயிரினங் கள் கொண்டதாக இருக் கும்.



மார்கழி மாதத்து மழை குறைவடைந்து தை மாதம் வந்ததும் விவசாயிகள் எனது பேத்தியாரின் குப்பையைத் தேடி வருவார் கள். இவரது வளமான உரக் குப்பையை நன்கு அறிவார்கள். இவரது ஆடுகளதும், கோழிகளதும் எச் சங்களும் நைதரசன் நிறைந்த இலைக் குப்பைகளும் சேர்ந்த குப்பையை அவர் கள் நன்கு அறிவார்கள். ஏனையோரின் குப்பைகளை விட இவரது குப்பைக்கு கூடுதலான விலை கொடுப்பார் கள்.

கிராமத்து மக்களிடமே அப்போதைய விவசாயிகள் பணம் கொடுத்து குப்பை வாங்குவார்கள். ஏனெனில் அப்போது கிடைக்கக் கூடிய உரம் இந்த இயற்கை உரமே தான்

சுற்றுப்புறத்தையும் உயிரினங்களையும் எனது கல்வித் துறையாக அமைந்ததினால் பெரிய படிப்பறிவற்ற எனது பேர்த்தியார் கழிவுப் பொருள்களைக் கையாண்ட விதம் அவருடைய மதிப்பை மேலும் உயர்த்துகின் றது. ஏனெனில் இப்போது தான் பிரபஞ் சத்தின் சூழ்நிலை சுற்றுப்புறத்திற்கேற்ப அமைந்துள்ள உயிரினங்கள் அவற்றின் சமநிலை பற்றிய ஆராய்ச்சி அறிவு எனக்கு முழுமையாக ஏற்பட்டுள்ளது. எனது பேர்த் தியார் கையாண்ட முறை யானது அந்தச் சூழல் சமநிலையை எவ்வாறு வெற்றிகரமா கப் பாது காத்தது என்பதை உணர்கிறேன்.

எனது பேர்த்தியார் உரம்பற்றிய தத்து வம் படித்திருக்கவில்லை. அவர் சூழ் நிலை சுற்றுப்புறம் போன்ற சொற்பதங்களை கேட் டிருக்கும் சந்தர்ப்பம் கூட இருந்திருக்காது. ஆயினும் அவர் அநாவசிய விரயம் செய் யக்கூடிய செல்வ நிலையில் இருந்திருக்க வில்லை. அத்தோடு பரஸ்பரம் ஏனையோரை மதிக்கும் ஒரு உலகில் வாழ்ந்திருந்தார்.

ஆனால் அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் ஒன்றின் மறைவுக்குப்பின் எஞ்சி நிற்பது இன்னொன்றின் நல் வாழ்விற்கு உதவும் என்பதையும் இயற்கை அன்னையின் நலம் பேண உதவும் என்பதையும் புரிந்து கொள் ளும் அளவு அறிவைக் கொண் டிருந்தனர் போலும்.

எனது பேர்த்தியாரின் காலத்தில் சமை யலறைக் கழிவுகளும் தோட்டக் கழிவுகளும் கையாளப்பட்ட விதம் சுற்றுச் சூழலுடன் நட்புப் பேணும் வகையில் அமைந்தது என்பதனையும் நவீன உலகில் திண்மக் கழிவகற்றும் முறை யுடன் ஒப்பிடும் போது மிக மேலான நிலை யில் இருந்தது என்ப தினை நாம் அனைவரும் ஒத்துக் கொள் ளத்தான் வேண்டும். தற் போதைய குப்பை புதைக்கும் குழிகளுக்கு நேர மின்மை, இட மின்மை போன்ற பல கார ணங்களை நாம் கூறலாம்.

**பகுதி - 1**

## எனது தாயாருக்குக் கொடுக்கப்பட்ட நகைகள் குப்பைகளை விற்றதன் மூலம் பெறப்பட்ட பணத்தில் பாட்டியால் செய்யப்பட்டது

இருந்தன.

ஆனால் அவர் எனது தாயார் போன்று எஞ் சியவற்றை வீதியோரத்தில் கொட் டுவதில்லை.குறிப்பிட்டுச் சொல்லுவதா யின் எனது பேர்த்தியாரின் சமையலறை யிலிருந்தோ,தோட்டத்தில் இருந்தோ எந் தக் கழிவும் கழிவாகச் செல்வதில்லை. அவர் அந்தக் கழிவுகளை பொன்னாக மாற்றி விடுவார். ஆம் அவர் தனது தோட் டத்தில் குப்பை கொட்டும் ஒரு இடம் வைத்திருந் தார் அது கிட்டத்தட்ட வடிவம் 1இல் குறிப் பிட்டது போன்று இருக்கும்.

ஒவ்வொரு வருடமும் தை மாதத்தில் தனது நிலத்தின் ஒரு பகுதியில் 1.05 மீற்றர் 2 மீற்றர் அளவுள்ள ஒரு இடத்தில் சீமைக் கிளுவை, முள் முருங்கை போன்ற கதியால் களால் நெருக்கமாக ஒரு கூடு தயாரிப்பார் .அந்தக் கூட்டை 2 மீற்றர் அளவு உயரத்தில் ஓலைகளால் வேலி அடைப்பார். இப் போது அவரது சமையலறை, தோட்டம் ஆகியவற்றின் கழிவுகள் கொட்டும் பகுதி தயாராகிவிடும்.

இதனுள் தனது சமையலறையில் மிரு கங்களுக்கு உணவானது போக மிகுதிக் கழிவுகளைக் கொட்டி விடுவார். தின மும் அதிகாலையில் எழுந்து தனது வள வைக் கூட்டுவார். அதன்போது மரங்களில் இருந்து விழும் இலை, குப்பை கள் கூட்டப்பட்டு அவையும் அவரது குப்பைத் தொட்டிக்குள் ஆடுகளுக்கு நல்ல உணவாகக் கொடுப் பார். அதே நேரம் இந்த மூலிகைத் தாவரங் கள் அவருக்குத் தேவையானபோது மருந் தாகவும் பயன்படும். தாது உப்புக்கள் நிறைந்த ஆட்டின் பால் குடும்பத்தினருக்கு அருந்தப் பயன் படுவதோடு தாதுப் பொருள் நிறைந்த ஆட்டின் பிளுக்கையும் அவரது குப்பைத் தொட்டிக்குப் போய்ச்சேரும்.



கலாநிதி சாந்தினி
கலாநிதி கே.எஸ்.வல்கம

ஆடுகளை விட அவர் பல கோழிகளை யும் சேவலையும் வளர்த்தார். பகல் முழுவ தும் இந்தக் கோழிகள் அவரது வளவிலும் அயல் வளவிலும் மேய்ந்து கொண்டிருக் கும். மாலையில் அவரது குப்பைத் தொட் டியை சுற்றவுள்ள மரங்க ளில் உறங்குவதற் காக ஏறிக்கொள்ளும்.

வெகு அரிதாகவே அந்தக் கோழிகளுக்கு அவர் உணவளிப்பார். அந்தக் கோழிக ளுக்கு அவரது குப்பைத் தொட்டியில் கிடைக் கும் உணவே போதுமானதாக இருக்கும் என நான் எண்ணுகின் றேன்

அவரது குப்பைத் தொட்டியில் நாள் தோறும் பெருகிவரும் புளுக்களும் பூச் சிகளும் சேவலுக்கும், கோழிகளுக்கும் சத்தான உணவே ஆகும்.

அந்தக் கோழிகள் உணவு தேடிக் கிள றும் போது குப்பைக் கழிவுகள் புரட்டப் படும். கோழிகளின் எச்சமும் தொட்டியில் சேர்ந்துவிடத் தாதுப்பெருள்கள் நிறைந்த எச்சம் குப்பைத் தொட்டியின் கழிவுக ளுடன் சேர்ந்து மண்போன்ற ஒரு மூலப் பொருள் உருவாகும். இந்த மண் போன்ற மூலப்பொருளே உரமாகும். இந்த உரம் கடும் நிறத்திலும் ஒரே தன் மை[illegible] தமான மண் வாசனை உடையதும் பலவீனப்படுத்தும் செயற்கை உரங்கள் அப் போது இலங்கையில் அரச சந்தையில் நிறைந்திருக்கவில்லை.

எனது பேர்த்தியாரின் குப்பைக்கு எவ் வளவு பணம் கொடுத்தார்கள் என்பது எனக்கு ஞாபகத்தில் இல்லை.

ஆயின் ஊரில் ஒரு பேச்சு இருந்தது.



எனது தாயாருக்குச் சீதனமாகக் கொடுக் கப்பட்ட பெட்டியிலுள்ள நகைகள் காலத் திற்குக் காலம் குப்பை விற்கப்பட்ட பணத் தினால் செய்யப்பட்டதாம். ஆம் ஒவ்வொரு முறையும் குப்பை விற்றவுடன் பவுன் வாங்கி விடுவாராம்.


எனது பேர்த்தியாரின் உரப்பகுதி என்னை [illegible]வதுண்டு. ஆனால் இப் போது திண்மக் கழிவு முகாமைத்துவமே

ஆதலினால் இந்த நூலின் எஞ்சிய பக் கங்களின் எமது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் முயற்சிகளை மேற்கொண் டிருக்கிறோம்.

அந்த அனுபவமானது இன்றைய உல கின் சூழல் சம்பந்தமான இடஞ்சல்க ளுக்கு முகம்கொடுக்கும் வகையில் எமது சமைய லறையினதும் தோட்டத்தினதும் கழிவு களை எவ்வாறு உரமாக மாற்றலாம் என்ப தாகும். இது சூழ்நிலை சுற் றுப்புறத்துட னான நட்புறவுடனும் பழைய முறையிலும் அமைந்திருக்கும். ★

தமிழாக்கம்: சுசீலா சாரங்கபாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிலவில் மோதின ஏவுகணைகள்

நாசா அனுப்பிய LCROSS (Lunar Crater Observation and Sensing satellite) செயற்கைக் கோளுடன் இணைத்து அனுப்பப்பட்ட ஏவு கணைகள் நிலவின் தளத்தில் மோதியுள்ளன.

மொத்தம் 2 ஏவுகணைகள் மோதவிடப் பட்டன. இரண்டுமே [illegible] நிலவின் தளத்தில் [illegible] தெரிவித்துள்ளது. [illegible] சென்டார் என்ற ஏவு கணையை மோத விட்டனர். நிலவின் தென் முனையில் இந்த ஏவுகணை மோதவிடப்பட்டது. 2000 கிலோ எடை கொண்ட அந்த ரொக்கெட், மணிக்கு 300 கிலோ மீற்றர் அசுர வேகத்தில் பாய்ந்து சென்று மோதியது.

இதையடுத்து ஷெபர்டிங் என்ற 2ஆவது ஏவுகணை மோத விடப்பட்டது. முதல் ஏவுகணை மோதிய நான்கு நிமிடங்களில் 2ஆவது ஏவுகணை மோத விடப்பட்டது. அதே கோணத்தில் இந்த ஏவுகணை விடப்பட்டது.

நிலவின் தளத்தில் தண்ணீர் இருப்பதை உறுதி செய்து கொள்வதற்கான ஆய்வுக்காக எல்கிராஸ் அனுப்பப்பட்டுள்ளது. சந்திராயன் -1 விண்கலம், நிலவில் தண்ணீர் இருப்பதை கண்டுபிடிக்க உதவியதைத் தொடர்ந்து தற்போது அமெரிக்காவின் கவனம் நிலவின் மீது திரும்பியுள்ளது. எல்கிராஸ் அனுப்பும் திட்டத்தின் செலவு 100 மில்லியன் டொலர் என்பது குறிப்பிடத்தக்கது.

2020 ஆவது ஆண்டில் மீண்டும் நிலவுக்கு மனிதர்களை அனுப்ப நாசா திட்டமிட்டுள்ளது. அது தொடர்பான முக்கிய தகவல்களுக்கும் இந்த எல்கிராஸ் திட்டம் உதவும்.

எல்கிராஸ் செயற்கைக் கோள், ஜூன் 18ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்டது.

ஷெபர்டிங் ஏவுகணையில் அறிவியல் அதி நவீன சாதனங்களும், நவீன கமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன. இந்த இரு ஏவுகணைகள் மூலமும் நாசாவுக்குப் பல்வேறு தகவல்கள் அனுப்பப் படவுள்ளன. அதை ஆய்வு செய்து நிலவின் தளத்தில் தண்ணீர் இருப்பது குறித்து விரிவான ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளது நாசா.

# செயற்கை உயிரியைத் தயாரிக்கும் நிலையை மனிதன் நெருங்குகிறான்

செயற்கையான முறையில் மனிதன் தான் விரும்பிய வடிவில் பரம்பரை அலகுகளை வடிவமைத்து அதன்படி செயற்படக் கூடியதுதானே, இனப்பெருக்கம் செய்யக் கூடிய உயிரினங்களை அல்லது உயிர்க் கலங்களை தயாரிக்கும் நிலையை மனிதன் எட்டிவிடும் காலம் வெகுதொலைவில் இல்லை என்கின்றனர் உயிரியல் ஆய்வாளர்கள்.

ஒரு பக்ரீயாவின் பரம்பரை அலகுத் தொகுதியை (Genome) மதுவம் (Yeast) எனப்படும் ஒரு கல பங்கசுவில் செலுத்தி குறிப்பிட்ட பரம்பரை அலகுத் தொகுதியில் தேவையான மாற்றங்களைச் செய்த பின் அதனை மீண்டும் பிறிதொரு வகை பக்ரீயாவினுள் செலுத்தி அந்த பக்ரீயா பல்கிப் பெருகும் வகையில் தயாரித்து வெற்றி கண்ட பின் இந்தத் தகவலை உயிரியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.



இந்த வகையில் மனிதன் தனக்கு விரும்பிய பொருளாதார உபயோகமுள்ள பரம்பரை அலகுகளை கொண்ட பக்ரீயா வகை அல்லது உயிர்க் கலங்களை உருவாக்கி உயிர் எரி பொருள்கள்(Biofuel) போன்ற அவசியமான உபபொருள்களை கழிவு சேதன பொருள்களைப் பயன்படுத்தி உருவாக்க முடியும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

ஆனால் இந்த ஆராய்ச்சி வழிமுறைகள் தவறானவர்களின் கைகளுக்குப் போயின், மனித இனத்தையே அழிக்கக் கூடிய நுண்ணுயிரிகளை உருவாக்கி மனிதனின் இருப்பையே இந்த உலகில் இருந்து நிரந்தரமாகவும் அழித்து விட முடியும் என்ற பயங்கரமும் இதில் அடங்கி இருப் பதை விஞ்ஞானிகள் உணரத்தான் செய்திருக்கின்றனர். அதனால் எச்சரிக்கையோடு இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளனர்.


எமது தாய்நாட்டின் பொருளாதார அபிவிருத்திற்கான பயணத்தில் இணைந்து உறுதுணையளித்திட அனைத்து தேசபக்தி மிக்க இலங்கையர்களுக்குமான தருணம் இதோ!

LOLC
அபிவிருத்திப் பாதையின் முன்னோடி



உங்கள் வெளிநாட்டு பணத்தினை இலங்கையில் முதலீடு செய்யும் பெறுமதிமிக்க தருணத்தில் இணைந்த பெருமையினை நீங்களும் பெற்றிடுங்கள். நீங்கள் உழைத்த பணத்தை தாய்நாட்டில் முதலீடு செய்திடுங்கள். LOLC குழுவினை சேர்ந்த லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடட் உங்களின் முதலீடுகளுக்கு சிறந்த பாதுகாப்பினையும் வட்டியினையும் வழங்கிடும். LOLC பலமிக்க சர்வதேச நிதி ஸ்தாபனத்தினை பின்பலமாககொண்டது. LOLC ஆனது உலகின் மிகப்பெரிய லீசிங் நிறுவனம் மற்றும் ஜப்பானின் இரண்டாவது மிகப் பெரிய நிதி தீர்வுகளுக்கான நிறுவனமாக ஓரிக்ஸ் கூட்டுத்தாபனம் - ஜப்பானின் கீழ் 26 நாடுகளில் செயல்படும் உலகளாவிய ஓரிக்ஸ் வலையமைப்பின் அங்கத்தவர்.

லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடட் fitch rating இல் A- தரச்சிறப்பை பெற்றுள்ளது.

- உங்களின் பணத்தை ஒருமாதத்தின் பின் வேண்டிய நேரம் மீளப்பெறலாம். பகுதியாகவும் மீளப்பெறலாம்.
- குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் பெறும் மீளப்பெறல்களுக்கு வட்டியில் கழிவு இல்லை
- வைப்புக்களின் பெறுமதி அதிகரிக்க புதிய வைப்புக்கள் மூலம் எந்த நேரமும் அதிகரிக்கலாம்
- வட்டி மாதாந்தம் வழங்கப்படும்.

உங்கள் தேசத்தின் அபிவிருத்திக்கு உதவும் அதேவேளை, உங்கள் பணத்தை பாதுகாப்பான மற்றும் அதிக வட்டியை தரும் இடத்தில் முதலீடு செய்யுங்கள்

அழையுங்கள் 0773 815602

Email : lofin@lankaorix.com

**லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடட்**
LOLC வர்த்தக குழுமத்தின் நிறுவனம்
100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இராஜகிரிய.
தொலைபேசி: 5880880, ஈமெயில் lofin@lankaorix.com, வெப்: www.lankaorix.com

லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடட் 2001 டிசெம்பர் 13 ஆம் திகதி சட்டமுறைகளின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட பொது. பிட்ஸ் ரேடிங்ஸ் நிறுவனத்தினால் A- (lka) [illegible] நிறுவனங்கள் சட்டப்பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

BRANDS ALLEY


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலாய் லாமாவை ஒபாமா சந்திப்பார்; சீனாவின் வேண்டுகோள் நிராகரிப்பு

வாஷிங்ரன், பெப். 04

திபெத்திய மதத் தலைவர் தலாய் லாமாவை சந்திக்கக் கூடாது என்று சீனா விடுத்துள்ள கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்துள்ளது. மாறாக, திட்டமிட்ட படி தலாய் லாமாவை வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி பராக் ஒபாமா சந்திப்பார் என வெள்ளை மாளிகை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே தாய்வானுக்கு ஆயுதங்கள் அளித்தமையால், அமெரிக்கா மீது சீனா கோபமடைந்துள்ளது. இந்நிலையில், அமெரிக்கா வந்துள்ள தலாய் லாமாவை ஒபாமா சந்திப்பார் என வெளியான அறிவிப்பால் அது மேலும் கோபமடைந்துள்ளது.

''தலாய் லாமாவை ஒபாமா சந்திக்கக் கூடாது. மீறி சந்தித்தால், தாய்வானுக்கு ஆயுதங்கள் அளிக்கும் அமெரிக்க நிறுவனங்கள் மீது கடும் தடைகள் விதிக்கப் படும்'' என சீனா எச்சரித்திருந்தது.

எனினும், இதை வெள்ளை மாளிகை நிராகரித்துள்ளது. இதுகுறித்து வெள்ளை மாளிகை செய்தித்தொடர்பாளர் பில்பேர்டன் தெரிவிக்கையில், ''கடந்த ஆண்டு சீனாவுக்கு ஜனாதிபதி ஒபாமா சென்றிருந்த போது தலாய் லாமாவை நான் சந்திப்பேன். அவரை சந்திப்பதில் ஆர்வமாக இருக்கிறேன் என்று சீனத் தலைவர்களிடம் தெளிவாகக் கூறியிருந்தார். இதை மறுக்க முடியாது'' என்றார்.

''அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையிலான உறவு இறுக்கமாகவும், உறுதியாகவும் அமையவேண்டும். இதுவே எங்கள் விருப்பம். பல்வேறு விடயங்களில் இரு நாடுகளும் இணைந்து செயல்படவேண்டும். இதிலும் நாம் ஆர்வமாக உள்ளோம்'' என்றும் பேர்டன் குறிப்பிட்டார்.

தலாய் லாமாவை சந்திக்கக்கூடாது என்று உலக நாடுகளின் தலைவர்களைத் தொடர்ந்து சீனா மிரட்டி வருகிறது. குறிப்பாக கடந்த 2008 ஆம் ஆண்டு திபெத்திய பகுதிகளில் மூண்ட பெரும் வன்முறை, போராட்டங்களுக்குப் பின்னர் உலக நாடுகளின் தலைவர்கள் தலாய் லாமாவை சந்திக்கக்கூடாது என்பதை சீனா தீவிரமாக வலியுறுத்தி வருகிறது.

இதற்கு முன்னர் அமெரிக்க ஜனாதிபதியாகவிருந்த ஜோர்ஜ் புஷ் தலாய் லாமாவை சந்தித்தபோது அவருக்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்திருந்தது. இருப்பினும், கண்டனத்தோடு நிறுத்திக் கொண்டுவிட்டது.

எனினும் ஒபாமா, தலாய் லாமாவை சந்தித்தால் அமெரிக்க நிறுவனங்கள் மீது தடைவிதிக்கப்படும் என சீனா எச்சரித்துள்ளமையால் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் 64 லட்சம் டொலர் மதிப்பிலான ஆயுதங்களை வழங்குவது தொடர்பாக தாய்வானுடன் அமெரிக்கா ஒப்பந்தம் மேற்கொண்டது. இது சீனாவை கடும் எரிச்சலில் ஆழ்த்தியுள்ளது. தாய்வானை சீன அரசு தனது நாட்டின் ஒரு பகுதியாகக் கூறி வருவது குறிப்பிடத்தக்கது.

சீனாவிலிருந்து சட்டவிரோதமாகப் பிரிந்துசென்ற ஒரு மாகாணத்திற்கு அமெரிக்கா ஆயுதங்களை வழங்குவதா என்று அது காட்டமாகக் கேட்டுள்ளது. இந்நிலையில்தான் தலாய் லாமாவின் அமெரிக்க பயணத்தால் சீனா மேலும் எரிச்சலடைந்துள்ளது.

# தீவிரவாதிகளின் புதிய யுக்தியை முறியடிக்க அமெ., பிரிட்டன் முடிவு

லண்டன், பெப். 04

தீவிரவாதிகள் விமானங்களைத் தகர்க்க மேற்கொள்ளவிருக்கும் புதிய யுக்தியை முறியடிக்க, அமெரிக்காவும் பிரிட்டனும் மாற்றுத் திட்டமொன்றைக் கைக்கொள்ள முடிவு செய்துள்ளன. இது தொடர்பான தீவிர பரிசீலனையில், இவ்விரு நாடுகளின் அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளார்கள்.

தீவிரவாதிகள் வெடிகுண்டுகளுடன் விமானத்தில் ஏறி, அதைக் கடத்துவது, தகர்ப்பது போன்ற வன்செயல்களில் ஈடுபடுவதை முறியடிக்கத் தற்போது சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

விமான நிலையங்களில் விமானம் ஏறுவதற்கு முன்னர், பயணிகளின் உடல் முழுவதும் ஸ்கேன் செய்து, சோதிப்பதற்கான ஸ்கேனர் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளமையும் இந்நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

இந்த விதமான பரிசோதனை ஸ்கேனர் கருவிகள், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் உட்படப் பல நாடுகளிலுள்ள விமான நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ளன. எனினும் இப்பரிசோதனையிலிருந்து தப்புவதற்கான உபாயத்தைத் தீவிரவாதிகள் கடைப்பிடிக்கத் திட்டமிட்டுள்ளனர் என்ற தகவல் கசிந்துள்ளது.

தீவிரவாதிகள் உடலில் சத்திர சிகிச்சை செய்து, பிளாஸ்டிக் பக்கெட்டுக்குள் வைக்கப்பட்ட வெடிபொருட்களை அதற்குள் பதுக்கி ஊசி மூலம் அவற்றை வெளியே எடுத்து, விமானங்களைத் தகர்க்கத் திட்டமிட்டுள்ளனர் என்பதை பிரிட்டிஷ் புலனாய்வுத்துறை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இதையடுத்தே இந்தப் புதிய உபாயத்தை முறியடிப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்று நடவடிக்கை குறித்து அமெரிக்க, பிரிட்டிஷ் அதிகாரிகள் தீவிரமாகப் பரிசீலனை நடத்தி வருகிறார்கள்.

## சட்டத்தரணியாகப் பணிபுரிந்த கொலைக் குற்றவாளி கைது

கொலைக் குற்றத்தில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, பிணையில் விடப்பட்டபோது தப்பியோடி சட்டத்தரணியாக மாறி பணியாற்றி வந்த நபர், 13 ஆண்டுகளுக்குப் பின்னர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பங்களாதேஷைச் சேர்ந்த சிரா ஜுல் இஸ்லாம் மட்பர் என்னும் இந்நபர், 1990 ஆம் ஆண்டு, சக கிராமத்து விவசாயி ஒருவரை கொலை செய்துவிட்டார். அதற்காக இவருக்கு நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித் துத் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பை ஆட்சேபித்து சிராஜுல் இஸ்லாம், உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார். இம் மனுவை ஏற்றுக்கொண்ட உச்ச நீதிமன்றம் இவரை பிணையில் செல்ல அனுமதித்தது.

# நேபாளத்தில் தெரு நாய்க்கு மாதம் 4,500 ரூபா சம்பளம்



காத்மாண்டு, பெப். 04

நன்றி, விழிப்பான காவற்கடமை ஆகியவற்றிற்காக நேபாளத்தில் தெரு நாய் ஒன்றுக்கு மாதம் இலங்கை நாணயப்படி 4 ஆயிரத்து 500 ரூபா சம்பளம் வழங்கப்படுகிறது.

கிழக்கு நேபாளத்தின் ஜாபா மாவட்டத்திலுள்ள செஞ்சிலுவைச் சங்கக் கிளைக்கு, கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் ஒரு தெரு நாய் வந்தது. அதன் பின்னர் அது அதே வளாகத்தில் தங்கத் தொடங்கியது.

செஞ்சிலுவைச் சங்கக் கட்டடத்திலிருந்து அதை விரட்ட ஊழியர்கள் முயற்சி செய்தார்கள். அது பலிக்கவில்லை. இரவு நேரத்தில் கட்டட வாசலில் படுத்து, காவல் காக்கும் இந்நாய் ஊழியர்களைத் தவிர, வேறு எவரையும் வளாகத்துக்குள் நுழைய விடுவதில்லை.

இந்த நாய் கட்டட வாசலில் மாத்திரம் படுத்திருப்பதில்லை. இரவில் அடிக்கடி வளாகத்தையும் சுற்றி வருகிறது. இதை அவதானித்த சங்கத்தினர் நாயின் பராமரிப்புச் செலவுக்காக மாதம் 4 ஆயிரத்து 500 ரூபாவை செலவிட முடிவு செய்தனர்.

இதுகுறித்து, செஞ்சிலுவைச் சங்கக் கிளைத் தலைவர் பகதூர் புதாதோகி குறிப்பிடுகையில், ''இந் நாய் காட்டும் விசுவாசம், விழிப்பான காவற் கடமை ஆகியவற்றிற்காக மாதம் 4 ஆயிரத்து 500 ரூபாவை செலவிடவுள்ளோம். நாயின் உணவு, மருத்துவச் செலவு ஆகியவற்றிற்காக இது பயன்படுத்தப்படும்'' என்றார்.

செஞ்சிலுவைச் சங்கக் கிளையின் செயலாளர் லீலா குர்கைன் குறிப்பிடுகையில், '' அயராத காவலுக்காக இந்நாய்க்கு வழங்கப்படும் தொகையில் தினமும் இதற்கு சோறு, பால் அளிக்கப்படும். வாரத்துக்கு இரு தடவைகள் மாமிச உணவு வழங்கப்படும்'' என்றார்.

''ஓர் ஊழியர் விடுமுறையில் சென்றால் இந் நாய் கவலை அடைகிறது. அவர் விடுமுறையைக் கழித்துவிட்டு வந்ததும், அவரைச் சுற்றிச்சுற்றி ஓடி குரைத்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறது'' என்றும் அவர் குறிப்பிட்டார்.


## பல் வைத்திய நிலையம் & பல் கட்டுதல்

அதி நவீன இயந்திரங்களினால் பல் வைத்திய நிபுணரினால் பல் கட்டுதல், கிளிப் போடுதல், துப்புரவு செய்தல், பிடுங்குதல், அடைத்தல், பல்வேர் சிகிச்சை முறை மற்றும் வாய் சம்பந்தமான சகல நோய்களுக்கும் சிகிச்சையளிக்கப்படும்.

ஒவ்வொரு நாளும் சிகிச்சை நடைபெறுகின்றது.

கஜமுகன் மெடிகெயார் & டென்ரல் கெயார்,


மத்திய ம.வித்தியாலய வீதி, நெல்லியடி. 021 226 4875

(C/564617)


## மரண அறிவித்தல்

### இராமன் இராமசாமி - சங்கானை

(பரந்தன் வைத்தியர், வட்டக்கச்சி)



கம்பளை, கண்டியைப் பிறப்பிடமாகவும், மாவடி ஆலய வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட இராமன் இராமசாமி நேற்று (03.02.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெருமாள் இராமன் - ஒய்யம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னையா மற்றும் நல்லம்மா தம்பதிகளின் மருமகனும், யோகமலரின் (ஆயுர்வேத வைத்தியர்) அன்புக் கணவரும், நிலந்தினா, காலஞ்சென்ற சுமந்தினா மற்றும் கஜேந்திரன் (முதலாம் வருடம், மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அரவிந்தன், சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், இராமகிருஷ்ணன், இராஜேந்திரன், கணேசன், முனியாண்டி, கோவிந்தன், மருதை, மகேஸ்வரி, மங்களேஸ்வரி, இராஜலட்சுமி, கபாத்தி ஆகியோரின் சகோதரரும், கஜமுகவரதன், மணிமேகலா, வரதராஜன், நடனமலர், கோடிஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், மோகனாம்பிகை, சந்திரசேகரம், தயாநிதி, காலஞ்சென்ற தயாபரன் மற்றும் இராசகுமார் ஆகியோரின் சகலனும், வேணுஷனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2010) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவடி ஆலய வீதி,
சங்கானை.

(C/564618)

தகவல்:
மனைவி, மக்கள்.

## விபுலானந்தர் வீதியென பெயர் மாற்ற முடிவு

சண்டிலிப்பாய், பெப்.04

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு மேற்குப் புறமாக உள்ள கல்லூரி 'சுவாமி விபுலானந்தர் வீதி' என்று பெயர் மாற்றப்படவிருக்கிறது. இதற்கான ஒழுங்குகளை பழைய மாணவர் சங்கம் மேற்கொண்டுள்ளது.

மேற்படி கல்லூரி 1920 ஆம் ஆண்டில் இருந்து 1922 ஆம் ஆண்டு வரை அதிபராகக் கடமையாற்றி இருந்த சுவாமி விபுலானந்தரின் ஞாபகார்த்தமாக மேற்படி வீதிக்கு 'சுவாமி விபுலானந்தர் வீதி' என்று பெயர் சூட்டப்படவிருக்கிறது.

அண்மையில் நடைபெற்ற பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, வலி.தென்மேற்குப் பிரதேச சபை செயலாளருக்கு அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ஓ-15)

## பாடசாலைகளுக்கு சுத்திகரிப்பு உபகரணங்கள்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு 'யுனிசெப்' நிறுவனத்தினரால் பாடசாலை சுத்திகரிப்புக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உபகரணங்கள் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் வலயக்கல்வி அலுவலகத்தில் வைத்து விநியோகிக்கப்படும் எனவும் அதிபர்கள் தமது பாடசாலைகளுக்குரிய உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரமேகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ-207)


**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்.
A/L 2012
கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானப் பிரிவுகள்
★ நடாத்துபவர்: N.சதீசன்
★ Gr.1 முதல் O/L வரை
★ Gr.6 To 11 ENG. MED
★ Gr.10 & 11 ENG. LIT.
★ புலமைப் பரிசில்
(பரீட்சைகளுடன்)
★ I.C.T., G.I.T. (செயன்முறைகளுடன்)



## அபூர்வ ஜோதிடம்

நீரிழிவு, உயர் குருதியமுக்கம், இருதயத்தை அதிகம் பாதிக்கும் கொழுப்பு, வாதம், ஆஸ்மா நோய்களைப் பூரண குணமாக்கும் மருந்தியல்.
சனி, ஞாயிறு 8.30 - 2.00 Pm
தபால் பெட்டி லேன், ஆனைக்கோட்டை.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தசாமி இராசமணி



சங்கானையைச் சேர்ந்த திருமதி கந்தசாமி இராசமணி நேற்று (03.02.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா கந்தசாமியின் அன்பு மனைவியும், கிருஷ்ணராசாவின் (ராசா) அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான ரத்தினம், சின்னம்மா, தங்கராசா, தங்கரத்தினம் மற்றும் இராசதுரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2010) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கானை கூரைச்சி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிளாக் றோட்,
சங்கானை.

(94600)

தகவல்: கிருஷ்ணராசா
(ராசா - மகன்).

### முத்துக்குமாரு சோமசுந்தரம்

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், காளி கோயிலடி, நுணாவில் மத்தி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற தபால் ஊழியர் முத்துக்குமாரு சோமசுந்தரம் நேற்று (03.02.2010) புதன்கிழமை இரவு சிவபதமடைந்தார்.

அன்னார் லோகாம்பிகையின் அன்புக் கணவரும், முரளி (ஆசிரிய ஆலோசகர், பிலியந்தலை கல்வி வலயம்), கோகுலன் (ஆசிரியர், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), சுவேந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரி (ஆசிரியை, அம்பலாத்துவ முஸ்லிம் வித்தியாலயம்), சுபாஜினி (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், அரச முதியோர் இல்லம், கைதடி), பாக்கியராசா ஆகியோரின் மாமனாரும், சங்கமன், சங்கவி, பாரத், பிரதீப், புருஷோத்தமி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2010) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

தகவல்:
சோ.கோகுலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வலி.தென்மேற்கு பிரதேச சபை எரிபொருள் வழங்குவதால்

# டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளை ஒழித்துக்கட்டும் புகையூட்டல் மும்முரம்

சண்டிலிப்பாய், பெப்.04

டெங்கு நோயைப்பரப்பும் நுளம்புகளை அழிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுவரும் புகையூட்டல் பணிக்கு வலி. தென்மேற்குப் பிரதேசசபை எரிபொருளை வழங்க முன்வந்துள்ளது. அதைத் தொடர்ந்து இனம்காணப்பட்ட இடங்களில் எல்லாம் புகையூட்டும் பணி மும்முரமாக நடைபெற்றுவருகிறது.

குடாநாட்டில் என்றுமில்லாதவாறு டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்துக் காணப்படுவதால் இதுவரை இரண்டாயிரத்திற்கும் அதிகமான நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதுடன் 19பேர் மரணமடைந்தும் உள்ளனர்.

இந்த நோயைக்கட்டுப்படுத்தும் நோக்குடன் யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக தென்னிலங்கையிலிருந்தும், வவுனியாவிலிருந்தும் புகையூட்டும் சாதனங்கள் எடுத்து வரப்பட்டு புகையூட்டல் நடைபெற்று வருகிறது.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் மானிப்பாய், சுதுமலை, நவாலி உட்பட பல கிராமங்களில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருவதால் இப் பகுதிகளில் புகையூட்டும் வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. இந்தப் புகையூட்டும் சாதனங்களுக்குரிய எரிபொருளை வலி.தென்மேற்கு பிரதேசசபை வழங்கி வருவதனால் புகையூட்டும் பணி தடையின்றி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. (ஒ-115)

### மல்லாவி மகா வித்தியாலயத்திற்கு

# மாணவர்களின் வரவு 120 பேர் மட்டுமே ஆனால் 80 ஆசிரியர்கள் கடமையில்!

யாழ்ப்பாணம், பெப்.4

துணுக்காய் கல்வி வலயத்தைச் சேர்ந்த மல்லாவி மகா வித்தியாலயத்தில் மாணவர்கள் எண்ணிக்கை 120. அதே சமயம் அங்கு கடமைக்கு வரும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 80.

கடந்த முதலாம் திகதி கடமைக்குத் திரும்பிய வலய ஆசிரியர்கள் மல்லாவி மகா வித்தியாலயத்தில் கடமை புரியுமாறு பணிக்கப்பட்டனர்.

ஏற்கனவே அங்கு கடமை புரிந்த ஆசிரியர்களுடன் புதிதாகக் கடமைக்கு இணைந்து கொண்டவர்களையும் சேர்த்து மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 80 ஆகிவிட்டது.

ஆனால் மாணவர்களின் வரவு சராசரியாக 120 பேராகவே இருந்து வருகின்றதாம். (ஒ-207)

# கிளிநொச்சியில் 2,500 ஏக்கர்களில் நெற்செய்கை மேற்கொள்ள ஏற்பாடு

### விதைநெல், தெளிகருவிகள் இலவசமாக விநியோகம்

கிளிநொச்சி, பெப். 04

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள் குடியேறியோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 2,500 ஏக்கர்களில் நெற்செய்கையை மேற்கொள்ள விவசாயம் சார் திணைக்களங்கள் நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றன.

இதில் கரியாலை நாகபடுவான் குளத்தின் மூலம் 500 ஏக்கர்களிலும் இரணைமடுக் குளத்தின் மூலம் 2,000 ஏக்கர்களில் நெற்செய்கையை மேற்கொள்வதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக உணவு விவசாய நிறுவனத்தின் அனுசரணையுடன் விவசாயத் திணைக்களத்தினால் விதைநெல், தெளிகருவிகள் போன்றவை இலவசமாக வழங்கப்படவுள்ளன.

நேற்று பரந்தன் பகுதி விவசாயிகளுக்கு டி-5, டி - 7, டி - 8 விதைநெல், தெளிகருவிகள் பிரதிவிவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் உணவு விவசாய நிறுவனத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ஒ-400)

## சமத்துவமான உரிமைகளை...!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறுபத்தியிரண்டு வருடங்களுக்கு முன்னர் காலனித்துவ ஆட்சியாளர்களிடமிருந்து நாம் பெற்ற சுதந்திரம் இப்போது மிகவும் அர்த்தம் நிறைந்ததாகவுள்ளது. காரணம் எமது சுதந்திரத்தின் அரைவாசிக் காலப்பகுதியை ஆட்கொண்டு, எமது நாட்டின் இறைமைக்கும் ஆட்புல எல்லைக்கும் பாரிய அச்சுறுத்தலாக இருந்து வந்த பிரிவினைவாதப் பயங்கரவாதிகளிடமிருந்து நாம் முழுமையாக விடுதலை பெற்றுள்ளோம்.

**நாட்டுப் பற்றை வெளிப்படுத்திய எல்லோருக்கு நன்றி**

சுதந்திரப் போராட்டத்தில் மகத்தான பங்களிப்புக்களை வழங்கிய நாட்டுப்பற்றுடையவர்களை நாம் எவ்வளவு நன்றியுடன் நினைவுகூருகின்றோமோ அதே போன்று பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் பல்வேறு தியாகங்களைச் செய்த எமது வீரமிக்க படையினருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் இன்னும் முழு நாட்டிலும் சுதந்திரத்தையும் சமாதானத்தையும் மீளக்கட்டியெழுப்பும் இந்தப் போராட்டத்தில் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் நாட்டுப்பற்றை வெளிப்படுத்தி நின்ற எல்லா மக்களுக்கும் முழு அளவில் நன்றி கூறுவது பொருத்தமானதாகும்.

நாட்டுக்குள் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடிய அதேவேளை, பயங்கரவாதத்தை ஓர் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தியவர்களது நோக்கங்களுக்கு ஏற்றவகையில் எம் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வந்த வெளிச் சக்திகளை எதிர்த்து நிற்பதிலும் தமது தைரியத்தை வெளிப்படுத்தி நின்ற எல்லா மக்களுக்கும் குறிப்பாக எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**உண்மையான சுதந்திரத்தைப்பெற உதவிய நட்பு நாடுகளுக்கு நன்றி**

நாம் மேற்கொண்டுவந்த போராட்டத்தின் உண்மைத் தன்மையைப் புரிந்து கொண்டு, எமது நாட்டுக்கும் எமது மக்களுக்கும் உண்மையான சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுக்கும் எமது நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு எல்லா வழிகளிலும் உதவிய எமது நட்பு நாடுகளுக்கும் நாம் இச்சந்தர்ப்பத்தில் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது நாட்டில் சமாதானத்துக்கான புதியதோர் யுகத்தில் காலடி எடுத்துவைக்கும் நாம் எதிர்காலத்தின் சவால்களுக்கு முகங்கொடுக்கத் தயாராகவுள்ளோம். தேசிய நல்லிணக்க இலக்குகளுக்கும், நாட்டில் வாழும் எல்லா மக்கள் பிரிவினைகளிடையேயும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும், அதேபோன்று தேசங்களுக்கு மத்தியில் எமக்கான சரியான இடத்தைப் பெற்றுத்தரவல்ல அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் நாம் சமமான முக்கியத்துவத்தை வழங்குவது அவசியமாகும்.

சமாதானத்தின் விளைவுகளை, பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தின் மத்தியிலும்கூட கைவிடப்படாத அபிவிருத்தி அம்சங்களையும், மின்சார, சக்தி வலு துறைகளில் ஆரம்பிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களினூடாகவும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளின் ஊடாகவும் ஏற்கனவே காணக்கூடியதாகவுள்ளது.

**சமத்துவமான உதவிகளை எல்லோரும் அனுபவிக்கக்கூடிய நாட்டைக் கட்டியெழுப்புவோம்**

கடந்த காலத்தில் எமது முன்னோர்களும் அண்மைக்கால வரலாற்றில் சுதந்திரப் போராட்டத் தலைவர்களும் செய்து காட்டியமை போன்று நாம் எல்லோரும் இனம், சமயம், அரசியல் வேறுபாடுகளை எல்லாம் மறந்து சுதந்திரத்தினதும், அபிவிருத்தியினதும் முழுமையான நன்மைகளையும் ஒரு ஜனநாயக சமூகத்தில் சமத்துவமான உரிமைகளையும் எல்லோரும் சமமாக அனுபவிக்கவும் முடியுமான ஓர் ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக எம்மை அர்ப்பணிப்போம்.

நீங்கள் தற்போது எங்களுக்கு வழங்கியுள்ள பலமான இந்த மக்கள் ஆணை இலங்கைத் தேசம் எமது கலாசாரப் பாரம்பரியத்தின் முக்கிய அம்சமான மனித உரிமைகளுக்கு முன்னுரிமையளிக்கும் தேசமாகவும், எமது பிராந்தியத்தில் பொருளாதார கேந்திர நிலையமாகவும் திகழும் வகையில் புதியதோர் இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு எமக்கு மிகுந்த பலத்தைத் தந்துள்ளது.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுதந்திர தினக் கொண்டாட்டத்தின்போது, ஆசியாவிலேயே மிகவும் பழைமை வாய்ந்த ஜனநாயக தேசம் என்ற வகையில் எமது தேசம் பேணிப் பாதுகாத்துவரும் சமாதானம், சகிப்புத்தன்மை, பரஸ்பர நம்பிக்கை மற்றும் முன்னேற்றம் ஆகிய ஜனநாயகப் பாரம்பரியங்களுக்காக நாம் எம்மை மீளவும் அர்ப்பணிப்போம்.

உங்கள் வளமான எதிர்காலத்திற்கு எனது வாழ்த்துக்கள்.

எமது தேசத்திற்கு மும்மணிகளின் ஆசி கிட்டுவதாகுக - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## சாவகச்சேரி நக...

## புதிய நகர மண்ட...

யாழ்ப்பாணம், பெ...

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் புதி... மண்டபம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தம... காணியில் புதிய மண்டபம் அமைப்பத... கான ஏற்பாடுகளை சாவகச்சேரி நகரசபை... யினர் மேற்கொண்டுவருகின்றனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் உள்ளூராட்சி திணைக்களத்தினால் நகரமண்டபம் நிர்மாணிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

## நல்லூர் ஆலயச் சூழலில் கால் நடைகளால் அசௌகரியம்

யாழ்ப்பாணம், பெப்.4

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயச் சூழலில் சுதந்திரமாகத்திரியும் கால்நடைகளால் பக்தர்களுக்கு பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது.

நல்லூர் ஆலய வெளி வீதியில் நாய், ஆடு, மாடு என பல கால்நடைகள் கட்டாக்காலிகளாக நடமாடி வருகின்றன.

இதனால் ஆலய வழிகாடுக்காக வரும் பக்தர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (50-14)

## தினமும் 3 தடவைகள் குமுதினிப் படகுச் சேவை

யாழ்ப்பாணம், பெப்.4

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையில் குமுதினிப் படகுச்சேவை தினமும் மூன்று தடவைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படகுச்சேவை தினமும் காலை 7 மணிக்கு ஆரம்பமாவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (50-224)

## அறநெறிப் பாடசாலைக்கு புதிய மாணவர் சேர்ப்பு

யாழ்ப்பாணம், பெப்.4

புத்தூர் கிழக்கு, கன்னியர் வைரவர் அறநெறிப் பாடசாலையில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் நிகழ்வு எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இந்த அறநெறிப் பாடசாலைகளில் சேர்த்து சைவசமய அறநெறியைக் கடைப்பிடிக்க வழிகாட்டுமாறு அதிபர் செ.கந்தசத்தியதாசன் கேட்டுக் கொள்ளுகின்றார். (ஒ)

# மனைவி, மைத்துனி, மாமியார் மூவரையும் அடித்துக் கொன்ற முன்னாள் படைச் சிப்பாய்

### அநுராதபுரம் பகுதியில் கொடூரம்

அநுராதபுரம், பெப். 04

அநுராதபுரம், நெலும்குளம், ஞானிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் தனது மனைவியையும், மாமியாரையும், மைத்துனியையும் இரும்புக் கம்பியால் அடித்துக் கொலை செய்தார் என்று கருதப்படும் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என அநுராதபுரத் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.கே.ஞானசேன தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் அவர்களது உறவினர் ஒருவரும் படுகாயமடைந்துள்ளார். அவர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்றும் கூறப்பட்டது.

இச்சம்பவம் ஞானிக்குளம், உப தபாலகத்திற்கு அருகிலுள்ள அக்குடும்பத்தவர்களது வியாபார நிலையத்திலேயே இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரம், நெலும்குளம் பகுதியைச் சேர்ந்த ரீ.பி.பத்மினி, ரீ.பி.அனுலாவதி, சக்கீலா ஹங்சமாலி ஆகியோரே இவ்வாறு கொலைசெய்யப்பட்டவர்களாவர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் முன்னாள் இராணுவச் சிப்பாய் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த அநுராதபுரப் பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்து வருகின் றனர். (அ-சி)

## துரதிர்ஷ்டமான யுகத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கை விடுபட்டு சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்ட தினத்தை அன்றுதொட்டு நாம் கொண்டாடி வருகிறோம். இன்று அதனது 62 ஆவது வருட விழாவாகும். அறுபத்தி இரண்டு வருடகால முடிவின் பின்னர் இந்நாட்டின் ஜனநாயகப் பெறுமானங்களுக்குக் கிடைத்துள்ள நன்மதிப்பு என்ன என்பதை நோக்குமிடத்து, இதற்கு எவ்வாறான ஒரு தன்மை கிடைக்கப்பெற்றுள்ளது என்பது நன்கு தெளிவாகின்றது.

ஜனநாயகத்தின் கருப்பொருளாகக் கருதப்படும் சிந்திக்கும் உரிமை, எழுத்துச் சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், ஊடக சுதந்திரம் என்பன இன்று இலங்கை வாழ் மக்களிடமிருந்து தூரமாக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் நோக்குமிடத்து சுதந்திரத்துடன் பெற்றுக் கொள்ளப்பட்ட ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டுள்ள ஒரு காலகட்டத்திற்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்பது தெளி வான விடயமல்லவா?

மக்களுக்குப் பட்டினியும், நோயாளர்களுக்குத் தரம் குறைந்த சுகாதார வசதியும், பாடசாலை மாணவர்களுக்குச் சீரற்ற கல்விச் சேவையும், சமூகத்தில் அநீதியும், அவநம்பிக்கையும் ஈடேற்றப்பட்டு, ஏகாதிபத்திய ஆட்சி அரங்கேற்றம் பெற்றுள்ள துரதிர்ஷ்டவசமான யுகத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டியதே இன்றைய தினத்தில் எனதும், உங்களதும் பிரார்த்தனையாக அமையவேண்டும்.

ஏகாதிபத்திய ஆட்சி, சமூக அநீதியை இல்லாதொழித்து ஜனநாயத்தையும், சமூக நீதியையும் நிலைநாட்ட அணிதிரள்வோம் - என்று அவர் தெரிவித்துள்ளார்.(அ-சி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ...ரிகை ஆசிரியருக்குத் தொலைபேசி மிரட்டல்;
## ...ழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் கண்டனம்

..., 'சுடர் ஒளி' பத்திரிகைகளின் ஆசி... வித்தியாதரனுக்கு தமிழ் நாடா... உறுப்பினர் ஒருவர் கொலை அச்சு... விடுத்திருப்பதையிட்டு இலங்கை ... ஊடகவியலாளர் ஒன்றியம் தனது ...யான கண்டனத்தைத் தெரிவித்துள் ...ன், ஊடக சுதந்திரத்துக்கு விடுக்கப் ...ள்ள மற்றொரு அச்சுறுத்தலாகவும் இத ... வர்ணித்திருக்கின்றது.

...து தொடர்பாக இலங்கை தமிழ் ஊடக ...ளர் ஒன்றியம் புதன்கிழமை வெளி ...ள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக் ...டிருப்பவை வருமாறு:-

...தயன்', 'சுடர்ஒளி' ஆசிரியர் என்.வித்தி ...னுடன் நேற்று புதன்கிழமை தொலை ...சி மூலமாகத் தொடர்புகொண்ட வன்னி ...ாவட்ட தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், தன்னைப் பற்றிய செய்திகள் எதனையும் பத்திரிகையில் பிரசுரிக்கக்கூடாது என கடுமையாக அச்சுறுத்தியுள்ளார். இதற்குப் பதிலளித்த வித்தியாதரன், ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் - மக்களின் பிரதிநிதியாக கிஷோர் சிவநாதன் இருப்பதால் அவர் பற்றிய செய்திகள் வெளிவருவதைத் தடுக்க முடியாது எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த கிஷோர், உன்னைக் கொன்றிருக்க வேண்டும் என வித்தியாதரன் மீது கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளார். உங்களுடைய தொலைபேசி உரையாடல்கள் அனைத்தும் பதிவு செய்யப்படுகின்றது என வித்தியாதரன் தெரிவித்ததையடுத்து தொலைபேசி அழைப்பை கிஷோர் உடனடியாகத் துண்டித்துக்கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்களின் பிரதிநிதியாக - நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளவர்கள் பற்றிய செய்திகள், விமர்சனங்களை வெளியிடுவதற்கு எந்தவொரு ஊடகமும் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் அனுமதியைக் கோர வேண்டிய அவசியம் இல்லை என்பதுடன், அவ்வாறான செய்திகளை வெளியிடக்கூடாது எனத் தடுப்பதற்கும் அவர்களுக்கு உரிமை இல்லை என்பதையும் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

இவ்வாறு செய்திகளை வெளியிடக் கூடாது எனத் தடுக்க முற்படுவது தகவல்களை அறிந்துகொள்வதற்காக மக்களுக்குரிய சுதந்திரத்தையும் உரிமையையும் மீறும் ஒரு செயற்பாடாக இருக்கும் என்பதும் சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அதேவேளையில் - கொலை அச்சுறுத்தல்களின் மூலம் ஊடகங்களைப் பணியச் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் கண்டிக்கப்பட வேண்டியவையாகும்.

அந்த வகையில் ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள கிஷோர் சிவநாதன் 'உதயன்' மற்றும் 'சுடர்ஒளி' ஆசிரியருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்திருப்பதையிட்டு இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் தன்னுடைய கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது. ஊடகங்களுக்குள்ள சுதந்திரத்தையும், தகவல்களை அறிந்துகொள்வதற்காக மக்களுக்குள்ள உரிமைகளையும் புரிந்துகொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட வேண்டும் எனவும் ஒன்றியம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றது. - என்று உள்ளது.

(அ-சி)

## 62 ஆவது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு நிமிட அஞ்சலி செலுத்துதல், 21 மரியாதை வேட்டுக்கள் தீர்த்தல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும்.

இதன் பின்னர் 9.15 மணியளவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு சுதந்திர தின உரையாற்றுவார்.

இதனைத் தொடர்ந்து இராணுவ அணிவகுப்பு நிகழ்வுகளும் காலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

கண்டி தலதா மாளிகையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் சுமார் இரண்டாயிரம் சிறப்பு விருந்தினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன் காரணமாக இப்பகுதி உயர்பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சுதந்திர தினத்தை முன்னிட்டு கண்டியில் பாதுகாப்பு நடவடிக்கைகளும் பலப்படுத்தப்பட் டுள்ளன.

சுமார் பத்தாயிரம் பொலிஸாரும், இராணுவத்தினரும், அங்கு விசேட பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பலத்த சோதனை நடவடிக்கைகளும் அங்கு இடம்பெறுகின்றன.' (அ-சி)

## 'சக்தி' ரங்காவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றமையை அடுத்து இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தில் ஸ்ரீரங்காவின் பாதுகாவலர்களில் ஒருவரான ஜானக நந்தசேகர என்பவர் காயமடைந்து ஹற்றன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தின்போது நிலைமையைக் கட்டுப்படுத்துவதற் காக ஸ்ரீரங்காவின் பாதுகாவலர்கள் ஆகாயத்தை நோக்கித்துப் பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனையடுத்து குழப்பத்தில் ஈடுபட்டவர்கள் தப்பியோடினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இத்தாக்குதல் சம்பவத்தில் தொடர்புடைய வர்கள் கைதுசெய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண் டும் என மலையக மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதியமைச்சருமான பெ.இராதாகிருஷ்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

''இத்தாக்குதல் சம்பவத்தின்போது ஹற்றன் நகரசபைத் தலைவர் நந்தகுமாரும் இருந்தார் என செய்தி மூலம் கேள்விப்பட்டிருக்கிறேன். ''யார் இதில் ஈடுபட்டி ருந்தாலும் அரசு உடனடியாக அவர்களைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்தவேண் டும். இது அரசின் கடமையாகும்'' - இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

## உதயன்,.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

024 - 2222068 என்ற வவுனியா தொலைபேசி இலக்கத்திலிருந்து 'சுடர் ஒளி' கொழும்பு அலுவலகத்துடன் தொடர்புகொண்ட சிவ நாதன் கிஷோர், ஆசிரியர் வித்தியாதரனை விசாரித்துள்ளார். அச் சமயம் அவர் ஆசிரிய பீடத்தில் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டதும், தமக்கு எதிராக 'உதயன்', 'சுடர் ஒளி'யில் விமர்சனச் செய்திகள் பிரசுரிக்கக்கூடாது என்ற தொனியில் ஆசிரிய பீட உறுப்பினருக்கு அவர் அறிவுறுத்தியிருக்கின்றார்.

தாம் எதையும் பகிரங்கமாகவே செய்பவர் என்றும், மற்றவர்களைப் போல எதையும் ஒளித்துக்கொண்டு போய் அரசுடன் சேர்ந்து செய்பவரல்லர் என்றும் அவர் குறிப்பிட்டார். தம்மைப் பற்றிச் செய்தி வெளியிடுவதை நிறுத்தும்படியும் இறுக்கமான தொனியில் அவர் கூறினார். எந்த விடயம் குறித்தும் அலுவலகத் துக்கு வந்த ஆசிரியர் பின்னர் அவரிடம் கூறும்படி ஆசிரிய பீட பணியாளர் அவருக்குத் தெரிவித்தார்.

மீண்டும் மாலை 5.13 மணியளவில் 024 -2222706 இலக்கத் தொலைபேசியில் இருந்து அவர் தொடர்புகொண்டார்.

அவரது கோரிக்கையின்படி ஆசிரியர் வித்தியாதரனுக்கு அவரது இணைப்பு கொடுக்கப்பட்டது.

தம்மைப்பற்றிய செய்திகள் தருபவர் யார், தன்னைப்பற்றி செய்திகளை தனது முன் அனுமதியின்றி வெளியிடக்கூடாது என்ற கடுந் தொனிப் பீடிகையுடன் உரையாடலை ஆரம்பித்தார் கிஷோர் எம்.பி.

''பகிரங்கப் பொது வாழ்வுக்கு வந்தவர்கள் குறித்து செய்தி வெளியிடுவதற்கு யாரிடமும் அனுமதி பெறத் தேவையில்லை. மக்களின் வாக்குகளைப் பெற்று மக்கள் பிரதிநிதிகள் என்ற பெய ரில் செயற்படுவோர் பற்றிய செய்திகள், தகவல்கள் வெளியிடு வதற்கு யாரிடமும் அனுமதி பெறுவது அவசியமல்ல. அதைத் தடுப் பதற்கு உங்களுக்கு அதிகாரமும் இல்லை; உரிமையுமில்லை. செய்திகள் தவறாக இருந்தால் என்ன நடவடிக்கை எடுக்க முடி யுமோ அதைச் செய்யுங்கள்'' - என்று பதிலளித்தார் ஆசிரியர்.

அதற்கு ''உன்னைக் கொலை செய்யச் செய்திருக்க வேண் டும். கொல்லுவதற்கு ........'' என்று அவர் மிரட்டும் தொனியில் பேச்சைத் தொடர்ந்தும், ''தொலைபேசி உரையாடல் தொடர்ந்து பதிவு செய்யப்படுகின்றது. உங்களுக்கு விரும்பிய மிரட்டலை எல்லாம் கூறுங்கள்'' - என்றார் ஆசிரியர்.

அவ்வளவுதான். தொலைபேசி இணைப்பு உடனே சட்டென்று துண்டிக்கப்பட்டது. இந்த மிரட்டல் குறித்து உரிய தரப்புகளிடம் முறைப்பாடு செய்ய 'உதயன்', 'சுடர் ஒளி' நிர்வாகம் முடிவு செய்திருக்கின்றது.

## செங்கல்பட்டு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாம்வாசிகள் தங்களை விடுதலை செய்யவோ அல்லது நீதிமன்றத்தில் நிறுத் தவோ வலியுறுத்தியும், நீதி வழங்கக் கோரியும் அவ்வப்போது உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் ரமணா (வயது - 33), முகமது ரக்சன் (வயது - 24) மற்றும் சேகர் (வயது - 27) ஆகியோர் முகாமில் உள்ள மரத்தின் மீது ஏறிக் கொண்டும், மற்ற முகாம்வாசிகள் கீழே தரையில் அமர்ந்தும் தங்களது கோரிக்கையை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்தனர். மாலை நேரமாகியும் உண்ணாவிரதத்தைக் கைவிட அவர்கள் மறுத்துவிட்டனர். கியூ பிரிவு உயர் அதிகாரிகள் தங்களை நேரில் சந்தித்து உறுதிமொழி அளிக்க வேண்டும் என அவர்கள் தெரிவித்து வந்தனர். உயர் அதிகாரிகள் இவர்களது கோரிக்கைகளுக் குச் செவி சாய்க்காததால், இரவாகியும் போராட்டத்தைக் கைவிட அவர்கள் மறுத்துவிட்டனர்.

இரவு 9.30 மணிக்கு திடீரென நான்கு பட்டாலியன் அதிரடிப் பொலிஸார் ஆயுதங்களுடன் செங்கல்பட்டு சிறப்பு முகாமிற் குள் நுழைந்து, அங்கு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அனைத்து முகாம்வாசிகள் மீது கண்மூடித்தனமான தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று கூறப் பட்டது.

மரத்திலிருந்தவர்கள் கீழே கொண்டு வரப்பட்டு நையப்புடைக்கப்பட்டனர். பயங்கரத் தாக்குதலால், பல முகாம் வாசிகள் படுகாயப்படுத்தப்பட்டனர். இதில் மூன்றுபேர் உயிருக்குப் போராடும் நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதிரடிப் படையினர் முகாம்வாசிகளை அடித்தோடு, முகாம்வாசிகளின் பயன்பாட்டிற்கு அறைகளில் வைக்கப்பட்டிருந்த அரிசி, பருப்பு முதலிய பொருள்களையும், துணி வகைகளையும் நடுகூடத்திற்குக் கொண்டுவந்து போட்டு எரித்துள்ளனர். அத்தோடு இரவோடு இரவாக 12 இற்கும் மேற்பட்ட முகாம்வாசிகளை சென்னை புழல் சிறைச்சாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

முகாமில் தற்போது உள்ள 16 முகாம் வாசிகளுக்குத் தண்ணீர் கொடுக்கக்கூட முடியாத நிலை நிலவி வருகிறது. தற்போது வெளித் தொடர்புகள் அற்ற நிலையில், செங்கல்பட்டு சிறப்பு முகாம்வாசிகளின் உறவினர்கள் கவலையடைந்துள்ளனர். (அ-சி)

## 94 அகதிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறிஸ்மஸ் தீவிலிருந்து வெளியேறியிருக்கின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## தேர்தலும் வாக்கு எண்ணுதலும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் மட்டுமே என்னால் திருப்திப்பட முடியாது. ஆனால், வாக்களிப்பும் வாக்கெண்ணும் பணிகளும் நீதியாகவும், நேர்மையாகவுமே இடம்பெற்றன.

பிரசாரக் காலத்தில் நாடெங்கிலும் காட்சிப்படுத்தப்பட்ட சுவரொட்டிகள் மற்றும் 'கட்- அவுட்'களை இரண்டு கிழமைகளுக்குள் நான் பொலிஸாரின் உதவியுடன் நீக்கினேன். நீக்கிய பின்னர் சில இடங்களில் மீண்டும் அவை காட்சிப்படுத்தப்பட்டன. இது தொடர்பில் என்னால் திருப்தியடைய முடியாது.

**யாழ்ப்பாணத்தில் அதிகமானோர் வாக்களிக்காமல் விட்டதற்கு....**

வாக்களிப்பின் போது எதுவித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை. யாழ்ப்பாணத்தில் அதிகமானவர்கள் வாக்களிக் காமல் விட்டதற்குக் காரணங்கள் சில உள்ளன.

யாழ். மாவட்டத்தில் 7 லட்சத்து 26 ஆயிரம் வாக்காளர்கள் பதியப்பட்டுள்ள னர். ஆனால், அவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தில் இல்லை. பலர் இந்நாட்டின் வேறு இடங்களில் வாழ்கின்றனர். இன்னும் பலர் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டனர். வாக்காளர் பட்டியலில் பதியப்பட்டுள்ள எணிக்கைக்கு ஏற்ப யாழ்ப்பாணத்தில் மக்கள் இல்லை. இதுவே அங்கு வாக்களிப்பு குறைவாக இடம்பெற்றமைக்குக் காரணம்.

யாழ்ப்பாணத்தில் தற்போது உள்ளவர்களின் சரியான எண்ணிக்கையைப் பெறுவதாக இருந்தால் அங்கு வீடு வீடாகச் சென்று மக்களின் விவரங்களைத் திரட்ட வேண்டும். அல்லது நாடாளுமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதேபோல், வன்னி அகதிகள் வாக்களிக்கச் செல்வதற்கு வாகன ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்று வாக்களிப்பு தினத்தன்று காலையில் முறைப்பாடு செய்யப்பட்டது. பின்னர் வாகன ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன.

இவற்றைத் தவிர வாக்களிப்பின் போது எந்தவிதமான சிக்கல்களும் ஏற்பட வில்லை. மிகவும் திருப்திகரமாகவே வாக்களிப்பு இடம்பெற்றது.

வாக்குகள் எண்ணும்போது எதுவித மோசடியும் இடம்பெறவில்லை. தேர்தல் முடிவுகளை கணனிமயப்படுத்துவதற்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் உதவிகள் பெறப்பட்டன. அந்தக் குழுவின் மீது எனக்கு அதிக நம்பிக்கை உண்டு.

ஆனால் கணனிமயப்படுத்தலுக்குத் தனியாரின் உதவி பெறப்பட்டது என்று கூறப்படுவது முற்றிலும் பொய். எனது கையெழுத்துடனேயே தேர்தல் முடிவுகள் ஊடகங்கள் வாயிலாக அறிவிக்கப்பட்டன.

**தடுத்துவைக்கப்பட்டிருந்தேன் என்ற வதந்தி பொய்யானது**

வாக்குகள் எண்ணப்பட்டபோது நான் துப்பாக்கி முனையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தேன் என்றும், நான் வாகன விபத்தில் சிக்கி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தேன் என்றும் எனது மகன் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பல்வேறு வகையான வதந்திகள் பரவின.

நான் இப்படியானதொரு வதந்தியை எந்தத் தேர்தலிலும் பார்த்ததில்லை. நான் தேர்தல் செயலகத்தில் இருக்கின்றேனா என்று பார்ப்பதற்காக வாக்குகள் எண்ணப்பட்டுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அதிகாலை நான்கு மணியளவில் சில அரசியல் வாதிகள் செயலகத்திற்கு வந்தனர்.

இந்த வதந்திகளையும் வாக்கெண்ணும்போது மோசடிகள் இடம்பெற்றன என்பதையும் நான் முற்றாக மறுக்கின்றேன். வாக்கெண்ணும்போது வேட்பாளர்களுக்குத் திருப்தி இல்லை என்றால், அப்போது இரண்டு தடவைகள் மீண்டும் அச்சந்தர்ப் பத்தில் எண்ணலாம். ஆனால், இப்போது வாக்குகளை மீள எண்ண வேண்டுமென்றால் உயர்நீதிமன்றம் உத்தரவிடவேண்டும். அவ்வாறு உத்தரவிட்டால் மீள எண்ணுவதற்கு நாம் தயாராக இருக்கிறோம் - என்றார். (அ-சி)

(3 ஆம் பக்கமும் பார்க்க)


ENGLISH

SPOKEN WITH GRAMMAR

A.BRITTO

புதிய பிரிவு ஆரம்பம்: 06.02.2010

இடம் : பிரம்படி லேன், கொக்குவில்.

(கிராம சேவையாளர் அலுவலகம் முன்னால்)

நேரம் : சனி காலை 6.30

வகுப்புக்கள் : சனி/திங்கள் காலை 6.30


## மரண அறிவித்தல்கள்

### முத்துக்குமாரு பூலோகம்

[ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், மீன்பிடி திணைக்களம்]



பத்தானை, தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், மூளாயை வதிவிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு பூலோகம் நேற்று (03.02.2010) இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு -நாகமுத்து தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற கனகமணியின் அன்புக் கணவரும், நவரத்தினராசா (இந்தியா), சிவராசா (கனடா), நடராசா (ஜேர்மனி), யோகராசா (கனடா) ஆகியோரின் தந்தையும், மகேஸ்வரி, மனோன்மணி, பாலசிங்கம் ஆகியோரின் மூத்த சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சென்னை 87இல் இன்று (04.02.2010) நடைபெறும்.

*சென்னை 87,*
*தொ.பே.இல 00914424867639*

தகவல்:
நவரத்தினராசா (மகன்).

### தம்பையா சின்னத்துரை



பாலாவி தெற்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், பெரியமாவடி, சங்கத்தானையைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட தம்பையா சின்னத்துரை (02.02.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கமுத்துவின் அன்புக் கணவரும், துரைசிங்கம் (முன்னாள் கிராம சேவகர்), தனபாலசிங்கம் (சின்னண்ணை), இரத்தினசிங்கம் (குஞ்சுக்கிளி), சுசிலாதேவி (ஆசிரியர், யா/கச்சாய் அ.த.க பாடசாலை), சேந்தி, குணம், வசந்தன், ரகு ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தலீலா, புவி, தவமலர், ஜெகநாதன் (ராசு), சாந்தி,பாமா, றஜி, பிரதீபா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2010) வியாழக்கிழமை பி.ப 2.30 மணியளவில் மேற்படி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கச்சாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரியமாவடி,*
*சங்கத்தானை.*
T.P: 0774671547

(C/564615)

தகவல்: அஜிதா, சுஜிதா
(பேரப்பிள்ளைகள்)
(யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் [illegible] கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.02.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.